பக்கங்கள் 20
20/=
Regi... s a Newspaper in Srilanka

# எதிரொலி
## Ethiroli

03-09 ஜூலை 2019
வாரஇதழ்



## முஸ்லிம்களை பயங்கரவாதிகளாக சித்திரிப்பது தவறு!

கொந்தளிக்கிறார் ரிஷாட் பதியூதீன்

# மரணத்தின் வழியில்...

## கலங்கடிக்கும் காவிகள்!

# கலங்கடிக்கும் 'காவிகள்'!



*"தவறான விதத்தில் பிடிக்கும் பொழுது ஒரு புல்லின் இதழ் எவ்வாறு ஒருவரின் கையில் வெட்டுக்காயத்தை ஏற்படுத்துகின்றதோ, அதே விதத்தில் துறவிகள் தமது துறவு நிலையை தவறான விதத்தில் முன்னெடுக்கும் பொழுது அது ஒருவரை நரகத்திற்கு இழுத்துச் செல் கின்றது."*

**-தம்மபதம் - நிராய வக்க**

2014 அளுத்கம கலவரத்துக்குச் சற்று முன்னர் வன் மத்தையும், வன்முறையையும் தூண்டும் புத்த துறவியான கலகொட அத்தே ஞானசார தேரர் 'அப சரணய்' என்ற சொற்பிரயோகத்தைப் புதிதாகப் பயன்படுத்தினார். அது புத்த மதத்தின் போதனைகளுக்கு முற்றிலும் மாறு பட்ட விதத்தில், அப்பட்டமான வெறுப்பை தூண்டும் ஒரு போர்க் குரலாக ஒலித்தது.

இப்பொழுது அதி சங்கைக்குரிய அஸ்கிரிய பீடத் தின் மகாநாயக்க தேரர் 'அப சரணய்' என்ற அந்த எண் ணக்கருவை அதன் தர்க்கரீதியான முடிவுக்கு இட்டுச் செல்லும் விதத்தில் கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். சமீபத்தில் நிகழ்த்திய பிரசங்கமொன்றின் போது, முஸ் லிம்களுக்குச் சொந்தமான வியாபார நிலையங்களை பகிஷ்கரிக்க வேண்டுமென அவர் மக்களிடம் கேட்டுக் கொண்டதுடன், மாத்தளையில் தொழில் புரியும் வைத் தியர் ஒருவர் ஆயிரக்கணக்கான சிங்கள பௌத்த குழந் தைகளை நிர்மூலமாக்கி வருகின்றார் என்ற ஒரு போலி யான செய்தியையும் பரப்பியிருந்தார். மேலும், நாட் டில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளது என்று குறிப்பிட் டிருக்கும் அவர், தான் தேசத் துரோகிகள் எனக் கருதும் இலங்கை முஸ்லிம்களை கல்லால் அடித்துக் கொல் வதனையும் மறைமுகமாக ஆதரித்துப் பேசியுள்ளார்.

அத்தகைய விதத்தில் கடும் வன்மத்தைத் தூண்டும் ஒரு உரையை நிகழ்த்தி விட்டு, மதத் தலைவர் ஒருவர் தப்பித்துக் கொள்ளக்கூடிய வேறு இடங்கள் உலகில் இருக்குமாயின், அவை சமயத் தலைவர்களின் ஆட்சி இடம்பெற்று வரும் சவூதி அரேபியா மற்றும் ஈரான் ஆகிய நாடுகளாக மட்டுமே இருந்து வருகின்றன. நாக ரீகமடைந்த எந்தவொரு நாட்டிலும் இந்த வகையான கூற்றுக்கள் நாலாபக்கங்களிருந்தும் மிகக் கடுமையான கண்டனங்களை எதிர்கொண்டிருக்க முடியும். அத்தகைய கருத்துக்களை முன்வைத்திருக்கும் நபர் ஆகக் குறைந் தது பொது மக்களின் கடும் நிந்தனையை எதிர்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கும். இலங்கையில் மங்கள சமரவீரவை தவிர, எந்தவொரு அரசியல்வாதியும் இந்த உரையைக் கண்டிக்கும் விதத்தில் வாயைக் கூட திறந்திருக்கவில்லை. இந்த மௌனம், பல இலட்சக்கணக் கான சொற்களிலும் பார்க்க வலிமையானதாக இருந்து வருவதுடன், அது வன்முறை மற்றும் சகிப்புத் தன் மையற்ற தீவிரவாதம் என்பவற்றின் அனைத்து வடிவங்க ளுக்குமான எண்ணற்ற கதவுகளை திறந்து விடுகின்றது.

ஒரு சில மாதங்களுக்கு முன்னர் இதே மகாநாயக்க தேரரின் இரண்டாம் நிலை தேரர் ஒருவர், ஒரு ஹிட் லரைப் போலவாவது செயற்பட்டு நாட்டைக் கட்டி யெழுப்ப முன்வர வேண்டுமென கோத்தபாய ராஜபக்ஷ விடம் வேண்டுகோள் விடுத்திருந்தார்.

இந்தக் கருத்துக்களை ஒன்றாக எடுத்து நோக்கும் பொழுது, இலங்கையில் புத்த மதத்தைப் பீடித்திருக்கும் ஓர் இனம் புரியாத வியாதியை அது பிரதிபலித்துக் காட்டுவதனை அவதானிக்க முடிகிறது. இலங்கையின் சமூக வாழ்க்கையில் புத்த பிக்குகள் வகித்து வரும் முதன் மையான வகிபங்கின் பின்புலத்தில், இந்த வியாதி நாட் டின் அரசியலிலும், பரந்த சமூகத்திலும் மிகப் பாரதூ ரமான பின்விளைவுகளை எடுத்து வர முடியும் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. புத்த பெருமானின் போதனைகள், மத குருமார் மற்றும் சாதாரண பிரஜை கள் ஆகியோரைக் கொண்ட தீவிரவாதிகளின் குழு வொன்றினால் கடத்திச் செல்லப்பட்டு, உருக்குலைக் கப்பட்டிருப்பதுடன், அந்தக் குழுவினர் சகிப்புத்தன் மையற்ற நிலை மற்றும் வன்முறை என்பவற்றை ஒரு புண்ணிய காரியமாக நியாயப்படுத்தி வருகின்றனர். இவ் விதம் அவர்கள் இலங்கையில் தன்னிச்சையான விதத் தில் தமது கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு இடமளிக்கப்பட்டால், எமது நாடு வெகு விரைவில் காவி - ஸலாபிசவாதத்தின் கடும் பிடிக்குள் சிக்குண்டு, மூச்சுத் திணற முடியும். இதோ, இப்பொழுது அதற்கு எதிராக நாங்கள் எல்லோரும் குரல் எழுப்ப வேண்டிய தருணம் வந்துள்ளது.

**- திசரணி குணசேகர**

(The Malaise Affecting Buddhism

என்ற தலைப்பில் கிரவுண்விவ்ஸில் வெளிவந்த கட்டுரையின் தமிழாக்கம்)

## தேடுதல்

அண்மையில் பொலிஸ் 119 அவசர தொலை பேசி இலக்கத்துக்கு ஒரு அழைப்பு வந்தது.

"நான் டீ .ஐ .ஜி ( பெயரைக் கூறுகிறார்) பேசுகிறேன். சில இடங்களில் குண்டுத் தாக்குதல் நடத்தப்படவுள்ளதாகச் செய்திகள் வந்துள்ளன. உடனடியாகத் தேடுங்கள்." என்று அந்த அழைப் பில் கூறப்பட்டது.

இதனையடுத்து, தேவாலயங்கள் முழுதும் மக் கள் கூட்டம் இருந்ததால் டென்சன் ஆகிய அவசர பொலிஸ் தேடுதல் வேட்டையில் இறங்கியது. ஆனால் எந்தவொரு குண்டையும் கண்டுபிடிக்க முடியவில்லை.

சரி.. மேலதிக தகவல்களைப் பெறுவோம் என்று சம்பந்தப்பட்ட டீ .ஐ .ஜியைப் பொலிஸ ார் தொடர்பு கொண்டபோது , அப்படியொரு அழைப்பைத் தான் மேற்கொள்ளவில்லையென அவர் தெரிவித்தாராம்..

இப்போது டீ. ஐ. ஜி.யின் பெயரில் அழைப்பை மேற்கொண்டவர் யார் எனத் தேடுகிறது பொலிஸ்..

## பதவியாசை

மாகாணம் ஒன்றின் ஆளுநர் அவர். இப்போது அரச தலைவர் மாளிகையில் கூடுதலான நேரத்தை கழிக்கும் அவர் அங்கு அதிகாரிகளிடம்பேசும்போது நாட்டுத் தலை வரை வெகுவாகப் புகழ்ந்து பேசுவதை வழக்கமாக கொண்டுள்ளாராம்.

அடுத்த முறை தேசியப் பட்டியலில் இடம்பிடித்து நாடாளுமன்றம் செல்லவே அவர் இப்படி'வாளி வைத்துப்' பேசுவதாக அரச தலைவர் மாளிகையின் அதிகாரி ஒருவர் தனக்கு நெருக்கமான நண்பர்களிடம்சொல்லிச் சிரித்தா ராம்.பதவியாசை எப்படியெல்லாம் மனிதர்களைப் பாடா கப் படுத்துகின்றது பார்த்தீர்களா?

## சோதிடம்

பிலியந்தலையைச் சேர்ந்த சோதிடர் ஒருவர் நாட்டின் பெரிய தலைவரை அண்மையில் சந்தித்தாராம்.

போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு மரணதண்டனை நிறைவேற்றினால் மக்கள் எதிர்ப்பு எதுவும் வர வாய்ப் பில்லையென்றும் அதன் பின்னர் உடனடியாக ஜனாதிபதித் தேர்தலுக்கு சென்றாலும் தப்பில்லையென்றும் -ராசிபலன் வெற்றியையே காட்டுவதாகவும் அந்தச் சோதிடர் கூறியிருப்பதாகத் தகவல்.

அதன்படிதான் இப்போது வேலைகள் நடக்கின்றன வாம். முன்னரும் மஹிந்த, சோதிடரை நம்பியதாலேயே, ஒரு வருடத்துக்கு முன்னாலேயே தேர்தலை நடத்தி உள்ள தையும் பறிகொடுத்திருந்தார் என்று அரசியல்வாதிகள் கேலியாகப் பேசிக்கொள்கிறார்கள்.



எதிரொலி
Ethiroli

அம்பலம் பதிப்பகம்,
இல. 241, கைதடி – மானிப்பாய் வீதி,
உடுவில், யாழ்ப்பாணம்.
ethirolimedia@gmail.com, 0212243818

# மரணத்தின் வழியில்....

ஒரு விவசாயியாக, விதானையாராக, அப்பழுக்கற்றவராக, எளிமையானவராக நான்கு வருடங்களுக்கு முன்னர் 'படம்' காட்டி, பொது வேட்பாளராக வாக்குகளை அள்ளிய மைத்திரிபால சிறிசேனவின் அடையாளம் இன்று சந்தி சிரிக்குமளவுக்கு தாறுமாறாகப் போய்கொண்டிருக்கிறது.

அரசியலமைப்புப் பற்றிய அரைகுறைப் புரிதல்களுடன் அவர் அரங்கேற்றிய ஒக்ரோபர் சதி, தனிப்பட்ட கோபதாபங்களுக்காக ஆளுமையுள்ளோருக்கு அமைச்சுப் பதவி வழங்க மறுத்தமை, நீதிமன்றின் தீர்ப்பினால் தலை குனிந்தமை, ரணில் மீண்டும் பிரதமரானால் அடுத்த நொடியே பதவி விலகிவிடுவேன் என்று வீராப்புப் பேசிவிட்டு அதே ரணிலுக்கே மீண்டும் பிரதமர் பதவியைக் கொடுத்த பின்னும் இன்னும் ஜனாதிபதிக் கதிரையில் ஒட்டிக்கொண்டிருத்தல், "அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் ஒருபோதும் போட்டியிட மாட்டேன்" என்று தான் போட்ட சபதத்தை மறந்து இன்னொருமுறை ஜனாதிபதியாக வருவதற்காக தன் அல்லக்கைகளை வைத்துக் காய் நகர்த்தல் என்று எல்லாவற்றையும் கேலிக்கூத்தாக்கி, ஒரு கோமாளியாகவே முற்றுமுழுதாக மைத்திரி மாறிவிட்டிருந்தார். ஒரு மீட்பராக 4 வருடங்களுக்கு முன்னர் பார்க்கப்பட்டவர், கேலிக்குரியநபராக மாறிப்போனமைக்கு முழுக்காரணமும் மைத்திரியே.

ஆட்சி முடிவின் போதுதான் அரசியல்வாதிகளுக்கு ஞானம் பிறக்கும். பெரும்பாலும் இந்தச் சுடலைஞானத்தால், விட்டதைப் பிடிக்க முடியாவிட்டாலும், எஞ்சியிருக்கும் நாள்களில் ஏதேனும் 'குறளி வித்தை' காட்டி, தங்கள் அதிகாரத்தை நீட்டிக்கவே அவர்கள் விரும்புவர்.

மைத்திரியும் கிட்டத்தட்ட அந்தச் சுடலை ஞான நிலையில் தான் தற்போது இருக்கிறார். அவரை ஆட்சிக்கு கொண்டு வந்த ரணிலின் ஆதரவு இப்போதில்லை. மஹிந்தவும், மைத்திரியை ஆதரிக்கப் போவதில்லை. சுதந்திரக் கட்சிக்குள் கூட, தாமரை மொட்டுடன் இணைந்து கோத்தபாயவை ஜனாதிபதியாக்க விரும்பும் அணியே ஆதிக்கம் பெறத் தொடங்கியுள்ளது. எனவே இந்த நேரத்தில் யாருடனும் கூட்டுச் சேரமுடியாமல் தனி மரமாகி நிற்கிறார் மைத்திரி. அப்படியிருந்தும் அதிகார ஆசை மட்டும் அவரை விட்டுப் போகவில்லை. என்ன செய்தால், மீண்டும் தன் மீதான மதிப்பை அதிகரிக்கலாம் என்று குப்புறப் படுத்திருந்து யோசித்தவருக்கு, கிடைத்த துருப்புச் சீட்டே 'போதைப் பொருள் கடத்தல்காரர்களுக்கு மரண தண்டனை' என்ற யுக்தி.

இலங்கையில் தலைவிரித்தாடும் போதைப் பொருள் விடயத்தைக் கையில் எடுத்து, மரணதண்டனை மூலம் அதற்கு முற்றுப்புள்ளி வைத்தால், மீண்டும் மக்களின் 'ஹீரோ' வாக மாறி, அடுத்த தேர்தலிலும் வெல்லலாம் என்பது மைத்திரியின் திட்டம். இந்தத் திட்டம் கூட மைத்திரியின் சொந்தத் திட்டமல்ல. பிலிப்பைன்ஸ் ஜனாதிபதியாக உள்ள ரொட்ரிக்கோ டூர்டெ பின்பற்றிய யுக்திதான். அவருக்கும் சர்வதேச அழுத்தங்கள் வந்தபோதும், போதைப்பொருள்காரர்களுக்கு மரணதண்டனை கொடுப்பதில் இருந்து ரொட்ரிக்கோ டூர்டெ பின்வாங்கவில்லை. இதனால் பிலிப்பைன்ஸில் அசைக்க முடியாத மக்கள் ஆதரவோடு இருக்கிறார் அவர்.

இதேபாணியில் தூசுபடிந்து கிடந்த தூக்குமரங்களை மீண்டும் 'மராமத்து' செய்து, தூக்கிலேறப் போவோரின் பட்டியலையும் மைத்திரி வெளியிட்டுவிட்டார். மரணதண்டனைக்கெதிரான சர்வதேசக் குரல்களையெல்லாம் அலட்சியம் செய்தபடி, யமகிங்கரனாக மாறிக் கொண்டிருக்கிறார் மைத்திரி. உயிர்ப்பலி எடுத்தேனும் அதிகாரத்தை அடைய நினைக்கும் மைத்திரிக்கு காலம் நல்லதொரு பதிலைச் சொல்லக் காத்திருக்கிறது.

"உண்மைக்காக உரத்து ஒலிக்கும் ஊடகக் குரல்"

# கூட்டமைப்பின் எம்.பியின் அடாவடிகள்!

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறிநேசன், மாவட்டத்திலுள்ள அரச அதிகாரிகளுடன் வில்லங்கத்தனமாக நடந்து கொள்கிறார் என்ற குற்றச்சாட்டுக்கள் வலுத்து வருகின்றன.

ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்களில் அதிகாரிகளுடன் மல்லுக்கட்டுவது மட்டுமல்லாமல், ஊடகங்கள் முன்பாகவும்அதிகாரிகள்தொடர்பாககுற்றச்சாட்டுக்களை கூறி, புதிய- மோசமான கலாசாரம் ஒன்றை உருவாக்கி வருகிறார் என்ற விமர்சனங்கள் அதிகரித்துள்ளன.

முறைகேடு, துஷ்பிரயோகத்தில் ஈடுபடும் அதிகாரிகள் மீது சிறிநேசன் இப்படியான விமர்சனங்களை வைத்தால் அதைச் சகித்துக் கொள்ளலாம், ஆனால், தனது அரசியல் செயற்பாட்டுக்கு ஒத்துழைக்காத அதிகாரிகள் மீது அபாண்டமாக அவர் பொதுவெளியில் குற்றம்சாட்டுகிறார், இது அதிகாரிகளை உளவியல் ரீதியாக பாதிக்கிறது என்ற குற்றச்சாட்டு அதிகாரிகள் மத்தியில் வலுத்து வருகிறது.

மறுவளமாக, ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட அதிகாரிகள் மீது அவரது, நெற்றிக்கண் திறக்கவில்லை. தனது அரசியல் செயற்பாட்டுக்கு ஒத்து வராதவர்கள் மீது ஊழல், துஷ்பிரயோக குற்றச்சாட்டு சுமத்தும் சிறிநேசன், உண்மையிலேயே அப்படியான ஊழல் மோசடி செயற்பாட்டில் ஈடுபடும் அதிகாரிகள் தொடர்பில் கண்டும் காணாமலும் இருப்பதுமென்ற சிறிநேசனின் மோசமான அணுகுமுறை காரணமாக, மாவட்டத்தில் கணிசமான அரச அதிகாரிகளினதும், உத்தியோகத்தர்களினதும் ஆதரவை அவர் சார்ந்த கட்சி இழந்து வருகிறது.

கடந்தவாரம் பிரதமருடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்துரையாடலில் ஈடுபட்டபோது, மாவட்டத்திலுள்ள அதிகாரிகள் சிலர் மீது கடும் நடவடிக்கையெடுக்க வலியுறுத்தியதாக அவர் பகிரங்கமாக ஊடகங்கள் முன் தெரிவித்தார். எனினும், அவர் யார் மீது நடவடிக்கையெடுக்கவலியுறுத்தினேன்என்பதைச்சொல்லவில்லை. உண்மையில், இனிவரும் சந்திப்புக்களில் யார் மீது நடவடிக்கையெடுக்க கோரினேன், என்ன காரணத்தினடிப்படையில் நடவடிக்கையெடுக்க கோரினேன் என்பதை அவர் மக்கள் முன் பகிரங்கப்படுத்த வேண்டும்.

அப்படிச் செய்தால், அவர் எவ்வளவு மோசமாகச் செயற்படுகிறார் என்பது தெரிய வரும்.

சிறிநேசன் அதிகாரிகளுடன் முரண்பட்ட பட்டியல் பெரியது. பட்டிருப்பு வலயக்கல்வி பணிப்பாளராக இருந்த திருமதி. பிள்ளைநாயகத்துடன் முரண்பட்டு, அவரைத் தனது அரசியல் செல்வாக்கால் கல்முனை கல்வி வலயத்துக்கு மாற்றினார். ஆனால் அவர் மீண்டும் இடமாற்றத்தில் பட்டிருப்புக்கே வந்தார். கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் பதவிக்கான வெற்றிடம் ஏற்பட்டபோது, தகுதியினடிப்படையில் அவர் நியமிக்கப்பட வாய்ப்பிருந்தது. எனினும், மன்சூர் நியமிக்கப்பட்டார். தனது நியமனம் இரத்தானத்துக்கு சிறிநேசனே காரணமென, பிள்ளைநாயகம் பகிரங்கமாகக் கூறியிருந்தார்.

மட்டக்களப்பு மேற்கு வலய கல்விப் பணிப்பாளர் சிறிதரன் இடமாற்றப்பட்டதன் பின்னணியிலும் சிறிநேசன் இருந்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது. தனது ஆதரவாளர் ஒருவர் அந்தப் பதவிக்கு வருவதாக அரசியல் செல்வாக்கை பயன்படுத்தியதாக அப்போது குற்றச்சாட்டு எழுந்தது. எனினும், தனது இடமாற்றத்துக்கு எதிராக சட்டரீதியான நடவடிக்கை மேற்கொண்டு, அவர் மீண்டும் அந்த வலயத்துக்குக் கல்விப்பணிப்பாளர் ஆனார்.

அன்றிலிருந்து இன்று வரை, அந்த வலயக்கல்விச் செயற்பாடுகளைப் பற்றி பொது மேடைகளில் குற்றம்சாட்டுவதே சிறிநேசனின் வேலையாகி விட்டது. ஊழல் குற்றச்சாட்டுக்களையும் சுமத்தினார். ஆனால், அது எதையும் பகிரங்கப்படுத்தவோ, சட்டரீதியாக நிரூபிக்கவோ அவரால் முடியவில்லை.

வெல்லாவெளி பிரதேச செயலர் இராகுலநாயகி, முந்தைய மாவட்ட நிர்வாகத்தின் மோசடிகளை துணிச்சலாக எதிர்த்த, மாவட்டத்தின் வரைமுறையற்ற காணி அபகரிப்பை தடுத்த, விரல்விட்டு எண்ணத்தக்க அதிகாரிகளில் முதன்மையானவர். அரசியல்ரீதியாக தன்னுடன் ஒத்துழைக்கவில்லையென்பதற்காக அவர் மீதும் கூட்டங்களில் குற்றச்சாட்டுக்களை சுமத்தினார் சிறிநேசன்.அண்மையில் கஞ்வாஞ்சிக்குடியில் வீதி திறப்பு நிகழ்வில், களுவாஞ்சிக்குடி பிரதேச செயலக அதிகாரிகளை பெயர் குறிப்பிடாமல் குற்றம்சாட்டினார்.இறுதியாக மண்முனை வடக்குப் பிரதேச செயலக ஒருங்கிணைப்புக்குழு கூட்டத்தில் பிரதேச செயலர் தயாபரனுடன் மல்லுக்கட்டினார்.

கடந்த வாரம் பிரதமர் தலைமையில் நடந்த கூட்டத்தில், அதிகாரிகளை பற்றி குற்றம்சாட்டியதாக குறிப்பிட்டது, இந்த அதிகாரிகளை பற்றியதாகவே இருக்கும். சிறிநேசனின் இந்த மோதல்கள் எல்லாமே தனிப்பட்ட காரணங்களுக்கானவை.

அண்மையில் சிறிநேசன் செய்தியாளர்களை சந்தித்து, ஹிஸ்புல்லாஹ் காணி அபகரித்தார், ஆதாரமிருக்கிறது என பரபரப்பை கிளப்பினார். அவ்வளவுதான். அந்த ஆதாரத்தை வெளியிடவுமில்லை. முறைப்பாடு பதிவு செய்யவுமில்லை. வாயில் வந்ததை சும்மா அடித்து விட்டிருக்கிறார். அதேபோலத்தான், அதிகாரிகள் விடயத்திலும் நடக்கிறது.

மறுவளமாக, முன்னாள் மாவட்ட செயலர் திருமதி சார்ள்ஸின் மோசடிகளுக்கான ஆதாரங்கள் ஊடகங்களில் கூட பகிரங்கமாக வெளியானது. அரசியல் செல்வாக்கால் விசாரணைகள் மந்தகதியில் நடந்தாலும், கோப் குழுவிலும் அந்த மோசடி விசாரணைகள் நடந்து வருகிறது. அவர் மீதான மோசடி குற்றச்சாட் டுக்கள் அதிகரிக்க, சார்ள்ஸை இடமாற்றம் செய்ய அரசு முயன்றது.

அப்போது, அந்த இடமாற்றத்தை- சார்ள்ஸின் குடும்ப நிலையை கருத்தில் கொண்டு கூட்டமைப்பின் ஊடாகத் தடுத்ததாக பின்னர், பொதுமக்கள் சார்ள்ஸிற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது பகிரங்கமாக சிறிநேசன் குறிப்பிட்டிருந்தார்.

> “வலயக்கல்விச் செயற்பாடுகளைப் பற்றி பொது மேடைகளில் குற்றம் சாட்டுவதே சிறிநேசனின் வேலையாகி விட்டது. ஊழல் குற்றச்சாட்டுக்களையும் சுமத்தினார். ஆனால், அது எதையும் பகிரங்கப்படுத்தவோ, சட்டரீதியாக நிரூபிக்கவோ அவரால் முடியவில்லை.

அதேபோல, வாகரைப் பிரதேச செயலராகத் தற்போது நியமிக்கப்பட்டுள்ள கரன், ஊழல் குற்றச்சாட்டுக்களின் பின், மாவட்ட செயலகத்தில் கடமை வழங்கப்படாமல் இணைப்பில் இருந்தவர். அவரது காணி மோசடி தொடர்பாக ஆதாரங்களுடன் ஊடகங்களில் செய்தியும் வெளியாகியிருந்தது. ஆனால், அவரை மீளவும் வாகரைப் பிரதேசசெயலராக்கியது மட்டக்களப்பின் கூட்டமைப்பு எம்.பியொருவர். அப்போது சிறிநேசனின் சம்மதமும் கோரப்பட, அவர் அந்த நியமனத்தை ஆமோதித்திருந்தார்.

ஊழல், மோசடிகளில் ஈடுபடுபவர்களை உண்மையாகக் கண்டிக்க வேண்டுமென சிறிநேசனுக்கு அக்கறையிருந்தால், அவர் எப்படி நடந்து கொண்டிருக்க வேண்டும்? தான் ஆதரித்தவர்களை எதிர்த்திருக்க வேண்டும். இப்போது எதிர்ப்பவர்களை கடமைக்கு இடையூறு விளைவிக்கக்கூடாது. இப்படியே செயற்பட்டால், சிறிநேசனால் குற்றம்சாட்டப்பட்டவர் என்றால், அந்த அதிகாரி எந்த தவறும் இழைத்திருக்க மாட்டார் என்று கருதும் நிலைமை ஏற்பட்டு விடும்.

இப்படியே சிறிநேசன் செயற்பட்டால், மட்டக்களப்பு மாவட்டத்தின் அரச அதிகாரிகள் கூட்டமைப்பிலிருந்து விலகிச் செல்லும் நிலைமைதான் உருவாகும். ■







# மத்தியா? மாகாணமா?

(சென்றவாரத் தொடர்ச்சி)



# மருத்துவத்துறையில் அனல் பறக்கும் 'ஈகோ' யுத்தம்

# பின்னணியில் நடந்தது என்ன?



### அமைச்சரிடம் முறையீடு

இது இவ்வாறிருக்கையில் 01.06.2019 அன்று இரவு யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்த அமைச்சரைச் சந்தித்த வடமாகாண மருத்துவர் மன்றத்தினர் மாகாணப் பணிப்பாளருக்கு எதிராக முறைப்பாட்டுப் பத்திரம் வாசித்ததுடன், வைத்தியர் சத்தியமூர்த்தி யாழ்.பிராந்திய சுகாதாரப் பணிப்பாளராகத் தொடரவேண்டும் என்று ஒருபிடியாக நின்றுகொண்டனர். இவர்கள் தமது தரப்பு நியாயத்தினை எடுத்துச் சொல்வதற்கு வைத்தியர் தேவநேசனது தன்னிச்சையான நிர்வாக முடிவுகளால்பாதிக்கப்பட்ட சில வைத்தியர்களையும் தம்முடன் கூட்டிச் சென்றிருந்தனராம். தப்பும் வகையறியாத அமைச்சரோ மறுநாள் யாழ். போதனா வைத்தியசாலையில் தம்மை வந்து சந்திக்குமாறு மாகாண சுகாதாரப் பணிப்பாளருக்கு உத்தரவிட்டாராம்.

அன்று தம்மை வந்து சந்தித்த மாகாண சுகாதாரப் பணிப்பாளரிடம் விபரங்களைக் கேட்டறிந்த அமைச்சர் ஆளுநரது செயலாளரினால் 31.05.2019 திகதியிடப்பட்டு அனுப்பப்பட்ட கடிதத்தினை அதுகுறித்து ஆலோசனை வழங்குமாறு கேட்டு சுகாதார அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு பரிந்துரைத்தார்.

அமைச்சரது பரிந்துரையின்படி 03.06.2019 அன்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் மத்திய சுகாதார அமைச்சின் செயலாளருக்கு ஆளுநரது செயலாளரது கடிதம் குறித்து என்ன நடவடிக்கை எடுப்பது என ஆலோசனை மற்றும் வழிகாட்டல் கோரி ஒரு கடிதத்தினை அனுப்பி வைத்தார்.

இக்கடிதத்துக்கு 04.06.2019 அனறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் 13 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் நியதிச் சட்டம் ஆகியனவற்றினை மேற்கோள்காட்டி மத்திய சுகாதார அமைச்சுக்கே வைத்தியர்களை நியமிக்கும் தத்துவம் உண்டெனப் பதில் வழங்கப்பட்டதாம்.

இக்கட்டுரை எழுதப்படும் தினத்தில் உள்ள நிலவரங்களின் படி ஆளுநர் அலுவலகம் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தினால் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு வழங்கிய பதிலினை ஏற்காது தாம் அனுப்பிய கடிதங்களுக்கான பதிலை மத்திய சுகாதார அமைச்சு வழங்கவேண்டும் என ஒற்றைக்காலில் நிற்பதாகத் தகவல்.

### தொடரும் இழுபறி

இவ்வாறு கடிதங்கள் அங்கும் இங்கும் பறந்துகொண்டிருக்க 08.06.2019 அன்று ஜனாதிபதி முல்லைத்தீவுக்கு வரும் ஆரவாரங்கள் ஆரம்பமாகின. 07.06.2019 அன்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரைத் தொடர்புகொண்ட ஆளுநரது செயலாளர்,'வைத்தியர் சத்தியமூர்த்தியை யாழ்ப்பாணப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவியிலிருந்து விடுவிக்கும் கடிதத்தினை ஏன் வழங்கவில்லை?' என வினவினாராம். அதற்கு மாகாண சுகாதாரப் பணிப்பாளர் தமக்கு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் அனுப்பப்பட்ட கடிதம் தொடர்பில் குறிப்பிட்டதும்'நீங்கள் மாகாணத்தில் எங்களின்கீழ் பணியாற்றுகிறீர்களா அல்லது மத்திய சுகாதார அமைச்சின்கீழ் பணியாற்றுகிறீர்களா?' எனச் சீறிச் சினந்த ஆளுநரது செயலாளர் 'இப்போது உடனடியாகவே வைத்தியர் சத்தியமூர்த்தியை விடுவியுங்கள். இல்லையேல் நாளை (மறுநாள் 08.06.2019) நீங்கள்முல்லைத்தீவில் ஜனாதிபதியிடம் முறையாக வாங்கிக்கட்டவேண்டி வரும்' என்று உளவியல் அழுத்தம் ஒன்றையும் பிரயோகித்தாராம். பதறிப்போன மாகாணப் பணிப்பாளர் விடயத்தை வைத்தியர் சத்தியமூர்த்திக்குத் தெரிவிக்க, உணர்ச்சி வசப்பட்ட வைத்தியர் சத்தியமூர்த்தி மின்னஞ்சல் வழியாக நியாயம் கோரி ஒரு ஊடக அறிக்கையினை அனுப்பி வைத்தார் என அவருக்கு நெருக்கமான வட்டாரங்களிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

### ஆசை வார்த்தை

வைத்தியர் சத்தியமூர்த்தியின் மின்னஞ்சல் வெளியானதும் ஏற்பட்ட அழுத்தத்தினால் ஆளுநரது செயலாளர்சத்தியமூர்த்தியைத் தொடர்புகொண்டு "எமக்கிடையே தனிப்பட்ட பிரச்சினை கள் ஏதுமில்லையே. நீங்கள் மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளராக வர விரும்புகிறீர்களா? ஆம் எனில் சொல்லுங்கள். உடனடியாக அதைச் செய்யமுடியும்" என்ற ஆசை வார்த்தைகளைப் பேசினார் எனவும் அதற்கு சத்தியமூர்த்தி சம்மதிக்கவில்லை எனவும் விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இது உண்மையானால் ஆளுநரது செயலாளர் எவ்வளவுதூரம் யாழ்.பிரதி சுகாதாரப் பணிப்பாளரது பதவியைக் காப்பாற்றப் போராடுகிறார் என்பது நிரூபணமாகிறது.

இந்த அமளிக்குள் வடமாகாண முன்னாள் எதிர்க்கட்சித் தலைவர் ஒரு ஊடக அறிக்கையினை ஊடகங்களுக்கு அனுப்பிவைத்தார். அதில் 13ஆம் திருத்தச் சட்டம் மற்றும் மாகாண சபைகள் சட்டம் குறித்த வியாக்கியானங்களுடன் 'நான் சொல்லி மாகாண சபையினர் கேளாததால்'

(05 ஆம் பக்கம் பார்க்க)



# மத்தியா மாகாணமா?

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது அனுபவிக்கிறோம் என்ற சாரப்பட பச்சதாபமும் கலந்து காணப்பட்டது. இந்த அறிக்கை குறித்து கருத்துத் தெரிவித்த மருத்துவத்துறையினர் 'நடைமுறையில் எவ்வாறு குறிப்பிட்ட விடயதானம் செயற்படுத்தப்பட்டு வருகிறது என்பது 25.04.2019 அன்று ஆளுநரது செயலாளர் அனுப்பி வைத்த கடிதத்தில் தெளிவாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும்ஆளுநர் என்பவர் மாகாணத்துக்கு உரியவர் அல்லர். அவர் ஜனாதிபதியின் (மத்தியின்) பிரதிநிதி. எனவே மத்திய சுகாதார அமைச்சும் மாகாண ஆளுநருக்கும் எதுவித வித்தியாசமும் இல்லை. எனவே மாகாண ஆளுநருக்கு நியமன அதிகாரம் உள்ளது என்பது மறைமுகாக மத்திக்கு உரிய அதிகாரமே.இந்நிலையில் இவ்வாறான அறிக்கைகளை வெளியிடுவது குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முற்படுவது போன்றது' எனக் காட்டமாகக் குறிப்பிட்டனர்.

மேலும் இவரது அறிக்கையில் குறிப்பிட்ட 'மாகாண சபையின் எதிர்ப்புக் காரணமாக வைத்தியர் திலீபனுக்கு மத்திய சுகாதார அமைச்சு வழங்கிய முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நியமனத்தை மீளப் பெற்றுக்கொண்டது'என்ற தகவல் முற்றிலும் தவறானதாகும் என மாகாண சுகாதாரத் திணைக்கள வட்டாரங்களிலிருந்து தெரியவருகிறது.

### சுகாதார அமைச்சர் தேவநேசனை மிரட்டினாரா?

வைத்திய அரசியல் ஒரு மெகா சீரியல் படம் போல நீண்டு செல்கையில்திடீர் திடீரென புதிய திருப்பங்கள் ஒவ்வொரு எபிசோட்டிலும் வந்து கொண்டேயிருக்கின்றன. 'கொழும்பில் நடந்த கலந்துரையாடலில் அமைச்சர் ராஜித யாழ் .பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளரை கடும் தொனியில் உத்தரவிட்டு எச்சரித்தார்' என்ற செய்தியும் அவ்வகையில் திடீரெனக் கிளம்பிய ஒரு விடயம்தான்.

கொழும்பில் நடந்த சம்பவத்தை நேரில் பார்த்தது போல முகநூல் பதிவுகளும் வலைத்தளச்செய்திகளும் பரபரப்புக்குப் பஞ்சம் வைக்காமல் கதை பரப்பிக் கொண்டிருக்கின்றன. உண்மையில் சுகாதார அமைச்சில் நடந்த கலந்துரையாடலில் நடந்தது என்ன என்பதை அதில் கலந்து கொண்ட வடக்கின் உயரதிகாரிகள் பலரிடம் கேட்டறிந்ததில் நாம் தெரிந்து கொண்ட பொதுவான விடயங்கள் இவைதான்.

வடக்கின் சுகாதாரத்துறை அபிவிருத்தி மற்றும் தேவைகள் குறித்த விசேட கலந்துரையாடல்14.06.2019 பிற்பகல் 2 மணியளவில் கொழும்பு சுகாதார அமைச்சரது ஆலோசனை மண்டபத்தில்நடைபெற்றிருக்கிறது. இந்தக் கலந்துரையாடல்களில் முன்னாள் வட மாகாண சுகாதார அமைச்சர் வைத்தியர் சத்தியலிங்கம், வடக்கின் சுகாதார அமைச்சுச் செயலாளர் மற்றும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஆகியோருடன் ஐந்து மாவட்டங்களினதும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் மற்றும் நான்கு பிரதான வைத்தியசாலைகளது பணிப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டிருந்தார்கள் எனத் தெரியவருகிறது. இக்கலந்துரையாடலில் வைத்தியர் சத்தியமூர்த்தி கலந்து கொண்டிருக்கவில்லை என நம்பகரமான வட்டாரங்களிலிருந்து அறியமுடிகிறது (பல செய்திமூலங்கள் சத்தியமூர்த்தியும் இந்தக் கூட்டத்தில் பங்குபற்றியதாக தகவல் வெளியிட்டுவருவது குறிப்பிடத்தக்கது).

### பணிப்பாளருக்கு அச்சம்?

கலந்துரையாடல் ஆரம்பித்து சிறிது நேரம் கழித்தே இந்தக் கலந்துரையாடலில் இணைந்துகொண்ட அமைச்சர் ராஜித "எங்களுடைய மாகாணப் பணிப்பாளர் கடுமையான அச்சத்தில் இருப்பதாகக் கேள்விப்பட்டோம். மாகாண அதிகாரிகள் அவரைப் போட்டு மிரட்டுகிறார்களாம். அப்படியா?" எனப்'பம்பலாக' கேட்டபடி தனது உரையாடலைத் தொடங்கி 'யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் விடயமாக' என்று ஆரம்பிக்க, மாகாணப் பணிப்பாளர் அவசரமாக வைத்தியர் தேவநேசனைச் சுட்டிக்காட்டி 'இவர்தான் தேவநேசன். யாழ் பிரதி சுகாதாரப் பணிப்பாளர்' என அறிமுகம் செய்து வைத்தாராம். வைத்தியர் தேவநேசனைப் புன்முறுவலுடன் பார்த்த அமைச்சர் "ஓ! நீங்கள்தான் அந்தத் தேவநேசனா? நீங்கள் தனிப்பட்ட முறையில் உங்களின் கீழ் பணியாற்றும் அலுவலர்களை பழிவாங்குவதாக எனக்கு முறைப்பாடுகள் வந்தனவே" என கேட்க, அதனை தேவநேசன் "அவ்வாறில்லை. நான் அப்படி யாரையும் பழிவாங்குவதில்லை" என்று அவசரமாக மறுத்திருக்கிறார்.

புன்னகை மாறாத அமைச்சர் "இல்லையில்லை. நீங்கள் ஒரு அலுவரது உத்தியோகபூர்வ வாகனத்தினை அவரிடமிருந்து அபகரித்து வேறு ஒருவருக்குக் கொடுத்திருக்கிறீர்கள். அமைச்சரான நான் கூட அவ்வாறு செய்ததில்லை. நாங்கள் அதிகாரம் இருக்கிறது என்பதற்காக அதனை துஷ்பிரயோகம் செய்யமுடியாது. அது நல்லதல்ல. பிற அலுவலர்களுக்கு உதவுவதற்காகக் கூட அந்த அதிகாரங்களை நாங்கள் பயன்படுத்தக் கூடாது. எமது அதிகாரங்கள் மற்றும் இயலுமைகளை மக்களுக்கு உதவுவதற்காவே நாங்கள் பயன்படுத்த வேண்டும்.நீங்கள் எல்லோரும் பொதுச் சேவை அலுவலர்கள். யாரும் யாரையும் பழிவாங்கக் கூடாது. உங்கள் மீது எழுந்த பல குற்றச்சாட்டுகளை அடுத்தே நாங்கள் யாழ்ப்பாணத்துக்கு தற்காலிகமாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக யாரை நியமிப்பதென தேடத் தொடங்கினோம். அவ்வாறு நியமிப்பதற்கென இரண்டு மூத்த வைத்திய நிர்வாகத்துறை அதிகாரிகளைத் தொடர்பு கொண்டோம்.எங்களுக்கு இந்த வைத்தியர்தான் வேண்டும் என நாங்கள் சொல்லவில்லை -அந்த வைத்தியரின் பெயர் என்ன?" என பணிப்பாளர் நாயகத்திடம் அமைச்சர் வினவ, பணிப்பாளர் நாயகம் ' சத்தியமூர்த்தி' எனக் குறிப்பிட்டதும் தனது கலந்துரையாடலைத் தொடர்ந்த அமைச்சர் " ஆம், சத்தியமூர்த்தி. நாம் அவரிடம் கேட்பதற்கு முன்னர் மற்றவர்களைத் தான் கேட்டோம். அவர்கள் அனைவரும் மறுத்து விட்டனர். சத்தியா ஒருவர் மட்டும்தான் எமது வேண்டுகோளுக்குச் சம்மதித்தார். அவரும்கூட முழு மனத்துடன் ஆம் எனச் சொல்லவில்லை. ஏனெனில் அவருக்கு யாழ். போதனா வைத்தியசாலையிலேயே ஏராளமான முக்கிய வேலைகள் பல உள்ளன. இருப்பினும் நாம் கேட்டுக்கொண்டதற்காக அவர் சம்மதித்தார்." என்றாராம்.

### மத்திக்கே அதிகாரம்

மேலும் அமைச்சர் "எமக்கு அந்த அதிகாரம் அதாவது வைத்தியர்களை நியமிக்கும் அதிகாரம் உள்ளதா என வடக்கில் சிலர் கேட்கிறார்களாம். கடந்தவாரம் ஆளுநர்களது கலந்துரையாடல் கொழும்பில் நடந்த போது உங்களது ஆளுநர் அங்கு பிரசன்னமாயிருக்கவில்லை. அவரது செயலாளர்தான் வந்திருந்தார். அந்தக் கலந்துரையாடலில் இந்த நியமன விடயத்தினை நாங்கள் சகல ஆளுநர்களுடனும் கலந்துரையாடினோம். அனைத்து ஆளுநர்களும் மருத்துவ சேவை ஆளணியினரை (வைத்தியர்கள் மற்றும் பணிப்பாளர்கள் நியமனங்கள் உள்ளிட்ட) தொடர்ந்தும் மத்தியே கையாள்வதற்குப் பூரண சம்மதம் தெரிவித்தனர்" எனக் குறிப்பிட்டிருக்கிறார்.

"தேவநேசன் யாழ். பிரதி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக இருக்கும் வரை மற்றைய எந்த வைத்திய அதிகாரிகளும் யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவியினை ஏற்க மறுக்கிறார்கள். தாம் அந்தப் பதவியை ஏற்பதானால் தேவநேசனை அங்கிருந்து அகற்றுங்கள் எனக் கேட்கிறார்கள்'என்பதையும் நான் அந்த ஆளுநர்கள் கலந்துரையாடலில் கூறினேன்."அப்படியானால் நாங்கள் வைத்தியர் தேவநேசனை விலகச் சொல்கிறோம். அவர்களில் ஒருவரைப் பொறுப்பெடுக்கச் சொல்லுங்கள்" என வடக்கு ஆளுநரின் செயலாளர் எம்மிடம் தெரிவித்தார். அந்தக் கலந்துரையாடல் முடிந்து வெளியேறும்போதும் வடக்கு ஆளுநரின் செயலாளர் என் பின்னே தொடர்ந்து வாசல் வரை வந்து "தேவநேசனில் தவறு இருந்தால் நாம் அவரை உடனடியாக பதவி விலக்குகிறோம். நீங்கள் உரிய ஒரு மருத்துவ அதிகாரியை யாழ் .பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமியுங்கள்" எனத் திரும்பவும் கூறினார். "எங்களுக்கு அதில் ஆட்சேபனை இல்லை. எங்களுக்கு சத்திமூர்த்தியோ, வேறு எந்த மூர்த்தியோ எவராகவும் இருக்கலாம். எமக்கு வேண்டியதெல்லாம் அந்தப் பிராந்தியத்தில் சுமுகமான நிர்வாகச் சூழலே" என்பதை நான் ஆளுநருக்குக் கூறுமாறு அவரது செயலாளரிடம் சொல்லியிருக்கிறேன்' என்று மேலும் அமைச்சர் ராஜிதவால் தெரிவிக்கப்பட்டதாம்.

### பாரதூரமான குற்றச்சாட்டு

இந்த இடத்தில் குறுக்கிட்ட வைத்தியர் தேவநேசன் "வைத்தியர் நந்தகுமார் யாழ் .பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக நியமிக்கப்பட்டபோது அவரிடம் அக் கடமைகளை நான் ஒப்படைத்திருந்தேன். அவ்வாறே நான் இப்போதும் கடமைகளை ஒப்படைக்கத் தயாராகவே இருக்கிறேன்" எனத் தெரிவிக்க சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மிகவும் மென்மையாக தான் சொல்லும் கருத்தைச் செவிமடுக்குமாறு கூறிவிட்டு இந்தப் பத்தியின் ஆரம்பத்தில் நாம் குறிப்பிட்ட இரண்டு சம்பவங்களை ஞாபகப்படுத்தியிருக்கிறார்.

" உங்கள் மீது மிகப் பாரதூரமான ஒரு குற்றச்சாட்டு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரனால் சுமத்தப்பட்டது. அதாவது வைத்தியர் தேவநேசன் மாகாணப் பணிப்பாளரான தம்மை பல தடவைகள் அவதூறான வார்த்தைகளால் தூசித்தது, எச்சரித்தது மற்றும் மிரட்டியதாக தெரிவித்த அந்தக் குற்றச்சாட்டுத் தொடர்பில் ஒரு விசாரணை நடந்திருக்கிறது. அடுத்ததாக வைத்தியர் நந்தகுமாரன் நியமனம் செய்யப்பட்டபோது நீங்கள் அவரை வேலையைப் பாரமெடுக்க அனுமதிக்கவில்லை என்பது இன்னொரு குற்றச்சாட்டு. இதுபற்றியெல்லாம் இங்கு நான் குறிப்பிடுவதற்கு வருந்தினாலும் இந்த விடயங்களுக்குப் பொறுப்புக் கூறவேண்டியவன் என்ற வகையில் இவற்றினைக் 'கம்பளத்தின் அடியில் இட்டு' மறைக்க என்னால் முடியாது. இந்த இரண்டு உதாரணங்களுமே இவ்விடத்தில் உண்மையை வெளிப்படுத்தப் போதுமானது" என்றாராம் மத்திய சுகாதாரப் பணிப்பாளர் நாயகம்.

### அதிகாரப் பகிர்வுக்கு ஆதரவு

"நீங்கள் அனைவரும் ஒரு விடயத்தினை நினைவில் கொள்ள வேண்டும். நீங்கள் எல்லோரும் மத்திய அமைச்சின் கீழேயே வருகிறீர்கள். நீங்கள் வடமாகாணத்திலோ அல்லது தென் மாகாணத்திலோ அல்லது சப்பிரகமுவ மாகாணத்திலோ பணியாற்றலாம். ஆனால் வைத்தியர்களான நீங்கள் அனைவருமே மத்திய சுகாதார அமைச்சின் கீழேயே நிர்வகிக்கப்டுகிறார்கள். நான் அதிகாரப் பகிர்வினை ஆதரிப்பவன். அவ்வாறாயின் முதலில் நாங்கள் எல்லோரும் எவ்வாறு (சுகாதாரத் துறையினை) இயக்குவது என்பது குறித்தும், மருத்துவ சேவைத்துறையை மாகாணங்களிடம் கையளிப்பதா என்பது குறித்தும். அடிப்படை முடிவினை எடுக்கவேண்டும். எதிர்காலத்தில் ஒருநாள் அனைத்துக் குறைபாடுகளும் களையப்பட்டு தன்னிறைவு நிலை எட்டப்பட்டதும் நீங்கள் எல்லோரும்' மாகாணசபைகளின் கீழ் நியமிக்கப்படலாம். மருத்துவர்களுக்கு உள்ள தட்டுப்பாடு காரணமாகவும் மருத்துவர்கள் இலகுவாக தமது நியமனங்களை விரும்பிய இடங்களில் பெறும் வகையிலும் மருத்துவ சேவை நியமனங்களை மத்தியே கையாண்டு வருகிறது" என்று விளக்கிய ராஜித அதைத் தொடர்ந்து கூறியவைதான் அக்கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தவர்களுக்கு புருவங்களை உயர வைத்ததாம்.

"உங்களுக்குத்தெரியுமா? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் யாழ்ப்பாணத்தில் கடந்தவாரம் நான் தங்கியிருந்தபோது என்னை வந்து சந்தித்தார்கள் (அமைச்சர் ராஜித தம்மைச் சந்தித்த கூட்டமைப்பினரது பெயர்களைக் கூறியிருந்தாலும் அவற்றினை இங்கு குறிப்பிடுவது இவ்விடயத்தை மேலும் அரசியலாக்கி இடியப்பச் சிக்கலாக மாற்றிவிடும் என்பதால் அவற்றினை இங்கு நாம் குறிப்பிடவில்லை). அவர்கள்கூட என்னிடம் சொன்னார்கள். ( 06 ஆம் பக்கம் பார்க்க)

# மத்தியா மாகாணமா?

(05 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாங்களும் அதிகாரப் பகிர்வையே ஆதரிக்கிறோம். ஆனால் இந்த விடயத்தில் 50:50 தான் எமது நிலைப்பாடு. ஏனெனில் உங்களைப்பற்றி (தேவநேசன்) அவர்களுக்கும் முறைப்பாடுகள் உண்டு. எனவே என்ன முடிவானாலும் என்னையே எடுக்குமாறு கூறி விட்டனர்"என்று அமைச்சர் ராஜித போட்டுடைத் திருக்கிறார்.

### தேவநேசனுக்குத் தகுதியில்லை

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் " நாங்கள் இன்னும் ஒரு விடயத்தினையும் பார்க்க வேண்டும். "வைத்தியர் தேவநேசனுக்குப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவியினைப் பெறுவதற்குரிய தகமைகள் கிடையாது. அவர் தற்போது உள்ள பிரதிப் பணிப்பாளர் தரத்திலேயே தமது சேவையினைத் தொடரமுடியும். நாங்கள் அறிந்ததெல்லாம் தேவநேசன் எந்த ஒருவரையும் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக (யாழ்ப்பாணத்தில்) கடமையைச் செய்ய விடமாட்டார் என்பதுதான். இதைச் சொல்வதற்கு தேவநேசன் மீண்டும் என்னை மன்னிக்க வேண்டும் இல்லையேல் நீங்கள் ஏமாற்றுவது எங்களுக்குத் தெரியாது என்று நீங்கள் எண்ணிக்கொண்டிருப்பீர்கள்" என்று கூறிக் கொண்டிருக்கும்போது குறுக்கிட்ட வைத்தியர் தேவநேசன் " நான் அப்படியானவன் அல்லன். வைத்தியர் நந்தகுமாரை நியமிக்கும்போது எனக்கான பதவி அல்லது எங்கு நான் செல்லவேண்டும் என்ற எந்த உத்தரவும் தரப்படவில்லை. எனக்கு எந்தப் பதவியையும் தராமல் அவர்கள் என்னைத் துரத்தினார்கள். அவ்வேளையில் தான் நான் அவ்வாறு செயற்பட நேரிட்டது." எனத் தன்னிலை விளக்கத்தினை தெரிவித்தாராம்.

மேலும் "வைத்தியர் நந்தகுமார் பின்னர் என்னுடன் பணியாற்றிய வைத்தியர் உமாசங்கரன் உட்படப் பலர் என்னோடு வேலைசெய்தார்கள். அவர்களது பணிக்கு நான் எந்த இடையூறும் செய்யவில்லை. இப்போதுகூட நான் இந்தப் பதவியைக் கையளிக்கத் தயாராகத்தான் இருக்கிறேன். எனக்குத் தேவை (உங்களது) கடிதம்தான். நாளைக்கே அவர்கள் முறைப்படியாகக் கடிதத்தை வழங்கினால் நான் உடனடியாக பதவியைக் கையளிக்கத் தயாராக இருக்கிறேன்" என்று கூறியிருக்கிறார்.

### பாய்ந்தவர் பதுங்கினார்

அதற்கு பதிலளித்த பணிப்பாளர் நாயகம்"உங்களுக்கு மகிழ்ச்சி என்றால் நாங்கள் உங்களுக்கு வேறொரு பதவியை வழங்கலாம். ஆனால் உங்களுக்கு விருப்பம் என்றால் மட்டுமே அதனை நாம் செய்யமுடியும். நிறைய வைத்திய அத்தியட்சகர் பதவிகள் வெற்றிடமாகவே உள்ளன. (உதாரணமாக) ஊர்காவற்துறை ..? என்று சொல்லிக்கொண்டுபோக இடைமறித்த வைத்தியர் தேவநேசன் "ஊர்காவற்துறைக்கு என்னால் போய்க் கொள்வது சிரமம்." என்று கூறியதும் பணிப்பாளர் நாயகம் " எங்காக இருந்தாலும் சரி. உங்களுக்கு விருப்பமான வைத்தியசாலைக்கு நாங்கள் உங்களை (பணிப்பாளராக) நியமிக்கலாம். ஆனால் தகுதிவாய்ந்தவர்கள் பணிப்பாளராக இல்லாத வைத்தியசாலையாக அது இருக்க வேண்டும்" என்று பதிலளித்திருக்கிறார்.

அத்துடன் தனது தொனியினைக் குறைத்த வைத்தியர் தேவநேசன் "அனேகமான அனைத்து வைத்தியசாலைகளுக்கும் தகுதிவாய்ந்தவர்கள் நியமிக்கப்பட்டு விட்டார்கள். எங்குமே வெற்றிடங்கள் இல்லை. நீங்கள் தயவுசெய்து நான் செய்த பிழை என்ன என்று சொன்னால் அதை ஏற்றுத் திருத்திக்கொள்ள நான் தயாராகவே உள்ளேன்"என்று பவ்வியமாகக் கூறிக் கொண்டிருக்கையில், இடையிட்ட சுகாதார அமைச்சர் " இல்லை, இல்லை! நீங்கள் (இங்கு) ஏற்றுக்கொள்வதாக கூறிவிட்டு பின்னர் அங்கு போய்ப் பிரச்சினைகளை உருவாக்குவீர்கள். அதனால்தால் ஏனையவர்கள் அங்கு வர விருப்பமில்லாமல் உள்ளனர். அதாவது நீர் அங்கிருக்கும்போது பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக பொறுப்பேற்க மற்றையவர்கள் பின்னடிக்கிறார்கள். எனக்கு உண்மையில் நீர் நல்லவரா கெட்டவரா எனத் தெரியாது. ஆனால் ஒரு முறைப்பாடல்ல பல முறைப்பாடுகள் (உமக்கு எதிராக) என்னிடம் மேற்கொள்ளப்பட்டுள்ளன" என்று கூறிக் கொண்டிருக்கும்போது, வைத்தியர் தேவநேசன் "இல்லை. இல்லை. வைத்தியர் நந்தகுமார் பதவி ஏற்றபோதுதான் அந்தப் பிரச்சினை நடந்தது. அதன் பின்னர் இரண்டு வருடங்கள் நாம் ஒன்றாகவே பணியாற்றினோம். வைத்தியர் நந்தகுமாரிடம் கேட்டுப்பாருங்கள். பின்னர் வைத்தியர் உமாசங்கரன் பணியாற்றியிருக்கிறார். அவரிடம் கேட்கலாம்" என கூறியிருக்கிறார். இருப்பினும் அருகிலிருந்த வைத்தியர் நந்தகுமாரோ அல்லது உமாசங்கரனோ எவ்வித சலனமும் காட்டாது இவை எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தனராம்.

### "நான் அப்படிச் செய்யவில்லை"!

"நாங்கள் பொதுச்சேவை அலுவலகங்களை இயக்கிக்கொண்டிருக்கிறோம். அதில் எமது தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளை நாம் காட்டமுடியாது. தனிப்பட்ட முறையில் எவரையும் துன்புறுத்துவதோ அல்லது எமது தனிப்பட்ட உணர்ச்சிகளை நிர்வாகத்தில் பிரதிபலிப்பதோ ஏற்றுக்கொள்ள முடியாது" என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தபோது அதனை ஆமோதிக்கும் வகையில் சுகாதார அமைச்சர் " உண்மைதான். இல்லையெனில் யாழ்ப்பாணத்தில் நான் தங்கியிருந்தபோது என்னிடம் வநது உம்மைப்பற்றிய முறைப்பாடுகளை உமது பணியாளர்கள் என்னிடம் சொல்லியிருப்பார்கள்?. உதாரணமாக ஒரு அலுவலரது உத்தியோபூர்வ வாகனத்தை எவ்வாறு கட்டாயப்படுத்திப் பிறிதொருவருக்கு உம்மால் கொடுக்கமுடியும்" என்று கேட்டிருக்கிறார்.

இதற்குப் பதிலளித்த வைத்தியர் தேவநேசன் ' நான் யாருடைய வாகனத்தையும் அவ்வாறு பலோத்காரமாகப் பறிக்கவில்லை. எமது பணிமனையில் இரண்டு பிராந்திய தொற்றுநோய் விஞ்ஞான வைத்தியர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்களுக்கு வாகனம் இல்லை என்பதால்தான் எழுத்துமூலம் இரண்டு தினங்கள் ஒரு வாகனத்தை அவர்களுக்கு வழங்குமாறு பணித்தேன்' என்று பதில் கூற மீண்டும் புன்சிரிப்புடன் ' நான் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்தபோது இரண்டு வைத்தியர்கள் என்னிடம் வந்து உங்களது பழிவாங்கல்கள் குறித்து முறையிட்டார்கள். மலேரியா தடை இயக்கத்தினால் அவர்களது வைத்திய அதிகாரி பாவிப்பதற்காக வழங்கிய வாகனத்தை பறித்தெடுத்து பிறிதொருவருக்கு வழங்கும் அதிகாரம் உங்களுக்கு கிடையாது. வேண்டுமானால் மலேரியா தடுப்பு வேலைகள் நடைபெறாத நாட்களில் அந்தப் பொறுப்பு வைத்தியரது சம்மதத்துடன் வாகனத்தைப் பிற தேவைகளுக்கு பாவிக்கலாம். மலேரியா தடுப்பு என்பது மிகவும் முக்கியமானது என்பதை தயவுசெய்து விளங்கிக்கொள்ளுங்கள் என்று ஆலோசனை கூறியிருக்கிறார் அமைச்சர் ராஜித.

இவ்வேளையில் குறுக்கிட்ட பணிப்பாளர் நாயகம் "நீர் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர்தானே. இது மாதிரியான முடிவுகளைப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரை எடுப்பதற்கு விடலாமே" என்று தெரிவித்தாராம்.

### சத்தியமூர்த்தியே தகுதியானவர்

இவ்வேளையில் இவை அனைத்தையும் பார்த்துக் கொண்டிருந்த சுகாதார அமைச்சின் ஏனைய மூத்த அதிகாரிகளும் 'வைத்தியர் சத்தியமூர்த்தி இப்பதவிக்குத் தகுதியானவர். மருத்துவ நிர்வாகத்துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றவர். வடக்கில் உள்ள சிரேஷ்ட மருத்துவ நிர்வாகத்துறை அதிகாரிகள் மத்தியில் சேவை மூப்பில் மூன்றாம் இடத்தில் உள்ளவர். அவர் நிறைய சேவைகளை செய்துள்ளார்' என்று சத்தியமூர்த்தி புராணம் பாடியபோது மீண்டும் குறுக்கிட்ட சுகாதார அமைச்சர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முக்கியஸ்தர் ஒருவரது பெயரினைக்கூறி "அவரும்கூட சத்தியமூர்த்தியை நியமிக்குமாறே கேட்டுக் கொண்டிருக்கிறார். மிகப்பெரிய மாற்றம் யாழ்ப்பாணப் போதனா வைத்தியசாலையில் ஏற்படுத்தப்படுவதற்குச் சத்தியமூர்த்தி கருவியாகச் செயற்பட்டுள்ளார்" எனப் புகழ்ந்தாராம். அத்துடன் இவ்விடயம் குறித்து முற்றுப்புள்ளி வைத்த சுகாதார அமைச்சர் தனது அமைச்சின் உயர் அதிகாரிகளை வடக்கின் உயர் அதிகாரிளுடன் கலந்து பேசி இவ்விடயத்தினை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளுமாறு கூறிவிட்டுக் கலந்துரையாடலில் பேசப்படவேண்டிய விடயங்களைக் கவனித்திருக்கிறார்.

இவைதான் யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நியமன விடயமாக கொழும்பில் நடந்த கலந்துரையாடலின்போது தெரிவிக்கப்பட்ட கருத்துகள் என அதில் பங்குபற்றிய வடக்கின் உயரதிகாரிகள் பலர் உறுதிப்படுத்தியுள்ளார்கள்.

இக்கலந்துரையாடலின் பின்னர் வடக்கின் சுகாதாரச் செயலாளர் மற்றும் மாகாணப் பணிப்பாளர் ஆகியோர் மத்தியின் சுகாதாரச் செயலாளருடன் மூடிய அறையில் இவ்விடயம் தொடர்பில் மந்திராலோசனையில் ஈடுபட்டுவிட்டே திரும்பினர் என அவர்களுடன் சென்றிருந்த பிற உயரதிகாரிகள் வாயிலாக அறிய முடிகிறது.

### கொடுத்துவிட்டு எடுப்பது

இந்த வைத்திய அரசியல் தமிழர்களது அதிகாரப்பகிர்வின் எல்லைகள் எவை என்ற சர்ச்சையையும் கிளப்பிவிட்டு சிக்கலை வேறு லெவலுக்குக் கொண்டு போய்விட்டது. இதனால் அதிகாரப்பகிர்வில் வைத்தியர்களது நியமனங்கள் குறித்து சொல்லப்பட்டிருப்பது என்ன என்பதை நாம் தேடிப் பார்த்தபோது ஜே.ஆரின் நரித்தனம் தெளிவாகத் தெரிந்தது. முற்றுமுழுதாக மாகாணத்துக்கு உரித்தான விடயங்கள் அடங்கிய பட்டியல் 1இல் சுகாதாரத்தை உள்ளடக்கிய 13வது திருத்தச் சட்டம் அதே வேளை பட்டியல் 111 என அழைக்கப்படும் 'ஒப்புதல் பெறவேண்டிய' விடயங்கள் பட்டியலிலும் சுகாதாரத்தினை உள்ளடக்கியுள்ளது. கொடுப்பது போலக் கொடுத்து தெரியாமல் எடுப்பது என்பது இதுதான் போலும்!.

மேலும் 1987ஆம் ஆண்டின் 42ம் இலக்க மாகாண சபைகள் சட்டமூலத்தின் பிரகாரம் மாகாணப் பொதுச் சேவைகளின் கீழ்வரும் அலுவர்களது நியமனம், இடமாற்றம், ஒழுக்காற்றுவிசாரணை மற்றும் பதவி நீக்கம் ஆகியவற்றிற்கான அதிகாரம் மாகாண ஆளுநருக்கு அளிக்கப்பட்டுள்ளது. இந்தச் சட்டமூலத்தில் அனைத்து இலங்கை சேவையினைச் சார்ந்த உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கான அதிகாரம் ஆளுநருக்கு அளிக்கப்படவில்லை.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் நியதிச் சட்டம் இலக்கம் 01/ 2015பகுதி I மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தை ஸ்தாபித்தல், அதன் யாப்பு மற்றும் பொறுப்புக்கள்என்ற விடயதானத்தின் கீழ்வரும் பிரிவு 2 இன்"வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தை ஸ்தாபித்தல்" என்பதன் உபபிரிவு (2) இன்பிரகாரம் "திணைக்களத்தினைச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் நியமனம் இடமாற்றம் மற்றும் ஒழுக்காற்றுக்கட்டுப்பாடு என்பவற்றின் அதிகாரமானது (அனைத்து இலங்கை சேவையினைச் சார்ந்த உத்தியோகத்தர்களைத்தவிர) 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க திருத்தம் செய்யப்பட்ட மாகாண சபைகள் சட்டத்தின் பகுதி IV இற்கிணங்கஆளுநருக்கு உரித்தானதாகும்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரிவு 4. (1) "மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஒருவர் இருக்க வேண்டியதுடன் (இதனகத்துப் பின்னர் "மாகாண பணிப்பாளர்"" எனக் குறிப்பிடப்படும்) அவர் வடக்கு மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் தலைவராக இருக்க வேண்டியதுடன் செயலாளரின் மேற்பார்வை மற்றும் வழிகாட்டுதலின் கீழ் இந்நியதிச் சட்டத்தின் ஏற்பாடு களை நடைமுறைப்படுத்த வேண்டும்" எனக்குறிப்பிடும் அதே வேளை பிரிவு 5. (1) "யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களுக்காக முறையே ஐந்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் இருக்க வேண்டும்" என குறிப்பிடுகிறது. இங்கு திணைக்களங்களுக்குப் பணிப்பாளர்கள் 'இருக்கவேண்டும்' எனச் சொல்லப்பட்டுள்ளதே தவிர 'நியமிக்கப்படலாம்' எனக் குறிப்பிடப்படவில்லை என்பதை நாம் அவதானிக்கலாம்.

### ஆளுநருக்கு அதிகாரமில்லை

எனவே வடக்கு மாகாணசபையும் அனைத்து இலங்கைச் சேவையினைச் சார்ந்த உத்தியோகத்தர்களை நியமிக்கும் அதிகாரத்தினை வடமாகாண ஆளுநருக்கு வழங்கவில்லை.எனவே வைத்தியர்கள் அனைத்து இலங்கை சேவையினைச் சேர்ந்தவர்களாயின் அவர்களது நியமனமானது மாகாண ஆளுநரால் மேற்கொள்ளப்படமுடியாது என்பது இவற்றிலிருந்து தெளிவாகிறது.

25.11.2011 பொதுச்சேவைகள் ஆணைக்குழுவினால் அரசியல் அமைப்பின் பிரகாரம் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 11.10.2014 அன்று பொதுச்சேவைகள் ஆணைக்குழுவினால் வர்த்தமானி அறிவித்தலின்மூலம் வெளியிடப்பட்ட இலங்கை மருத்துவ சேவையினருக்கான சேவைப் பிரமாணக் குறிப்பு ஆகியவற்றின் அடிப்படையில் இலங்கை மருத்துவ சேவை ஆளணியினர் அனைத்து இலங்கை சேவையினைச் சேர்ந்த உத்தியோகத்தர்களாகவே வரைவிலக்கணம் செய்யப்பட்டுள்ளனர்.

ஒட்டுமொத்தத்தில் ஒரு சில வைத்தியர்களது வருடாந்த இடமாற்றத்தில் ' தொடங்கிய முரண்பாடானதுமத்திய சுகாதார அமைச்சு மாகாண ஆளுநரது ஒப்புதலைக் கோராது செய்த வைத்தியர் சத்தியமூர்த்தியின் தற்காலிக நியமனத்தால் தீவிரமடைந்து, முதுகெலும்பும் தூரநோக்கும் இல்லாத வடக்கில் உள்ள சில உயர் அதிகாரிகளது ஒட்டுமொத்த பலவீனங்கள் மற்றும் குள்ள நரித்தனங்கள் காரணமாக இன்று சந்தி சிரிக்கும் நிலைக்கு வந்துள்ளமையானது தமிழினம் தற்போது அடைந்துள்ள இழிநிலைக்கு நல்ல உதாரணமாகும்.

இப்போதாவது வடக்கில் உள்ள உயரதிகாரிகள் மக்களது நலனை முன்னிறுத்தித் தூரநோக்குடன் சிந்தித்து இந்தத் தேவையற்ற சிக்கலிற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்பதே உள்விடயங்களை நன்கு அறிந்தவர்களது அபிப்பிராயமாக உள்ளது. ■



# முஸ்லிம்களை பயங்கரவாதிகளாக சித்திரிப்பது தவறு!

## கொந்தளிக்கிறார் ரிஷாட் பதியூதீன்

நேர்காணல்:
குறிஞ்சிப் பார்த்தன்

**ஏப்ரல் 21ஆம் திகதி நடத்தப்பட்ட உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பின்னர் முஸ்லிம் மக்கள் மீதான வெறுப்புணர்வு பலரிடம் அதிகரித்துள்ளது. இதன் ஒரு கட்டமாக முஸ்லிம் அரசியல்வாதிகள் மீது தீவிரவாதச் செயற்பாடுகளுக்கு உதவியதாக குற்றச்சாட்டுகள் அரசியல்வாதிளாலும், சில அமைப்புகளாலும் முன்வைக்கப்பட்டுவருகின்றன. இந்நிலையில் அரசாங்கத்தில் அங்கம் வகித்த அனைத்து முஸ்லிம் அமைச்சர்களும் (பிரதி, இராஜாங்க அமைச்சர்கள் உள்ளடங்கலாக) தமது பதவிகளை இராஜிநாமா செய்தனர்.**

**இந்நிலையில், பதவியை இராஜிநாமா செய்த, அமைச்சர்களில் ஒருவரும், குற்றச்சாட்டுக்களை எதிர்நோக்கியுள்ளவருமான, முன்னாள் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் வழங்கிய செவ்வி.**

**கேள்வி :** உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப்பின் இன்று இஸ்லாமிய சமூகமும் எதிர்கொண்டுள்ள இக்கட்டான சூழலை எப்படி விளக்குவீர்கள்?

**ரிஷாட் பதியுதீன் :** உயிர்த்த ஞாயிறு தாக்குதலுடன் முஸ்லிம் பெயர் தாங்கிய சிலர் தொடர்புபட்டுள்ளமையால் முழு முஸ்லிம் சமூகமும் பெரும் சிக்கல்களை எதிர்நோக்கியுள்ளது. ஒரு சில இனவாத சக்திகள் முழு முஸ்லிம் சமூகத்தையும் இந்தத் தாக்குதல்களுடன் தொடர்புபடுத்தி பழி வாங்கும் செயல்களை முன்னெடுத்துள்ளனர். அதனால் முழு முஸ்லிம் சமூகமும் பாதிக்கப்பட்டுள்ளது. அவர்களின் வியாபார நடவடிக்கைள் முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களது ஆடை தொடர்பிலான விடயங்களில் அவர்கள் துன்புறுத்தலுக்குள்ளாகின்றனர். கூலித் தொழிலாளிகள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். அனைத்து மத மக்களுக்கும் அவர்களது மதத்தினை பின்பற்ற பூரண சுதந்திரம் காணப்படுகின்றது. எனினும் முஸ்லிம்களுக்கான தனித்துவமான சட்டங்களில்கூட இப்பொழுது கைவைக்கின்றனர். ஒருசில பேரினவாத சக்திகள் இந்தச் சந்தர்ப்பத்தினை பயன்படுத்த முனைகின்றனர். முஸ்லிம் அரசியல்வாதிகள் மீது தேவையற்ற குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். வடமேல் மாகாணத்தில் முஸ்லிம்களின் கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. 29 பள்ளிவாசல்களை சேதமாக்கினர். ஒருவர் படுகொலை செய்யப்பட்டுள்ளார். பலர் காயமடைந்துள்ளனர். இவ்வாறு தொடர்ச்சியாக பல இன்னல்களுக்கு முஸ்லிம்கள் இன்று முகங்கொடுத்துள்ளனர்.

**கேள்வி :** பொதுவாக இன முரண்பாடுகள் தோன்றுவதற்கு என்ன காரணம் என எண்ணுகிறீர்கள்?

**ரிஷாட் பதியுதீன் :** முதலில் நாட்டு மக்கள் அனைவரும் இலங்கையர் என்ற உணர்வுடன் செயற்பட வேண்டும். அவரவர் அவர்களது மதத்தை, மொழியைப் பின்பற்றலாம். எனினும் ஏனைய மக்களை அவமதிக்கும் செயல்கள் தொடர்கின்றன. ஆகவே அதனை நிறுத்திக்கொண்டு, அனைவரையும் சமமாக மதிக்கும் நிலைமை உருவாக வேண்டும். அதனைவிட இந்த நாட்டில் வாழும் பெரும்பான்மையின சிங்கள பௌத்த மக்களும், இந்துக்களும், முஸ்லிம்களும், கிறிஸ்தவர்களும் ஒற்றுமையாக வாழ்வதற்கு, அரசியல்வாதிகள் வாய்ப்பளிக்க வேண்டும். அவர்கள் தமது அரசியல் நோக்கங்களை கருத்திற்கொண்டு செயற்படுவதைத் தவிர்க்க வேண்டும். மதத் தலைவர்கள் அரசியல் ரீதியாக செயற்படுவதை தவிர்க்க வேண்டும்.

**கேள்வி :** பல்லின மக்களைக் கொண்ட இலங்கை போன்ற நாடுகளில் இன மத முரண்பாடுகளுக்கு அரசியல்வாதிகளின் செயற்பாடுகளே காரணமெண்பதும் பொதுவான குற்றச்சாட்டு. குறிப்பாக அவர்கள் வாக்குகளைப் பெறுவதற்காக பிரித்தாளும் உபாயத்தை கையாள்வதாக குறிப்பிடப்படுகின்றதே.?

**ரிஷாட் பதியுதீன் :** தான் சார்ந்த அல்லது தான் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற சமூகத்திடம் வாக்குகளை பெற முயல்வது பிழையல்ல. எனினும் மதவாதத்தை, இனவாதத்தை பரப்பி வாக்குகளை பெற்றுக்கொள்வது தவறான விடயம். இலங்கையின் இரு பிரதான கட்சிகளைத்தாண்டி ஏனைய கட்சிகள், இனங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளாகவே காணப்படுகின்றன. தமிழ்ச் சமூகமும் உரிமைக்காக 30 வருட ஆயுதப்போராட்டத்தை முன்னெடுத்த வரலாற்றை நாம் கண்டிருக்கின்றோம்.

யுத்தத்தின் பின்னராக காலப்பகுதியில் முஸ்லிம் சமூகத்தை தீவிரவாதிகளாக காட்டும் நிலைமையும் உருவாகியுள்ளது. இவ்வாறான ஒரு சூழலில் இன ரீதியாக, அரசியலில் ஒன்றிணைவதில் பிழையில்லை. இதுவொரு ஜனநாயக நாடு. ஆகவே யாரும், எந்தவொரு மக்கள் சார்பாகவும் முன்னின்று செயற்பட முடியும். வாக்குகளைப் பெறுவதற்கு இனத்துக்காகச் செயற்படலாம். ஆனால், இனவாதமாக செயற்பட முடியாது. அதற்கென ஒரு சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். ஒரு சட்டம் கொண்டுவரப்படும் பட்சத்தில், இனவாத அரசியல்வாதிகளுக்கும், மதவாதிகளுக்கும் அவர்களது செயற்பாடுகளை முன்னெடுக்க முடியாத சூழல் உருவாகும்.

**கேள்வி :** நாட்டில் இனங்களை பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கட்சிகளை தடை செய்ய வேண்டுமென்ற ஒரு கருத்து உருவாகியுள்ளதே..?

**ரிஷாட் பதியுதீன் :** இதுவொரு சிறுபிள்ளைத்தனமாக கருத்து. இந்த நாட்டில் வாழும் ஒரு இனம், தமக்கென ஒரு கட்சியை உருவாக்குவதற்கான உரிமை இருக்க வேண்டும். இவ்வாறான கட்சிகளால் தீவிரவாதத்தை தடுக்க முடியுமெனக் கருதினால் அது சிறுபிள்ளைத்தனமான விடயமாகவே இருக்கும். தாக்குதல் நடத்திய எவரும், ஒரு கலாசாரத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் வரவில்லை. மேற்கத்தேய பாணியிலேயே அவர்கள் வந்திருந்தார்கள். ஆகவே இந்தத் தாக்குதல்களை வைத்துக்கொண்டு இவ்வாறு கருத்து வெளியிடுவது இன, மத முரண்பாட்டை மேலும் அதிகரிக்கும் என்பதே எனது கருத்து.

**கேள்வி :** உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் உங்கள் பெயரையும் இணைத்து தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றனவே. இதுத் தொடர்பில் உங்கள் கருத்து?

**ரிஷாட் பதியுதீன் :** என் மீது நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்சவே குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார். கடந்த காலத்தில் ஏற்பட்ட ஆட்சிமாற்றத்தின் (ஒக்டோபர் 26, 2018) போது எங்களது ஆதரவை எதிர்பார்த்தனர். எனினும் அது சாத்தியப்படவில்லை. அந்த கோபத்தில்தான் அவர்கள் எம்மீது குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றார்கள். எமது கட்சி குறுகிய காலத்தில் அதீத வளர்ச்சியை கண்டுள்ளதை அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. என் மீது பொலிஸாரோ, இராணுவமோ குற்றச்சாட்டுக்களை முன்வைத்தால் ஏற்க முடியும். எனினும் ஒரு எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களேஇவ்வாறு குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். அடிப்படைவாத அமைப்புக்களான, ராவணா பலய, பொதுபல சேனா போன்ற கட்சிகளே குற்றச்சாட்டுக்களை முன்வைக்கின்றனர். இவைகள் ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்களே. 3,000ற்கும் மேற்பட்டவர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளார்கள். பலர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். பலர் தடுத்துவைத்து விசாரணைக்கு உட்படுத்தப்படுகின்றனர். எனினும் இதுவரை என்னிடம் ஒரு விசாரணைகூட இடம்பெறவில்லை.

**கேள்வி :** இனவாத முரண்பாடுகளை முடிவுக்கு கொண்டுவர அரசாங்கமும் சிவில் சமூக பிரதிநிதிகளும் முயற்சித்தாலும். அவை செயற்பாட்டு ரீதியில் வெற்றியளிக்கவில்லையே. இதற்குக் காரணம் என்ன என்று நினைக்கிறீர்கள்?

**ரிஷாட் பதியுதீன் :** பிளவுபட்டுள்ள மக்களை ஒன்றுசேர்ப்பது ஒரு கடினமான பணி. எனினும் தற்போதைய சூழ்நிலையில் அமைச்சர் மனோ கணேசன் சில விடயங்களை வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளார். அது வெற்றியளிக்கவில்லை எனக் கூற முடியாது. அது போதுமானதாக இல்லை என்றே கூற வேண்டும். இனவாத, மதவாத சக்திகள் இந்த நாட்டை அழித்தொழிக்கும் பணிகளை முன்னெடுக்கின்றன. ஆகவே அவற்றைக் கண்டறிந்து அந்த சக்திகளை இல்லாதொழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள .வேண்டும். இனங்களுக்கு இடையில் முரண்பாட்டைத் தோற்றுவிக்கின்ற சக்திகளை கண்டறியவேண்டும். உண்மையில் அந்த விடயத்தில் பல வருடங்களாக அரசாங்கங்கள் தோல்வியடைந்துள்ளன எனக் கூற முடியாது. வெற்றியடைந்தது போதாது எனக் கூறுவது சரியாக இருக்கும்.

**கேள்வி :** ஏற்கனவே நாட்டு மக்கள் அனைவரும் இலங்கையர் என்ற உணர்வுடன் செயற்பட வேண்டும் என்று கூறினீர்கள், ஆனால் இங்குள்ள இஸ்லாமிய மக்கள் இலங்கை மக்களைவிட இஸ்லாமிய கலாசார நாடுகளில் உள்ள மக்களுடன்தான் ஒன்றித்து வாழ்கின்றனர் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுவருகிறது. அது பற்றி?

(12ஆம் பக்கம் பார்க்க)



# விடலையும் காதல் படலையும்..

வேதநாயகம் தபேந்திரன்

"சேர் வயித்துக்குத்து. அதால தான் நேற்று வரேல்லை." "உண்மையாத் தான் சொல்லுறியோ. சரி சரி வகுப்பில இரு. வகுப்பு முடிஞ்சு போகேக்கை போன கிளாஸ் வந்த ஒராளிட்ட கொப்பி வாங்கி எழுது" கடைசியாகச் சொன்ன வசனம் அவனுக்குத் தேனாக இனித்தது. அதற்காகத் தானே வராமல் வீட்டில் நின்றான்.

வகுப்பு முடிந்தது. தனது விருப்பத்திற்குரியவளிடம் போய் "கொப்பியை ஒருக்காத் தாங்கோ என மசிஞ்சு மசிஞ்சு" போனகிளாஸ் வராத நோட்சை எழுதிப் போட்டு நாளைக்கு வகுப்புக்கு வரேக்கை தாறன்." அவளும் மௌனமாகக் கொப்பியைக் கொடுத்தாள். அவளுக்கு என்னில விருப்பம் இருந்ததால் தானே கொப்பியைத் தந்தவள் என ஆனந்தப்பட்டான்.

கொப்பியை வாங்கிச் சென்று நோட்சை எழுதும் போது சந்தோச வெள்ளம் பெருக்கெடுத்தது. தனது விருப்பத்தைத் தெரிவித்து கடிதம் ஒன்றையும் எழுதிக் கொப்பிக்குள் வைத்தான். எப்பயடா விடியும். ரியூசன் நேரம் வருமெனக் காத்திருந்தான். வழமையை விட அரைமணி நேரம் முந்தி ரியூசனுக்குப் போனான்.

"நீ வருவாயென நானிருந்தேன்..." எனும் பாடலை மனதுக்குள் முணுமுணுத்தான். ரியூசன் தொடங்க 5 நிமிடம் இருக்கும் போது அவள் வந்தாள். அவள் தூர வரும் போதே மனதில் ஒரு படபடப்பு. கிட்ட வந்ததும் ஒரு வெடவெடுப்பு.

கொப்பியைக் கொண்டு போய் உள்ளுக்குள் இருந்த "அது" விழாமலிருக்க கையில் கொடுத்தான். "தாங்ஸ்" என்று ஒரு ஒற்றைச் சொல்லைச் சொன்னான். அவளும் மெல்லிய புன்முறுவலுடன், போனாள். இவனுக்குள் ஆயிரம் 'வோல்ற்' பல்ப் எரிந்தது போல ஒரு பிரகாசம். அவளுக்கு என்னில விருப்பம் இருக்குது எனக் கற்பனைக் கோட்டையைக் கட்டினான். வகுப்பு நடந்தது. பாடத்தில் அவன் மனது இல்லை. அவளது பக்கம் திரும்பிக் கடைக்கண் சென்றது.

அவளோ ஒன்றையும் கவனிக்காமல் இருந்து படித்தாள். ரியூசன் முடிந்தது. அவள் ரியூசன் அலுவலகத்தினுள் சென்றாள். ஓரிரு நிமிடங்களுக்குப் பின்பாக சைக்கிளை எடுத்துக் கொண்டு நண்பிகள் சகிதம் வெளியேறி விட்டாள்.

பாடங்கள் முடிய நண்பர்களுடன் வீட்டிற்குப் போகலாமென சைக்கிளை எடுக்கச் சென்ற போது ரியூசன் டிறெக்ரர் வரட்டாமென ஒருவன் சொல்ல அலுவலகம் சென்றான்.

அங்கே டிறெக்ரரது கையில் அவனது காதல் கடிதம் இருந்தது. அவர் அதை வாசித்தார்.

"அன்புள்ள கதலிக்கு..." என ஆரம்பித்த கடிதத்தை தொடர்ந்து வாசித்தார். இவனது இதயமோ கண்ணிவெடியில அகப்பட்ட கவச வாகனம் போல சிதறிவிட்டது. படபடத்தான். நடுங்கினான்.

ஆனால் ரியூசன் டிறெக்ரரோ மெல்லிதாகச் சிரித்துக் கொண்டு " தம்பி முதல்ல காதலி என்று சரியாக எழுதப்பழகு. கதலி என்று எழுதினால் படிக்கக் கூடிய பிள்ளைஅவள். உன்ர கல்வித் தரத்தை நினைச்சு உன்னை ஏளனமாயெல்லோ பார்ப்பாள்." என்று சொல்லிவிட்டு" இந்த வயசில காதல் வருவது இயல்பு தான். இதை விட்டுப் போட்டு வடிவாகப் படி தம்பி" என முதுகில தட்டிக் கொடுத்தார். தண்டனையின்றி அவர் கொடுத்த ஆலோசனை அவனைப் படிப்பில் கவனத்தைக் கொடுத்தது.

ஓஎல், ஏஎல் பரீட்சைகளில் நல்ல பெறுபேற்றை எடுத்தான். பல்கலைக்கழகமும் சென்று உயர்ந்தான். காலம் செய்த கோலம் அவனது விடலை மனதில் காதல் படலையைத் திறந்தவள் மணமகளாக புலம்பெயர் தேசத்திற்கு அனுப்பி வைத்தது.

அவனும் தனது தகுதியால் நல்லதொரு வரனைப் பெற்று வளமாக வாழ்கிறான். என்றாலும் முதல் காதல் ரகசியமாக மனதில் இடையிடையே எட்டிப் பார்க்கிறது.

* * * *

அது ஒரு ஏல் வகுப்பு ரியூசன்.

அங்கு படிக்கச் சென்ற அவனுக்கு அவளில ஒரு மையல். அடிக்கடி அவளைப் பார்ப்பதில் அவனுக்கு ஆனந்தமல்ல, பேரானந்தம் கிடைத்தது. அவனது நட்பு வட்டமும் அவனது மனஓட்டத்தைப் புரிந்து நையாண்டி பண்ண இவனும் கற்பனைகளை வளர்த்துக் கொண்டான். வகுப்பில் வராத நாளுக்கு வந்தவர்களிடம் கொப்பி வாங்கும் பழக்கம் இருந்தது.

அவனும் ஒரு நாள் வேண்டுமென்று கட் அடித்து அவளிடம் தயங்கித் கொப்பி கேட்டான். அவளோ வசீகரப் புன்னகை ஒன்றைப் பொன்னகையாக வீசிவிட்டு கொப்பியைக் கொடுத்தாள். உலகை வென்ற புளுகமாக இவனும் கொப்பியை வாங்கிச் சென்றான். அன்று முழுக்க அந்தக் கொப்பியை அடிக்கடி பார்த்துக் கொண்டேயிருந்தான்.

தனது உள்ளக்கிடக்கையை "காகிதத்தில் எழுதினால் கசங்கிப் போய் விடுவாயென்று உன்னை இதயத்தில் அல்லவா எழுதி வைத்திருக்கிறேன்" எனக் கவிதையாக வடித்து கடிதம் ஒன்றை உள்ளே வைத்தான். அடுத்த நாள் படபடத்த நெஞ்சுடன் கொப்பியைக் கொடுத்தான். வகுப்பில் தவிப்புடன் இருந்தான்.

வகுப்பு முடிய அவள் வந்தாள். உங்களோட ஒரு கதை என்றாள். அவனது நண்பர்கள் காதல் கனிந்ததாக விலகிச் சென்றார்கள். "வெரிசொறி எனக்கு விருப்பமில்லை " எனச் சொல்லி அவனது காதல் தூதை அவனிடமே திருப்பிக் கொடுத்தாள். "வெரிசொறி விருப்பமில்லை" என்ற சொல் இவனது நட்பு வட்டத்தில் ஒருவனது காதில் விழுந்து விட்டது.

அதற்குப் பிறகு அவன் பகிடி, பம்பல் ஏதும் செய்தால் நண்பர்கள் "வெரிசொறி." எனச் சொல்லிப் பம்பல் அடிக்க இவன் வெட்கத்தால் அடங்கிப் போவான்.

* * * *

ஓஎல் படித்த காலம். அது ஒரு ரியூட்டரி.

அவனுக்கு அவளில சரியான விருப்பம் நண்பர்களிடம் தனது ஆசையை இடையிடையே பகிர்ந்து கொள்வான். அவன் வகுப்பில் இருந்த நேரம் பார்த்து சகபாடி ஒருவன் வேண்டு மென்றே பிந்தி வந்து அவளது சைக்கிள் சீற்றில் அவனது பெயரை பேனையால் எழுதி விட்டார்கள். வகுப்பு முடிந்தது. அவள் அதைப் பார்த்தாள். எள்ளும் கொள்ளும் வெடிக்க வீட்டுக்குச் சென்றாள்.

உயர் பதவி வகிக்கும் அவளது அத்தான் வந்து முறைப்பாடு செய்தார். அவனை வகுப்பில் இருந்து நீக்க டிறெக்ரர் முடிவு எடுத்தார்.

அவனது சகபாடிகள் முழுப்பேரும் தாங்கள் அந்த ரியூட்ரியை விட்டுப் போகப்போவதாகக் கூற தண்டனை ஏதுமின்றி அந்தப் பிரச்சினை முடிவுக்கு வந்தது. கிடுகுக் கொட்டில் போட்ட ரியூட்டரி, அந்தக் கொட்டிலின் கூரை மரங்கள் நீளத்திற்கும் சோக்கட்டியால் சோடிப் பெயர்கள் எழுதப்பட்டிருக்கும். வகுப்பில் யாரும் இல்லாத நேரம் பார்த்து மின்னலெனச் சோக்கட்டியால் சோடி கட்டி எழுதுவதில் ஓர் இன்பம்.

சோடி கட்டிய பெயரைப் பார்த்து மனதில் சோடி கட்டியவர்கள் சிலர் இருந்தார்கள். சோடி கட்டிய வெட்கத்தில் ரியூட்டரியை விட்டு மாறிப் போனவர்களும் இருந்தார்கள்.

வகுப்பு முடிய நசிந்து நசிந்து நின்று கரும்பலகையில் சோடி கட்டிப் பெயரை எழுதி விட்டுப் போன 'த்றில்' மாணவர்களும் இருந்தார்கள்.

வகுப்பு முடிய பின்னாலும் முன்னாலும் கலைத்து வந்து பாதுகாப்பாக வீடு வரை விட்டுச் சென்ற இலவச பாதுகாப்புச் சேவையும் நடந்தது.

பின்னால் சென்று தூரத்தே நின்று பெயர் சொல்லி கூவடித்து மகிழ்ந்த காலம் அது. சினிமாப் பாடல்களைப் பொருத்தமாக "அமைதிக்குப் பெயர் தான் சாந்தி. அந்த அலையினில் வந்தவள் சாந்தி. "

"ராசாத்தி உன்னைக் காணாத நெஞ்சு காத்தாடி போலாடுது.." என்று தான் நேசிக்கும் பாவையவளின் பெயரைக் குறிக்கும் பாடலைப் பாடி மகிழ்ந்ததும் அந்தக் காலம்.

பதின்ம வயதில் காதல் கொண்ட சில பாவையவர்கள் புலம் பெயர் நாடுகளிலிருந்து திருமணப் பேச்சு வந்தவுடன் உள்நாட்டுக் காதலுக்கு 'ரற்றா' காட்டி விட்டு பிளேன் ஏறிப் பறந்ததுவும் நடந்தது.

ரியூட்டரியில் வருடாந்த ஒன்றுகூடல் நடந்தால் குறூப் போட்டோ எடுக்கும் வேலை நடக்கும், அப்போது தான் நேசித்தவளின் நேர் பார்த்து நின்று மகிழ்ந்த காளையரும் உண்டு.

தான் நேசித்தவளின் வாய்மொழியாக Happy many many returns of the day எனப் பிறந்த நாள் வாழ்த்துக் கேட்பதற்காக வருடத்தில் இரண்டு தடவை பிறந்த நாள் கொண்டாடிய விசித்திரங்களும் நடந்தது.

கோயில் திருவிழாக்கள், ஊர்ப்பொது விழாக்கள் எங்கும் கண்களால் தேடியலைந்த பருவமும் அது. பதின்ம வயதுக் காதல் உணர்வுகள், அவற்றின் வெளிப்பாடுகள் தனியான சுவையான வரலாறு தான். எத்தனை தான் வயது வந்தாலும், வளர்ந்தாலும் கள்ளம் கபடமற்ற அந்த 'ரீன்ஏஜ்' வயது நினைவுகள் மனிதின் ஓர் மூலையிலிருந்து அடிக்கடி எட்டிப் பார்க்கத் தான் செய்யும். தலைமுறைக்கு தலைமுறை இதன் வெளிப்பாடுகள் மாறும்.

1980களின் தலைமுறையின் நினைவுகள் அவை. ■

# ஈரநிலம்

நிலம் 22

● ஆதம்

அவனது கேள்வி வழியை இவனுக்குள் விதைத்து விட்டது போல் வசந்தனால் உடனடியாக இந்தப் பதிலையும் சொல்லிக் கொள்ள முடியவில்லை. உள்ளுக்குள் புகைந்துகொண்டிருக்கும் ரணங்களை எப்படி இப்போது கொட்ட முடியும்? இவன் இருக்கும் நிலையில் சொல்வதென்று வசந்தனால் என்னமுடியவில்லை.

கடவுளே இந்தச் சந்தர்ப்பத்தை எப்படியாவது கடத்தி விட மாட்டாயா என்று மன்றாடிக்கொண்டிருந்தான்.

போர்க்கால வழிகளை எண்ணி எண்ணி உள்ளூர துடித்துக்கொண்டிருக்கும் லட்சக்கணக்கானவர்களில் இவை மட்டும் விதிவிலக்கா என்ன? அந்தளவுக்கு சொல்லொணாத் துன்பங்கள். ஆனாலும், அவைகளை எப்படி கொட்டித் தீர்ப்பது? யாரிடம் கொட்டுவது? சொல்லியும் என்ன பயன்? ஏதுமில்லையே!!

வசந்துக்கு அத்தனை போர்ப் புகை வெம்மையிலும் உடலெங்கும் வேர்த்தது. என்ன பதில் சொல்வது? நட்சத்திரனும் வெறித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறான். அந்தப் பதிலுக்காக ஆவல் ததும்ப காத்திருக்கிறான் அவன்.

ஐயோ!!

இந்த கையறு நிலையை எப்படி என்னால் கடந்து போக முடியப்போகிறது? ஆண்டவரே... என்ன கொடுமை இது..?



"இல்லையடா நட்சா, அவங்கள நான் கடைசியா அலம்பிள்ளை கண்டனான். அதுக்குப் பிறகு இன்னும் எங்கையும் காணேல்லடா... போற வார இடங்களில் தேடிக்கொண்டுதானிருந்தான். இன்னும் கிடைக்கையில்ல. என்ன செய்ய? இனியும் போற இடமெல்லாம் தேடுவான். நீ கவலைப்படாத. எங்கட அளம்பில் ஆக்கள் கொஞ்சப்பேர் மாத்தளன் பக்கம் இருக்காங்களாம். முள்ளிவாய்க்காலிலையும் இருக்கினமாம். அதுக்குள்ளே எங்கையும் இருப்பாங்க. கவலைப்படாத நண்பா..." தன் நண்பனை அள்ளி அணைத்துக் கொண்டான்.

அவன் ஏதோ மறைக்கிறான் என்று இவனுக்கு புரிந்து போனாலும், இதற்கு மேல் அவனை தர்மசங்கடப்படுத்த நட்சத்திரன் விரும்பவில்லை.

"எங்கடா போறீங்களா இப்ப..." என்றவரிடம், வசந்தனின் அக்கா "இல்ல தம்பி, அங்கால இருக்க ஏலாதாம். அதான் மாத்தளன் சாலை பக்கம் இருப்பம் என்று போறம்.." என்று தழுதழுக்க கூறி மூக்கைச் சிந்தி எறிந்தாள்.

"இல்ல மோனாக்கா! அங்கால சாலைக்கு எல்லாம் போகாதீங்க, அங்காள அடிபாடு கூட. இங்கால மாத்தளன் பக்கம் இருங்கோ. எனக்கும் ஏன்டா ஆக்கள் யாரும் பக்கத்தில பாக்கிறதுக்கும் இல்ல. நீங்களெண்டாலும் இருங்க." அவன் சொல்லிவிட்டு வலியோடு விழித்தான்.

"சரியடா, நாங்கள் இங்காலதான் விருப்பம். நீங்கள் அந்தப் பக்கம் வந்தால் வாங்க. நான் நாளைக்கு வாறன் இப்போ போனால்தான் ரெண்ட் அடிக்கலாம். அப்பாக்கும் ஏலாதுடா.. கவனமா இரு. நாளைக்கு வந்து பாக்குறான் உங்கள் எல்லாரையும்... " கரங்களை பற்றி விடைகொடுத்தான் வசந்தன்.

வந்தவர்களைமனமின்றி அனுப்பி வைத்து விட்டு, மறையும் வரை அவர்களையே பாத்துக்கொண்டிருந்தான் இந்த வெறுவானில் காயும் நட்சத்திரமான நட்சத்திரன்.

ஆனாலும் அடுத்தநாளே அந்த செய்தி வருமென்று அவர்களும் அவனும் எதிர்பார்க்கவில்லை. ஆனாலும், நடந்து விட்டது.

(நனையும்...)

# பறந்து போன இலையான் 'கேஸ்!'

முந்தின காலத்திலை ஜே.ஆரைத் தான் நரியன் எண்டு கதைச்சவை. இப்ப எங்கடை ஆளைத்தான் பழுத்த நரியன் எண்டு எழுதத் துவங்கிவிட்டினம். என்ன டாப்பா..! மாநாட்டுக்கு அந்தாள் வந்திருந்தார் பாத்தனியளே? அந்தாளோடை பாக்கேக்கை பக்கத்திலை நிண்ட சுமந்திரனைப் பாக்கக் கிழவன் மாதிரிக் கிடந்திது. மாவை தன்ரை தேர்ச் சட்டம் மாதிரியான உடம்பைத் தூக்கிக் கொண்டு நடக்கப்பட்ட பாடு. உவன் எங்கடை சயந்தன் தான் சால்வையையும் போட்டுக் கொண்டு குட்டிச் சிங்கம் மாதிரி..! இனி மேல் மாவைக்கு ஆப்போ தெரியாது?

இப்ப மாநாடு நடத்தியாச்சு. பல கதையளையும் சொல்லிப்போட்டினம். பலதைத் தாங்கள் விட்ட பிழை எண்டு ஒத்துக் கொள்ளேல்லை. இன்னும் முண்டு குடுப்பம் எண்ட மாதிரித்தான் அவையின்ரை பேச்சும். எட சுறணை இல்லாத சீவன்கள் நீங்கள். உங்களுக்கும் சுறணை இல்லை. எங்களுக்கும் சுறணை இல்லை. எல்லாரும் கோமாக் கேசுகள் மாதிரித்தான் பாக்கத் தெரியிது. இப்ப திருப்பியும் 'கைபருக்கு'வந்து நிக்கினம்.

சரி மத்தியைத்தான் விருங்கோவன். நேற்று வந்த கவர்னர் என்ன ஆட்டம் ஆருறார். அதைத் தன்னும் கேக்க நாதியில்லாத செம்மறிக் கூட்டம் எண்டு சனம் சொல்லுதுகள். அந்தாள் கலாநிதி எண்ணுது. ஆனால் அருவரி படிச்ச மாதிரித்தான் நடக்கிறார் எண்டு சனம் சொல்லுது. பள்ளிக்கூடத்திலை வாத்தியார் பிள்ளையளைப் பேசுறமாதிரி குரங்குக் குட்டியள் மாதிரி எண்டு கூட்டத்திலை அதிகாரியளைப் பேசுறாராம். அவையும் காலமை எழும்பிக் குளிச்சு முழுகி வெள்ளை சொள்ளையா வெளிக்கிட்டு ரையும் கட்டிக் கொண்டு போய் உப்பிடிப் பேச்சு வேண்டிக் கொண்டு வாற தெண்டால்...? உதுக்கொரு கணக்கு வழக்கு வேணும் எல்லே..!


ஆனால் அந்தாளும் முழுக்கப் பிழை விடுறதா எடுக்கப்பிடாது. எங்கடை சனமும் அப்பிடித்தான். சிலது படு ஊத்தையள் மாதிரித்தான் நடப்பு. காரியாலய வேலையிலையும் ஆகக் கழிசறையள் மாதிரி நடக்கின மெல்லே? சனத்துக்கு வேலை செய்யத்தான் உவையளைச் சம்பளம் குடுத்து வைச்சுக் கிடக்கு. ஆனால் அவை சனத்தைப் போட்டுப் படுத்தாத பாடு படுத்திப் போட்டுத்தான் அவையின்ரை வேலை வெட்டியளைச் செய்து குடுக்கினமெண்டு முதலி சொல்லுறான்.

சனத்தை நல்ல வழியிலை நடத்துங்கோ எண்டுதான் உவைக்குச் சம்பளம் குடுத்து வைச்சிருக்கினம். ஆனால் உவையளிலை பலர் பொலிஸ்காரர் மாதிரிச் சனத்திலை பிழையளைப் பிடிச்சு, அவைமேலை வழக்குகளைப் போட்டு ஏதோ குண்டு வைக்கப் போனவனைப் பிடிக்கிற மாதிரி எல்லே திரியினம்.

எங்கடை பொதுச் சுகாதாராப் பரிசோதகரை எடுத்துக் கொள்ளுங்கோ பாப்பம். காலமை எழும்பிப் பொலிஸ்காரர் போட்ட மாதிரி ஒரு காக்கிச் சட்டையையும் கொழுவிக் கொண்டு வெளிக்கிடுவினம். ஆர் சாவினம் எண்டு பாத்துக் கொண்டு காத்திருக்கிற சவப்பெட்டிக் கடைக்காரன் மாதிரி மோட்டச் சைக்கிளிலை வலம் வருவினம்.

ஏதாவதொரு சாப்பாட்டுக் கடைக்குள்ளை உள்ளிட்டால் ஏதாவதொரு பிழை பிடிக்கலாம் தானே. சும்மா சொல்லப் போனால் அண்டைக்குக் கனகர் கடைக்குள்ளை வந்து உள்ளிட்டாங்கள். வந்த ஆளிலை ஒருத்தன் சொன்னான் "தோசையை மூடேல்லை. இப்ப ஒரு இலையான் அதிலை இருந்தது" எண்டு கனகரிட்டைச் சொல்ல, கனகர் தோசையைக் காட்டிச் சொன்னார் " இப்ப இந்தாளுக்குத் தோசை குடுக்கத்தான் திறந்தனான்" எண்டு மூடியைக் காட்டினார்.

"இல்லை. இல்லை உப்பிடித் தோசையை வைச்சிருந்தது பிழை "எண்டு பரிசோதகர் வாதாடினார். "பின்னை எப்பிடி மூடியைத் துறக்காமல் கேக்கிறவைக்குத் தோசையை எடுத்துக் குடுக்கிறது" எண்டு கனகர் அவரிட்டைக் கேட்டார். "அது எனக்குத் தெரியாது. இப்ப கேஸ் எழுதப்போறன். தோசையிலை இலையான் இருந்த தெண்டு" எண்டு சொல்ல கனகர் வாதாடிப் பாத்தார். அங்கை சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒருத்தர் சொன்னார் "கனகர் ஒரு சைவக்காரன். வலு துப்பரவான ஆள். எங்கை அந்தாளின்ரை கடைக்கை ஒரு இலையானைக் காட்டு தம்பி" எண்டார். "அது அப்போதை இருந்தது. இப்ப பறந்து போட்டுது. நான் என்ன இலையானைப் பிடிச்சு வைச்சுக் கொண்டே கேஸ் எழுதிறது" எண்டார். பீ.எச்.ஐ. சனம் கதைக்க வெளிக்கிட "உங்கடை நன்மைக்குத் தானே நாங்கள் இப்பிடி எல்லாம் பாக்க வேண்டிக் கிடக்கு" எண்டு பீஎச்ஐ சொல்ல "ஆரை எண்டாலும் பிழை சொல்லுங்கோ. கனகரைத் துப்பரவில்லை எண்டு சொல்ல வேண்டாம். அவர் வலு கிளீன். நான் அவற்றை கடையிலை இப்ப இருவது வருசமாச் சாப்பிடுறன். ஒரு



நாளும் வயிற்றைப் பழுதாக்கேல்லை அந்தாளின்ரை சாப்பாடு. உங்கை கொத்து ரொட்டிக் கடையள் எல்லாரும் என்னத்தைப் போட்டுக் கொத்துறாங்கள் எண்டு பாத்தனியளே? அதைப் பாக்க மாட்டியள். அண்டைக்கு ஒரு பின்னேரம் போலை கே.கே.எஸ் ரோட்டிலை இருக்கிற கொத்து ரொட்டிக் கடை ஒண்டிலை உவையின்ரை ஆள் ஒராள் வந்து பார்சல் வேண்டிக் கொண்டு போறதையும் பாத்தனான். பார்சலைக் குடுத்திட்டு கடைக்காரன் சொன்னான். பிராந்துகள். எவ்வளவு குடுத்தாலும் அண்டாது. குணத்தைக் காட்டிப் போடுங்கள் எண்டு சொன்னவன்" எண்டு கனகர் கடையிலை சாப்பிட்டுக் கொண்டிருந்த ஒராள் சொன்னார். உடனை பீ.எச்.ஐ கனகரைப் பாத்துச் சொன்னார் "நான் போட்டு பெரியவரோடை வாறன், கதைக்க" எண்டு . அதுக்குப் பிறகு கேஸுமில்லை. போன ஆளைக் காணவுமில்லை.

- வில்லங்கம் விநாசி

# ஜனாதிபதித் தேர்
# இலவு காத்த




●எஸ். ரத்னஜீவன் எச்.ஹூல்

இலங்கையைப் பொறுத்தவரையில் நாங்கள் ஏதேனும் ஒரு சட்டவிரோதமான காரியத்தை செய்து அகப்பட்டுக் கொண்டால் அதனை எங்களால் "சமாளித்துக் கொள்ள முடியும்." நாங்கள் பெருமையாக அதனை "ஆசிய வழிமுறை" எனக் கூறிக் கொள்கிறோம். அதாவது, சட்டத்தை "மேலைத்தேய வழியில்" நிலைநிறுத்துவதாக நாங்கள் மறைமுகமாகச் சொல்கிறோம். அவ்விதம் நாங்கள் எங்களையே பாராட்டிக் கொள்ளும் சந்தர்ப்பத்தில் எமது ஜனநாயத்தை, எமது இறந்த காலத்துக்குச் சொந்தமான மானிய முறைப் புதைகுழியில் புதைக்கின்றோம் என்ற விடயத்தை நாங்கள் மறந்து விடுகின்றோம். தாங்கள் நிகழ்த்தும் எந்த ஒரு குற்றச் செயலையும் அவ்விதம் சமாளித்துக் கொள்ளக் கூடிய வல்லமையைக் கொண்டிருப்பவர்கள் யார்? எமது பெரியவர்கள் - ரத்ன தேரர் (எமது ஜனநாயத்தைச் சீர்குலைப்பதற்கு அவருக்கு இடமளிப்பதிலும் பார்க்க உண்ணாவிரதத்தினூடாக" உயிர் துறப்பதற்கு நாங்கள் அவருக்கு இடமளித்திருக்க முடியும்) மற்றும் ஞானசார தேரர் போன்ற மதகுருமார், பிரதமர், ஜனாதிபதி மற்றும் எமது ஆளும் வர்க்கம்.

பகிரங்கமாக இலஞ்சம் வாங்கும், எமது நண்பர்களையும், உறவினர்களையும் கொன்று குவிக்கும் அரசியல்வாதிகளுக்கு, அவர்கள் எமது மானிய முறை பிரபுக்களாக இருந்து வரும் ஒரே காரணத்திற்காக நாங்கள் வாக்களிக்கின்றோம். நாங்கள் அவர்களுக்கு மீண்டும் வாக்களிக்கின்றோம். அந்த விதத்தில் நாங்கள் எமது 71 வருட கால சுதந்திரத்தை வீணடித்துள்ளோம்.

## பணயக் கைதியாக பிடிக்கப்பட்டிருக்கும் வாக்குரிமை

ஜூன் 01ஆம் திகதி ஆரம்பிக்கும் வாக்காளர் பதிவு செயற்பாட்டுடன் இணைந்த விதத்தில் பல கிராம சேவை அலுவலர்கள் முஸ்லிம் குடியிருப்பாளர்கள் தொடர்பாக, தனியாகத் தகவல்களைச் சேகரித்து வருகின்றார்கள் என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. நாங்கள் வழங்கியிருக்கும் படிவத்துடன் மட்டும் தமது பணிகளை முன்னெடுப்பதற்கு கிராம சேவை உத்தியோகத்தர்கள் மறுப்புத் தெரிவித்துள்ளார்கள். உத்தியோகபூர்வமற்ற இரண்டாவது படிவத்தையும் தாம் பயன்படுத்த வேண்டும் என அவர்கள் சொல்கிறார்கள். அது கிராம சேவை உத்தியோகத்தர்கள் தன்னிச்சையான விதத்தில் கட்டளைகளுக்கு அடிபணிய மறுக்கும் ஒரு நிலையை காட்டுவதுடன், அதனை அவர்களால் சமாளித்துக் கொள்ளக் கூடியதாகவும் இருந்து வருகின்றது. ஏனெனில், இந்தப் படிவத்தை வடிவமைத்த ஒரு சில பெரும் புள்ளிகள் இதன் பின்னணியில் இருக்கின்றார்கள். அதற்கூடாக இப்படிக் கூறப்படுகிறது: "நீங்கள் வாக்களிக்க வேண்டுமானால் என்னைப் பின்பற்றி, இந்நாட்டு முஸ்லிம்களின் வாக்குரிமையை பறிக்கும் எமது இனவாத தலைமைத்துவத்தில் சேர்ந்து கொள்ளுங்கள். அவர்கள் தம்மைப் பதிவு செய்வதற்கு எதிராக அச்சுறுத்துவதன் மூலமும், தாம் வாழ்ந்து வரும் இடத்தை கூறுவதற்கு தயங்கச் செய்வதன் மூலமும் இதனை நாங்கள் செய்கின்றோம்".

## நாடாளுமன்ற மற்றும் மாகாண சபைத் தேர்தல்கள்

ஊவா மாகாணம் தவிர ஏனைய மாகாணங்களைப் பொறுத்தவரையில் மாகாண சபைத் தேர்தல்கள் நீண்டகாலம் தாமதம் அடைந்துள்ளன. கமிட்டி மட்டத்தில் சட்டத்தை மாற்றுவது தொடர்பாக சட்டமா அதிபர் (தற்போதைய பிரதம நீதியரசர்) சபாநாயகருக்கு பிழையான ஆலோசனையை வழங்கிய பின்னர் அரசாங்கம் புதிய மாகாண சபைச் சட்டத்தை அவசர அவசரமாக நிறைவேற்றியது. அந்தச் செயற்பாடு நிலையியற் கட்டளைகளுக்கு மாறானதாகும். அதன் மூலம் அவர் அரசாங்கம் எதிர்கொண்டிருந்த ஒரு சில பிரச்சினைகளை சமாளித்துக் கொள்வதற்கு உதவினார். எனினும், இந்தப் புதிய சட்டம், உள்ளூராட்சி சட்டம் தொடர்பாக இதே மாதிரியான மாற்றங்களை எடுத்து வந்திருப்பதன் மூலம் ஒரு நல்ல சட்டமாக இருந்து வருகின்றது. ஆகக்கூடுதலான வாக்குகளைப் பெற்று, முதலில் வருபவர் வெற்றியீட்டும் நிலை மற்றும் பழைய விருப்பு வாக்கு முறை என்பவற்றின் கலவையை இது வழங்குகின்றது. பெண்களுக்கான கோட்டாக்களையும் வழங்குகின்றது.

நாடாளுமன்றத்தில் இருக்கும் ஆட்கள் இந்தப் புதிய சட்டத்தை விரும்பவில்லை. ஏனெனில், அவர்களில் பெரும்பாலானவர்கள் பெண்களுக்காக தமது இடங்களை விட்டுக் கொடுக்க விரும்பவில்லை. அநேகமாக அந்தக் காரணத்தினால் தொகுதி நிர்ணய ஆணைக்குழுவினால் தேர்தல் தொகுதி எல்லைகள் உருவாக்கப்பட்ட பொழுது, நாடாளுமன்றம் அதற்கு அனுமதி வழங்கத் தயங்கியது. அச்சந்தர்ப்பத்தில் பிரதமரின் கீழான ஒரு கமிட்டி இரண்டு மாத காலத்துக்குள் திருத்தங்களுடன் கூடிய விதத்தில் அதற்கு அனுமதி வழங்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அந்தக் கமிட்டி இது தொடர்பாகச் செயற்பட்டு வருவதாக எமக்குத் தெரிய வந்துள்ளது. ஆனால், அவர்கள் இரு தடவைகள் மட்டுமே சந்தித்திருப்பதாக எமது வட்டாரங்கள் எமக்குத் தெரிவிக்கின்றன. நாங்கள் நீண்டகாலமாக ஏமாற்றப்பட்டு வந்துள்ளோம்.

சபாநாயகர் எம்மிடம் தெரிவித்தவாறு அமைச்சர்கள் மனோ கணேசன் மற்றும் ரிஷாட் பதியுதின் ஆகியோர் ஜனாதிபதியிடம் தாம் இரண்டு விளக்கங்களை கேட்டிருக்கும் நிலையில், இதனை சற்று தாமதிக்குமாறு கமிட்டியிடம் கேட்டுக் கொண்டுள்ளார்கள். அந்த விளக்கங்கள் என்ன என்பதனை சபாநாயகர் அறிந்திருக்கவில்லை. அவர் தெரிவித்தவாறு அவர்கள் இப்பொழுது ஒரு முடக்க நிலையில் இருந்து வருகின்றார்கள்.


அந்த நிலையில் ஒரு கேள்வி எழுந்தது. அதாவது, புதிய சட்டம் இப்பொழுது அமுலில் இருந்து வருகின்றதா? அத்துடன், அவ்வாறு இல்லாவிட்டால் பழைய சட்டம், பொருள் கோடல் கட்டளைச் சட்டத்தின் கீழ் இன்னமும் செல்லுபடியாகக் கூடியதாக இருந்து வருகின்றதா? ஒரு பக்கத்தில் புதிய சட்டம் தேர்தல் தொகுதி நிர்ணயம் இல்லாத நிலையில் இடையில் நின்றிருக்கும் நிலையில், தேர்தல்களை நடத்துவதற்கு எமக்கு தேர்தல் தொகுதிகள் தேவை - புதிய சட்டம் செயலற்றதாக உள்ளது. அதற்கு எதிரான மறுதரப்பு வாதம், இந்தச் சட்டத்தின் கீழேயே தேர்தல் நிர்ணய செயற்பாடு ஆரம்பித்தது. ஆகவே, அதுவே இப்பொழுது செயற்படுத்தப்பட்டு வருகின்றது என்பதாகும்.

தேர்தல் நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கையை வர்த்தமானியில் வெளியிடுவதன் மூலம் சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தல்களுக்கு உசிதமான ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டிய அரசியல் யாப்பு ரீதியான கடமையை நினைவூட்டி, தேர்தல் ஆணைக்குழு ஜனாதிபதிக்குக் கடிதம் எழுதியுள்ளது. ஆனால், அவர் அக்கடிதத்துக்குப் பதிலளிக்கவில்லை. பின்னர் நாங்கள் அவரிடம் ஒரு சந்திப்பைக் கோரினோம். பழைய சட்டத்தின் கீழ் எம்மால் தேர்தல்களை நடத்த முடியுமா என்ற விடயம் குறித்து அவர் உச்ச நீதிமன்றத்தின் அபிப்பிராயத்தை கேட்டுப் பெற வேண்டுமென (அவரால் மட்டுமே அதனைச் செய்ய முடியும்) நாங்கள் ஜனாதிபதியிடம் கேட்டுக் கொண்டோம். இது தொடர்பாக சட்டமா அதிபருக்கு அறிவுறுத்தல்கள் வழங்குவதாக ஜனாதிபதி வாக்களித்திருந்தார். ஆனால், இதுவரையில் அது குறித்து எந்தத் தகவல்களும் இல்லை. இது குறித்து நாங்கள் பிரதமருக்கும் எழுதியிருந்தோம். பழைய சட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பாக கட்சித் தலைவர்களின் ஒரு கூட்டத்தைக் கூட்டுவதாக அவர் வாக்குறுதி அளித்திருந்தார். அது குறித்தும் இன்னமும் எந்தத் தகவலும் இல்லை.

தேர்தல் ஆணைக்குழுவைப் பொறுத்தவரையில் மாகாண சபை தேர்தல்களுக்கான நியமனப் பத்திரங்களைக் கோருவதற்கு ஒன்றில் அரசாங்கம் தொகுதி நிர்ணய ஆணைக்குழுவின் அறிக்கைக்கு ஒப்புதல் வழங்க வேண்டும். அப்பொழுது நாங்கள் புதிய சட்டத்தின் பிரகாரம் தேர்தலை நடத்த முடியும். அல்லது புதிய சட்டத்தை ஒழித்து, பழைய சட்டத்துக்கு உயிர் கொடுப்பதற்கான ஒரு சட்டத்தை அறிமுகம் செய்து வைக்க வேண்டும். அதுவரையில், அரசாங்கத்துக்கு மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான தேவை இருந்து வரவில்லை என்ற விடயத்தை நாங்கள் அனுமானிக்க வேண்டியுள்ளது. இந்த இரண்டையும் செய்வதற்கு அரசாங்கம் மறுத்து வரும் நிலையில் எம்மால் மாகாண சபைத் தேர்தல்களை நடத்த முடியாது.

ஒரு போதும் கனியாத பழத்துக்காக காத்துக் கொண்டிருந்த இலவு காத்த கிளி போல நாங்கள் இப்பொழுது மாகாண சபை தேர்தல்களுக்காக காத்துக் கொண்டிருக்கின்றோம். பெண்கள் மற்றும் பெண்களுக்கு வலுவூட்ட வேண்டும் என விரும்பும் நாங்கள் ஆகிய தரப்புக்களைத் தவிர எவரும் இந்தப் புதிய சட்டத்தை விரும்பவில்லை. எப்போதாவது ஒரு நாள் பழைய சட்டத்தை தொடர்ந்து பின்பற்றுவது என அரசாங்கம் முடிவு செய்வதன் மூலம் மாகாண சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான நிலைமைகள் உருவானாலும் கூட, தேவையான சட்டத் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நாடாளுமன்றத்திற்கு ஆகக்குறைந்தது ஒரு மாத காலம் தேவைப்படும். அதன் பின்னர் தயாரிப்பு வேலைகளுக்கென எமக்கு 10-12 வாரங்கள் தேவைப்படும். அந்த வேலைகள் முடிவடையும் பொழுது செப்டெம்பர் மாதம் முடிந்து விடும். எவ்வாறிருப்பினும், நவம்பர் மாதத்தில் ஜனாதிபதித் தேர்தல் நடத்தப்படுவதாக இருந்தால், அதற்கான நியமனப் பத்திரங்களைக் கோரல் மற்றும் வாக்குச்சீட்டுகளை தயாரித்தல் போன்ற பணிகள் அதற்கிடையில் குறிப்பிட முடியும்.

ஜனாதிபதித் தேர்தல், தேர்தல் ஆணையத்தினாலேயே பிரகடனம் செய்யப்படுகின்றது. வேறு எவரும் அதனைச் செய்ய முடியாது (ஜனாதிபதித் தேர்தல் திகதி டிசம்பர் 07ஆம் திகதியாக இருந்து வருகின்றது என ஜனாதிபதி சட்ட விரோதமாக அறிவித்திருந்த போதிலும்). அந்தத் தேர்தல்களை நடத்துவதற்கான சட்டங்கள் ஏற்கனவே இருந்து வருகின்றன. அவை வெற்றிகரமான விதத்தில் அமுல் செய்யப்பட்டும் உள்ளன. ஒரு தாமதத்தை ஏற்படுத்துவதற்காக அந்தச் சட்டங்களை மாற்றுவதற்கு அரசாங்கம் முன்வரும் என நான் நினைக்கவில்லை. ஒரு தாமதம் இடம்பெற்றால், தற்போதைய ஜனாதிபதி டிசம்பர் மாதத்தில் தனது பதவியை இழந்து விடுவார். மக்கள் ஆணை இல்லாத விதத்தில் அவர் தொடர்ந்து பதவியில் இருப்பதற்கான எந்தவொரு சட்டமும் இல்லை. ஜனவரி 15ஆம் திகதி அவருடைய பதவிக் காலம் முடிவடைவதற்கு முன்னர், ஜனாதிபதி ராஜினாமா செய்தால் ஜனவரி 15ஆம் திகதி வரையில் நாடாளுமன்றம் அதற்கென ஒருவரைத் தெரிவு செய்யும். ஜனாதிபதி அதனை மேற்கொள்ள மாட்டார்.




இலவு காத்த கிளியாக இருந்து வருவதற்கு பதிலாக, தேர்தல் ஆணையம் கட்டுப்பாட்டைக் கொண்டிருக்கும் ஜனாதிபதி தேர்தலுக்கான ஏற்பாடுகளை நாங்கள் மேற்கொள்வோம். மிக விரைவில் மக்களுக்கு தங்களுடைய அபிப்பிராயத்தை தெரிவிப்பதற்கான வாய்ப்பை வழங்குவோம். இனி மேலும் சமாளித்துக் கொண்டிருக்க முடியாது.

### தேர்தல் சட்டங்களை நிலைநிறுத்துதல்

மக்கள் தமது கருத்தை (தமது வாக்குகளுக்கு ஊடாக) வெளிப்படுத்திக் காட்ட வேண்டுமானால் தேர்தல் சட்டங்களையும், அவற்றின் மீறல்களையும் மூடி மறைத்து சமாளிக்க முடியாது. கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது நாங்கள் அவதானித்த பல மீறல்களை கவனத்தில் எடுப்போம். குருநாகல் மாவட்டத்தில் மட்டுமே இதற்கு எதிராக வெற்றிகரமாக வழக்குத் தொடுக்கப்பட்டு, ஒருவருடைய சிவில் உரிமைகள் பறிக்கப்பட்டிருந்தன. அதுவும் கூட மாவத்தகம தொகுதியில் தற்செயலாக இடம்பெற்றது. சுயாதீனக் குழு ஒன்றின் தலைவர் ஒருவருக்கு எதிராக ஒரு சிறு மீறல் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டிருந்தது. இதற்கான அபராதம் வெறுமனே 200 ரூபாவாக இருந்து வரும் என அவருடைய விளக்கமற்ற சட்டத்தரணி அவருக்கு தவறான விதத்தில் ஆலோசனை வழங்கியிருந்தார். நீண்டகாலம் நீதிமன்றத்தில் அலைவதைப் பார்க்கிலும் குற்றத்தை ஒப்புக்கொண்டு, இந்த அபராதத்தை செலுத்துவது எளிதானது என அவர் கூறினார். அதன் பிரகாரம், அந்தப் பிரதிநிதி அந்தக் குற்றத்தை ஏற்றுக் கொண்டு, தனது ஆசனத்தையும், ஐந்து வருட காலத்திற்கான சிவில் உரிமையையும் இழந்தார்.

யாழ்ப்பாணத்தில் இருக்கும் சட்டத்தரணிகள் பொலிஸாரை சமாளிப்பது எப்படி என அவருக்கு ஆலோசனை வழங்கியிருக்க முடியும். ஏனெனில், அவர்கள் அதனை செய்திருப்பது போல் தெரிகின்றது. மல்லாகத்தில் மாஜிஸ்ரேட் நீதவான் ஒருவரும் கூட இதே மாதிரியாக நடந்து கொண்டிருக்கின்றார். அவர் தொடர்பாக நான் நீதிச் சேவை ஆணைக்குழுவுக்கு தெரிவித்திருக்கின்றேன். ஜனாதிபதித் தேர்தலை நாங்கள் சிறப்பாக நடத்த வேண்டுமானால் பணத்துக்காக அல்லது பெரும் புள்ளிகளுக்காக நாங்கள் காரியங்களை மூடி மறைத்து, சமாளிக்க முடியாது.

### தேர்தல் பிணக்குகளை தீர்த்து வைப்பது தொடர்பான கருத்தரங்கு

மக்கள் சுதந்திரமாக தமது கருத்துக்களை முன்வைக்கக் கூடியவர்களாக இருந்து வருகின்றார்களா? இது தொடர்பாக சர்வதேச தேர்தல் சீர்திருத்த சம்மேளனம் (IFES), Australian Aid மற்றும் தேர்தல் ஆணையம் ஆகிய தரப்புக்களின் அனுசரணையுடன் ஜூன் மாதம் 12ஆம் திகதி நடத்தப்பட்ட செயலமர்வு முக்கியமான ஒரு நிகழ்வாக இருந்து வந்தது. அதில் 25 மாவட்ட அலுவலகங்களுக்கும் தலைமை தாங்கும் எமது அதிகாரிகளின் தலைமையில் ஓர் அமர்வு இடம்பெற்றது. அதில் அனைத்து விதமான கருத்துக்களும் முன்வைக்கப்பட்டன.

தேர்தல் சட்ட விதிமுறைகளை கண்காணிப்பதற்கென தொழில்நுட்பத்தின் மீது நாங்கள் செலவிட்டு வரும் பல இலட்சக்கணக்கான ரூபா நிதிகளுக்கு ஊடாக எமது அதிகாரிகளுக்கு நாங்கள் வலுவூட்டி வருகின்றோம். ஆனால், எந்தவொரு சமாளிப்பையும் மறுத்து, துணிச்சலாக எதிர்த்து நிற்கக்கூடிய எமது அதிகாரிகளின் இதயமே உண்மையான வலுவூட்டலாக இருந்து வருகின்றது. அவர்களுடைய மனக்குறைகள் பின்வருவனவற்றையும் உள்ளடக்குகின்றன:

(அ) 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தல்களின் போது உதவி ஆணையாளர் சஜித் வெல்கம சுகாதார அமைச்சின் ஊடாக கிழக்கு மாகாண முதலமைச்சர் நசீர் அஹமட் அவர்களின் செயலாளர் அசீஸ் என்பவர் எவ்வாறு 50 தொழிலாளர்

**வாக்காளர் பதிவு செயற்பாட்டுடன் இணைந்த விதத்தில் பல கிராம சேவை அலுவலர்கள் முஸ்லிம் குடியிருப்பாளர்கள் தொடர்பாக, தனியாகத் தகவல்களைச் சேகரித்து வருகின்றார்கள் என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.**

தர நியமனங்களை மேற்கொண்டிருந்தார் என்ற விடயத்தை புலன் விசாணைக்கென அனுப்பி வைத்திருந்தார். வெல்கம, அது தொடர்பான அனைத்து விபரங்களையும் அப்போதைய தேர்தல் திணைக்களத்திற்கு ஒரு கோப்பில் அனுப்பி வைத்திருந்தார். அந்த விடயம் சமாளிக்கப்பட்டதாகவும், அந்தக் கோப்பு ஒன்றில் தலைமறைவாகியதாக அல்லது புதைக்கப்பட்டதாக அவர் நம்புகின்றார்.

(ஆ) சட்டத்தை விட்டுக் கொடுத்தல்: நாடாளுமன்றம் அதியுயர் அமைப்பாக இருந்து வருகின்றது. அதே வேளையில், ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க அவர்களின் பதவிக்காலம் தொடக்கம் கட்சித் தலைவர்களுக்கு சாதகமான விதத்தில் சட்டத்தை விட்டுக் கொடுக்கும் நடைமுறை ஒரு பொதுவான வழமையாக இருந்து வந்துள்ளது. ஆகவே, சட்டம் ஒரு விடயத்திற்கு இடமளிக்கும் அதே வேளையில், தேர்தல்திணைக்களத்தினால் கூட்டப்படும் கட்சித் தலைவர்களின் கூட்டத்தில் தாம் விரும்பும் விதத்தில் சட்டத்தை தளர்த்துவதற்கான உரிமை தனக்கு இருப்பதாக தேர்தல் திணைக்களம் கூறுகின்றது. தேர்தல்களின் போது 'கட்டவுட்டுக்'களை நிறுவுவதற்கு நாடாளுமன்ற சட்டத்தின் கீழ் இடமில்லை. ஆனால், அந்தச் சட்டத்தை மீறிச் செயற்படுவதற்கு கட்சித் தலைவர்கள் குழு உடன்படுகின்றது . நாங்கள் சட்டத்தை மீறி, காலத்திற்கு காலம் அளவு மாற்றங்களுடன் கூடிய குறிப்பிட்ட சில 'கட்டவுட்டு'க்களுக்கு இடமளிக்க முடியும். அதன் பின்னர் களத்தில் இருக்கும் எமது அதிகாரிகள் ஒரு சுற்றறிக்கையை முன்வைக்கின்றார்கள். சட்டத்தை மீறும் கட்சிகள் மற்றொரு சுற்றறிக்கையை முன்வைக்கின்றன. சட்டத்தின் பிரகாரம் கட்டவுட்டுக்களுக்கு இடமில்லை. அதே விதத்தில் ஒவ்வொரு தேர்தல் பிரிவுக்கும் ஒரு கட்சி அலுவலகத்தை மட்டுமே வைத்திருக்க முடியும் என சட்டம் குறிப்பிடுகின்றது. 2015 ஜனாதிபதித் தேர்தலின் போது சட்ட விரோதமான தேர்தல் அலுவலகங்கள் அனைத்தும் உடனடியாக அகற்றப்பட வேண்டுமென கொழும்பு மாவட்ட உதவி ஆணையாளர் அச்சுதன் சிவசுப்பிரமணியம் கட்டளையிட்ட சந்தர்ப்பத்தில், அவ்விதம் கட்சி அலுவலகங்களை வைத்துக் கொள்வதற்கு கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் தமக்கு அனுமதி கிடைத்திருப்பதாக தினேஷ் குணவர்தன வாதிட்டார். அரசாங்க அதிபர் மற்றும் தேர்தல் அதிகாரியான கமல் பத்மஶ்ரீக்கு அந்தத் தீர்மானம் தெரிவிக்கப்பட்டிருக்கவில்லை. அதனால், பத்மஶ்ரீ அச்சுதனின் தீர்மானத்தை ஆதரித்து நின்றார்.

(இ) இரவு 11.00 மணியின் பின்னர் ஒலிபெருக்கிகளுடன் கூடிய விதத்தில் நடத்தப்பட்டுக் கொண்டிருந்த நாடாளுமன்றத் தேர்தல் பிரசாரக் கூட்டம் ஒன்றின் போது அப்போதைய அமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா பரிசுப் பொருட்களை பகிர்ந்தளித்துக் கொண்டிருந்தார் (அந்தக் கூட்டமும் கூட இரைச்சல் சட்டத்தை மீறும் விதத்தில் கட்சித் தலைவர்களின் மீறல்களை நியாயப்படுத்தும் ஒரு கூட்டமாக இருந்து வந்தது). அச்சந்தர்ப்பத்தில் மட்டக்களப்பு உதவி ஆணையாளர் ஆர். சசிலன் அவரை கையும் மெய்யுமாக பிடித்தார். பொலிஸார் அக்கூட்டத்தை தடுத்து நிறுத்தவில்லை. சசிலன் மற்றொரு பொலிஸ் குழுவினருடன் சென்று கூட்டத்தை தடுத்து நிறுத்தியதுடன், பரிசுப் பொருள் பொதி ஒன்றையும் பறிமுதல் செய்து, பொலிஸ் பொறுப்பதிகாரி வத்தேகெதரவிடம் ஒப்படைத்து, ஒரு முறைப்பாட்டையும் சமர்ப்பித்தார். அந்தப் பொலிஸ் அதிகாரி அரசாங்க உத்தியோகத்தர் ஒருவரை அச்சுறுத்தியதாக ஹிஸ்புல்லாவின் ஆதரவாளர்கள் மீது குற்றஞ்சாட்டியிருந்தார். தேர்தல் விதி மீறல் குற்றச்சாட்டுக்களை முன்வைக்கவில்லை. அப்படிச் செய்திருந்தால் அது ஹிஸ்புல்லாவை பிரச்சினைக்கு ஆளாக்கியிருக்க முடியும். ஒரு பொய்க் குற்றச்சாட்டை நிரூபிக்கும் பொருட்டு ஆஸ்பத்திரியில் அனுமதி பெறுமாறு அவர் சசிலனிடம் கேட்டுக்கொண்ட போதும், அந்த வேண்டுகோள் நிறைவேறவில்லை. பின்னர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இது தொடர்பாக சாட்சிகள் எவையும் இருந்து வரவில்லை என நீதிமன்றத்தில் தெரிவித்ததுடன், சசிலன் எந்தவொரு பொதியையும் தன்னிடம் தரவில்லை என்றும் கூறியிருந்தார். அதே போல தமிழ்க் காங்கிரஸ் என்னைத் தாக்குவதாக அச்சுறுத்திய நிலையில் நான் சாட்சியமளித்த சந்தர்ப்பத்தில், யாழ்ப்பாணப் பொலிஸார் ஒரு வருட காலம் அந்த வழக்கை நீதிமன்றத்தில் முன்வைக்கத் தவறினார்கள். பின்னர் விசேடபதில் நீதவான் அந்த சாட்சியத்தை தள்ளுபடி செய்வதற்கு இது இடமளித்தது. ஆகவே, சமாளிக்கும் விடயத்தில் யார் துணை நின்றார்கள் என்ற விடயம் இங்கு அப்பட்டமாகவே தெரிகின்றது.

(ஈ) 2014ஆம் ஆண்டு ஊவா மாகாண சபைத் தேர்தல்களின் போது வறட்சி நிவாரணம் என்ற பெயரில் ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூ. 2500 வழங்கப்பட்டது. இந்த விடயத்தை சமாளிப்பதற்கென, மூடிமறைப்பதற்கென முயற்சிக்கப்பட்ட பொழுது நீதிமன்றம் தலையீடு செய்ய வேண்டியிருந்தது, ஆனால், அச்சந்தர்ப்பத்தில் வாக்காளர்களுக்கு இலஞ்சம் அளிக்கும் விதத்தில் ஏற்கனவே பெருந்தொகையான பணம் விநியோகிக்கப்பட்டிருந்தது.

(உ) உதவி ஆணையாளர் சௌமி பெர்னாண்டோ 2015 ஜனாதிபதித் தேர்தலின் போது மாத்தறை நகரின் மையத்தில் அமைந்திருந்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் தேர்தல் அலுவலகம் ஒன்றை அக்றுமாறு கேட்டுக்கொண்டார். தேர்தல் வாக்களிப்புக்கு முன்னர் 48 மணித்தியால அமைதிகாக்கும் காலப் பிரிவு ஒழுங்குவிதியை அவர் எடுத்துக் காட்டியிருந்தார். ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சந்திம ராசபுத்ர அவர் மீது கடுமையாக வசைமாரி பொழிந்தார். உதவி ஆணையாளர் பண்டார மாப்பாவின் கமரா ஐக்கிய மக்கள் சுந்திரக்கூட்டமைப்புகாடையர்களினால் அடித்து நொருக்கப்பட்டது. எவரும் அவருடைய கமராவுக்கு நட்டஈடு செலுத்தவில்லை. அப்போதைய ஜனாதிபதியின் வேண்டுகோளின் பேரில், இந்த விடயம் தொடர்பாக எத்தகைய செய்தி அறிக்கைகளும் ஊடகங்களுக்கு வழங்கப்படவில்லை என கண்டி பிரதி ஆணையாளர் நாமல் தலங்கம் கூறுகிறார். ஊவா மாகாண சபைத் தேர்தலின் போது சட்ட விரோதமான ஒரு பேரணியைத் தான் தடுத்து நிறுத்திய சந்தர்ப்பத்தில், ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பைச் சேர்ந்த அனுர விதானகமகே அவரிடம் இப்படிக் கூறியதாக நாமல் குறிப்பிடுகின்றார்: "இது மஹியங்கனை, கண்டியல்ல. எம்மால் உங்களையும், உங்கள்குடும்பத்தினரையும் கொலை செய்ய முடியும்." ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் உத்தியோகத்தர்கள் எங்கள் அதிகாரிகளுக்கு எதிராக ஒரு முறைப்பாட்டை பொலிஸில் தாக்கல் செய்திருந்தனர். அதிகாரிகளின் சட்டத்தரணிகளுக்கான கட்டணங்களை அவர்களுடைய நலன்புரிச் சங்கமே செலுத்த வேண்டியிருந்தது. தனியார் சட்டத்தரணி ஒருவருக்கு ரூ. 12,000 தொகையை செலுத்துவதற்கு திணைக்களம் மறுப்புத் தெரிவித்திருந்தது. ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த நிஸ்ஸங்க, மேர்வின் பெரேராவின் மகனைத் தாக்கினார். ஆனால், பொலிஸ் எந்தக் குற்றசாட்டையும் முன்வைக்கவில்லை.

(ஊ) 48 மணி நேர மௌனம் காக்கும் ஒழுங்குவிதியை சமாளிக்கும் மற்றொரு முயற்சியாக 48 மணி நேரத்துக்கு முன்னர் எந்தவொரு பிரசாரத்தையும் நடத்துவதற்கு கட்சிகளுக்கு இடமளிக்கப்பட்டுள்ளது. அதாவது, "இன்னாருக்கு வாக்களியுங்கள்" போன்ற விதத்திலான பிரசாரங்கள். அதன் பின்னர் அமைதி காலத்தின் போது அதனை ஒரு செய்தியாக பிரசுரிக்க முடியும். இந்த விதமாக சட்டத்தை விட்டுக்கொடுப்பது, கட்சிகளுக்கு சலுகைகளை வழங்க வேண்டும் என்ற உள்நோக்கத்தை எடுத்துக் காட்டுகின்றது.

ஒரு போதும் கனியாத காய்க்காக காத்திருக்கும் இலவு காத்த கிளியைப் போல நாங்கள் காத்திருக்க வேண்டிய தேவையில்லை. எமது சட்டத்துக்கு நாங்கள் வலிமையைக் கொடுப்போம். எவரும் செய்யும் காரியங்களை மூடிமறைத்து, சமாளிக்க வேண்டிய தேவையில்லை. ஜனாதிபதித் தேர்தலில் மக்கள் தமது கருத்துக்களை தெரிவிக்கட்டும். சட்டம் பாரபட்சமற்ற விதத்தில் அமுல் செய்யப்படுவதனையும், தேர்தல் அதிகாரிகள் உண்மையான விதத்தில் வலுவூட்டப்படுவதனையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டுமென நான் ஆட்சியாளர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

தலங்கம இப்படி புலம்புகின்றார்: "நாங்கள் வாக்குரிமையைப் பாதுகாத்து நிற்கும் பொழுது, எம்மை பாதுகாப்பதற்கும் எவரும் முன்வருவதில்லை".

# ஏழரைச் சனியனும் மூர்த்தியண்ணையும்



● இரவி அருணாசலம்

எழுபத்திநாலாம் ஆண்டு வந்த ஒரு புரட்டாதிச்சனி. அண்டைக்குப் பிரதமமந்திரி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பலாலி விமானநிலையத்திலை வந்திறங்கிறா. யாழ்ப்பாணத்திலை பல்கலைக்கழகம் திறக்கப் போறாவாம். படிச்ச ஆட்களுக்கும் மேலை மேலை படிக்க விரும்பிற ஆக்களுக்கும் தானே உந்தப் பல்கலைக்கழகம்! எனக்கும் உதுக்கும் என்ன சம்பந்தம்? ஆனால் எங்கன்ரை இடத்துக்கு ஸ்ரீமா வாறா.

அவா வந்துதான் பல்கலைக்கழகம் திறக்க வேணும் எண்டு கட்டாயமில்லை. தமிழாக்களுக்குக் கொடுமை செய்தவா எப்பிடித் தமிழிடத்துக்கு வரமுடியும்? நாங்கள் ஒண்டையும் மறக்கேல்லை. தமிழாராய்ச்சி மாநாட்டிலை ஸ்ரீமாவின்ரை சிங்களப் பொலிஸ் சுட்டுத்தானே ஒன்பது தமிழாக்கள் செத்தது!

தமிழ்ப்பொடியங்களை, எங்கன்ரை அண்ணைமாரை "தமிழ்" எண்டு கதைச்சதுக்காகச் சிறையிலை தள்ளினவா. தள்ளினது மாத்திரமே, எவ்வளவு சித்திரவதை! ரேடியோவிலை "தமிழுக்கும் அமுதென்று பேர்" எண்ட பாட்டுப்போலை தமிழைப் போற்றிற ஒரு பாட்டு வரக்கூடாது.

எல்லாத்துக்கும் மேலா சிவகுமாரனை மறக்க ஏலுமே! அவர் ஆராலை செத்தவர்? ஸ்ரீமாவின்ரை சிங்களப்பொலிசாலைதானே! எதைத்தான் எங்களால மறக்க முடியும்?

பந்தம் பிடிக்கிற ஆட்களை ஏத்திக் கொண்டு ஸ்ரீமாவை வரவேற்க பலாலி விமான நிலையத்துக்கு சங்கக்கடை லொறிகள் போகுது. இந்த லொறிகள் பெரும்பாலும் வெங்காயத்தை ஏத்திக்கொண்டு கொழும்புக்குப் போய் பிறகு அங்கையிருந்து மாமூட்டை, அரிசிமூட்டை எண்டு ஏத்திக்கொண்டு வாறதுகள்.

எங்கன்ரை வீட்டுக்கு முன்னாலை உள்ள றோட்டாலைதான் காரைநகர், பண்டத்தரிப்பு, சங்கானை, மானிப்பாய் சங்கக் கடை லொறிகளெல்லாம் போகவேணும். போகுதுகள்...

எங்கன்ரை வீட்டுக்குப் பக்கத்தில தஞ்சிட்டி முந்தல். டச்சு றோட்டு வந்து எங்கன்ரை றோட்டிலை ஏறுற முச்சந்தி அது. மூலையிலஆனந்தனண்ணையின்ரை கடை. தேங்காயெண்ணை வாங்கிவரச் சொல்லி அம்மா என்னை அனுப்பினா. போனால் கடைக்கு முன்னாலை மூர்த்தியண்ணை நிக்கிறார். அவரின்ரை சண்டிக் கட்டுக்கை ஏதோ கனத்துக் கிடக்குது. "என்னண்ணை உது?" எண்டு கேட்டன். "ஓடுறா வீட்டை" எண்டு கலைச்சார். ஏதோ ஒண்டு நடக்கப்போகுது எண்டு தெரிஞ்சிட்டுது. தேங்காயெண்ணையை வாங்கிக்கொண்டு வீட்டை வந்திட்டன்.

கனநேரமில்லை, கொஞ்சநேரம்தான். லொறியொண்டு றோட்டாலை போகுது. நான் எதிர்பார்த்துக்கொண்டு நிக்கிறன். சடார்பிடாரெண்டு பலத்த சத்தம் கேட்குது...

நான் ஓடிப்போய்ப் பார்க்கிறன். டச்சு றோட்டிலை மூர்த்தியண்ணை சைக்கிளிலை வறுகிக்கொண்டு ஓடுறார். லொறியொண்டு பனைமரத்திலை அடிபட்டு நிக்குது. லொறிக்கை சனங்கள் "ஐயோ.. ஐயோ..." எண்டு குழறுதுகள்.

றைவர் லொறியாலை இறங்கிறார். கண்ணையும் நெத்தியையும் கையால பொத்தி வைச்சும் ரத்தம் ஊத்துண்ணுது. சரியா 'லக்கு'ப் பார்த்து றைவருக்கு கல்லை எறிஞ்சிருக்கிறார் மூர்த்தியண்ணை.

எங்கையிருந்தோ அப்பா சடக்கெண்டு முளைக்கிறார். "வீட்டையோடு.. வந்திட்டார் இஞ்சை.. இப்ப பொலிஸ் வரப் போகுது.. கெதியெண்டு வீட்டையோடு.." என்னைக் கலைக்கிறார் அப்பா. கோபம் கோபமா வருது அப்பாவிலை.

நான் ஒருத்தரோடையும் ஒண்டும் பறையேல்லை. எனக்குள்ளை ஒரு குறுகுறுப்பு ஓடிக்கொண்டிருக்கு. நான் அந்த வீரனைக் கண்டனான்.. நான் அந்தச் சாகசச் செயலைப் பார்த்தனான்.. வடலிகள் வளரத் தொடங்கியிட்டுது.. வயிரம்பாயத்தொடங்கியிட்டுது..

எனக்கு மூர்த்தியண்ணையின்ரை குணத்தைத் தெரியும். கல்லெறிஞ்ச அவரின்ரை கை இப்ப நடுங்கிக் கொண்டிருக்காது. மனசு படபடக்காது. றைவரின்ரை கண்ணைக் குறி பார்த்துக் கல்லெறிஞ்ச அவரின்ரை கை இப்ப காகங்களுக்குச் சோறு படைச்சுக்கொண்டிருக்கும். ஏழரைச்சனியை விரட்டிற வேலையை அவர் பார்த்துக் கொண்டிருப்பார். விரதச்சோறை அவர் ஆற அமரத் திண்டபடி இருக்கலாம். கருணைக்கிழங்குப் பிரட்டலை இன்னும் கூடப் போடச் சொல்லுறாரோ என்னவோ... ■



# முஸ்லிம்களை பயங்கரவாதிகளாக சித்திரிப்பது தவறு!

(07ஆம் பக்கத் தொடர்ச்சி)

**ரிஷாட் பதியுதீன் :** உலகலாவிய ரீதியில் பல்வேறு கலாசாரங்கள் காணப்படுகின்றன. வளர்ந்துவிட்ட தொழில்நுட்பம் உலகலாவிய ரீதியில் தொடர்புகளை அதிகரிக்கச் செய்துள்ளது. ஆகவே இலங்கையில் மாத்திரம் அரபுக் கலாசாரம் புகுந்துவிட்டதாகக் கூறுவதை ஏற்க முடியாது. அரபு நாடுகளுக்குச் சென்று வந்ததால் அவர்களுக்கு விருப்பமான ஆடையை அவர்கள் அணிகின்றார்கள். மேலைத்தேய நாடுகளுக்கு செல்பவர்கள் அந்த நாட்டு ஆடைகளை அணிவதைப்போல்தான். இதுவொரு மாற்றமே தவிர, பெரிதுபடுத்த ஒன்றுமில்லை.

**கேள்வி : கிழக்கு மாகாணத்தின் பல இடங்களில் அரபு மொழிப் பாவனையைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இதை எவ்வாறு பார்க்கின்றீர்கள்?**

**ரிஷாட் பதியுதீன் :** இலங்கையில் 3,000 பள்ளிவாசல்கள் காணப்படுகின்றன. பல கிராமங்கள் இருக்கின்றன. ஒருசில கிராமங்களில் இவ்வாறு அரபு மொழியில் பெயர்ப்பலகைகளை நிறுவியிருப்பதாக அறியமுடிகின்றது. அதற்காக எல்லா இடங்களிலும் அவ்வாறு காணப்படுவதாகக் குறிப்பிட முடியாது. அரபு எனப்படுவது ஐக்கிய நாடுகள் சபையின் ஐந்து உத்தியோகபூர்வ மொழிகளில் ஒன்று. முஸ்லிம்களின் குர்-ஆன் அரபு மொழியிலேயெ காணப்படுகின்றது. இலங்கையில் அரபு மொழி தடை செய்யப்பட்ட ஒன்றும் அல்ல. அரபு நாடுகள் ஏதாவது நன்கொடைகள் கொடுத்தால் அவர்களது பெயர்கள் சில சமயங்களில் அவ்வாறு அரபு மொழியில் வைக்கப்படும். அரபுப் பள்ளிவாசல்களில், சில அறிவிப்புகள் அரபு மொழியில் வைக்கப்பட்டுள்ளன. அவ்வளவுதான். பாரிய அளவில் அரபு மொழி பாவனை இலங்கையில்இல்லை. ஆகவே இதனைப் பாரிய பிரச்சினையாகக் பார்ப்பது நியாயமல்ல. இது சிறு பிள்ளைத்தனமான விடயம். உலகப் பயங்கரவாதத்தை முஸ்லிம்கள் மீது சுமத்துவது சரியாக அமையாது.

**கேள்வி : முஸ்லிம் மக்கள் மீதான வெறுப்புணர்வைக் குறைப்பதற்கு அல்லது இல்லாமல் செய்வதற்கு மக்கள் பிரதிநிதி என்ற வகையில் நீங்கள் எடுத்திருக்கும் நடவடிக்கைகள்? அல்லது ஆலோசனைகள்?**

**ரிஷாட் பதியுதீன் :** முஸ்லிம் மக்கள் மீது வெறுப்புணர்வை ஏற்படுத்துவதற்கு ஒருசில பேரினவாத சக்திகள் முயற்சிக்கின்றன. எனினும் அதனை தடுப்பது என்பது என்னால் மாத்திரம் இயலுமான விடயமல்ல. அனைத்து இன மக்களுடனும் இணைந்து ஐ.எஸ் தீவிரவாதம் இஸ்லாமிய மதத்துடன் தொடர்புடையது அல்ல என்ற விடயத்தை தெளிவுபடுத்த வேண்டும். அதற்கென நீண்டகால செயற்றிட்டம் அவசியம். முஸ்லிம்களையும், இஸ்லாமிய மதத்தினையும் தவறாகச் சித்திரிக்கும் நடவடிக்கைகளை கடந்த காலத்தில் அடிப்படைவாத சக்திகள் மேற்கொண்டு வந்திருக்கின்றன. அதனை மாற்றியமைக்க சில விடயங்களைச் செய்ய வேண்டியிருக்கின்றது.

**கேள்வி : அனைத்து முஸ்லிம் அமைச்சர்களும் ஒன்றாகப் பதவிகளை இராஜிநாமா செய்த விடயமானது, முஸ்லிம் மக்களை ஏனைய சமூகத்தினரிடமிருந்து பிரித்து வைக்கும் நிலைமையை உருவாக்கியுள்ளது என ஒரு குற்றச்சாட்டு சுமத்தப்படுகின்றதே?**

**ரிஷாட் பதியுதீன் :** பௌத்த மதவாதிகள் சிலர் இந்த நாட்டில் வாழும் முஸ்லிம்களை இல்லாதொழிப்பதற்கான சதியில் ஈடுபடுவதை உணர முடிகின்றது. ஆகவே அதில் இருந்து முஸ்லிம்களை பாதுகாப்பதற்கும், அதன் ஊடாக வரக்கூடிய ஆபத்துக்களை தடுப்பதற்கும், இந்த நாடு தொடர்பில் உலகளாவிய ரீதியில் ஏற்படும் அவப்பெயரை இல்லாது செய்வதற்கும், நாங்கள் பதவிகளை இராஜிநாமாச் செய்தோம். மாறாக மதவாதிகளுக்காகவோ, இனவாதிகளுக்காகவோ நாம் இராஜிநாமா செய்யவில்லை. இனவாதிகளின் வார்த்தைப்பிரயோகங்கள், செயற்பாடுகள் அப்பாவிச் சிங்கள மக்களையும் பாதிக்கும் வகையில் அமைந்திருந்தன. அதனைத் தடுப்பதே எமது நோக்கம். 21ஆம் திகதி தாக்குதல்களின் பின்னர் முஸ்லிம்களின் சொத்துக்களை அழித்தொழித்து உயிர் அச்சுறுத்தல்களையும் ஏற்படுத்தினார்கள். அதனைத் தடுக்கவே நாம் இராஜிநாமா செய்தோம். நாட்டுக்காகவும், சமுதாயத்தின் பாதுகாப்புக்காகவுமே பதவி விலகினோம். ■



# முதல் தமிழ் அமைச்சர்

■ பரபரப்பன்

பப்புவா நியூ கினியின் மத்திய அரசுத்துறை நிறுவனங்களின் அமைச்சராக தமிழ்நாட்டைப் பூர்விகமாகக் கொண்ட சசீந்திரன் முத்துவேல் பதவியேற்றுள்ளார்.

பசிபிக் பெருங்கடலில் அவுஸ்திரேலியாவுக்கும், நியூசிலாந்துக்கும் இடைப்பட்ட நீர்ப்பரப்பில் அமைந்துள்ள 16 தீவு நாடுகளில் மிகப் பெரிய நாடாக விளங்கும் பப்புவா நியூ கினியின் மத்திய அமைச்சராக பதவியேற்கும் முதல் தமிழர் மட்டுமல்ல முதல் இந்தியரும் சசீந்திரன் முத்துவேல்தான்.

மத்திய அமைச்சராக ஜூன் 7 ஆம் திகதி பதவியேற்பதற்கு முன்புவரை, இவர் அந்நாட்டிலுள்ள நியூ வெஸ்ட் பிரிட்டன் மாகாணத்தின் ஆளுநராக ஆறாண்டுகளாகப் பதவி வகித்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

சிவகாசியில் அச்சு தொழிலை செய்து வந்த குடும்பத்தில் பிறந்த சசீந்திரன், 10 ஆம் வகுப்புவரை தமிழ் வழிக் கல்வியில் பயின்றார். பிறகு, தனக்கு கிடைத்த உதவித் தொகையை பயன்படுத்தி ஆங்கில வழியில் மேல்நிலை கல்வியை முடித்தார்.

“நான் தமிழ்வழிக் கல்வியில் காட்டிய திறனை ஆங்கிலத்தில் வெளிப்படுத்த முடியாததால், மேல்நிலைக் கல்வியில் சிறந்த மதிப்பெண்ணைப் பெற முடியவில்லை. சிவகாசிக்கும் எங்களது குடும்பத்துக்கும் சம்பந்தமில்லாத விவசாயத்தில், பெரியகுளத்திலுள்ள கோவை வேளாண்மை பல்கலைக்கழக வளாகத்தில் இளங்கலை பட்டப்படிப்பு பயின்றேன்.


விவசாயத்தில் குறிப்பிடத்தக்க அளவுக்கு வேலை வாய்ப்புகள் கிடைக்காததால் மலேசியாவுக்கு சென்று இரண்டாண்டுகள் பல்பொருள் அங்காடி ஒன்றில் மேலாளராகப் பணியாற்றினேன்.

அப்போது,'பப்புவா நியூ கினி நாட்டில் வேலை வாய்ப்புஇருப்பதாகநண்பர்கள்தெரிவித்ததையடுத்து, 1999இல் அந்நாட்டிலுள்ள நியூ வெஸ்ட் பிரிட்டன் எனும் மாகாணத்துக்குச் சென்றேன்” என்று அவர் கூறுகிறார்.

2017ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப் பின்படி, 82.5 லட்சம் மக்கள் தொகையை கொண்ட பப்புவா நியூ கினியில் 850க்கும் மேற்பட்ட மொழிகள் பேசப்படுகிறது. ஆங்கிலத்தின் தாக்கம் அதிகமில்லாத இந்த நாட்டில், ஆங்கிலமும், ஜெர்மன் மொழியும் கலந்த பிஜின் எனும் மொழியே இணைப்பு மொழியாக உள்ளதாகவும், அதை மூன்றே மாதத்தில் தான் கற்றுக்கொண்டதாகவும் இவர் கூறுகிறார்.

### மூன்று தமிழர்கள் மட்டுமே வாழ்ந்த நாடு

“எனக்கு மொழியைவிட மிகவும் கடினமானதாக



இருந்தது உணவுதான். ஏனெனில், கிறித்தவ நாடான பப்புவா நியூ கினியில் அசைவம்தான் பிரதான உணவு. ஆனால் நானோ சைவத்தைக் கடைபிடிப்பவன். எப்படியோ சிரமப்பட்டு, காலத்தை கடத்திக்கொண்டிருந்த நிலையில், நான் வேலை செய்த கடையின் உரிமையாளர், கடையை விற்றுவிட்டு தனது சொந்த ஊரான சிங்கப்பூருக்கு செல்வதாகக் கூறி அதிர்ச்சி அளித்தார்.

தீவிர யோசனைகளுக்கு பிறகு, 2000 ஆம் ஆண்டு நானே அந்த கடையை குத்தகைக்கு ஏற்று நடத்துவதற்கு முடிவு செய்தேன். 2007 ஆம் ஆண்டு பப்புவா நியூ கினியின் குடியுரிமைப் பெறுவதற்குள் அம் மாகாணத்தின் பல்வேறு இடங்களிலும் பல்பொருள் அங்காடியை விரிவாக்கம் செய்தேன்” என்றார்.

2007 ஆம் ஆண்டு முதல் 2011 ஆம் ஆண்டு வரை தனது தொழிலை மென்மேலும் பெருக்குவதில் கவனம் செலுத்தியதாக கூறும் சசீந்திரன், ஊரக மற்றும் போக்குவரத்து வசதியற்ற காட்டுப் பகுதிகளில் வாழும் மக்களுக்கு தேவையான பொருட்களை அவர்களது இடத்துக்கே கொண்டுசென்று விநியோகம் செய்தது அப்பகுதி மக்களிடையே நற்பெயரை ஏற்படுத்தித் தந்ததாகக் கூறுகிறார்.

“உள்ளூர் மக்கள் பேசும் மொழி மட்டுமின்றி அவர்களது வாழ்க்கைப்போக்கையும் நான் நன்றாக புரிந்துகொண்டு அதற்கேற்றவாறு செயலாற்ற ஆரம்பித்தேன். 2007 ஆம் ஆண்டே நான் அந்நாட்டு குடியுரிமையை பெற்றிருந்தாலும், அதைவிட முக்கியமான ஒன்றான மக்களின் ஆதரவை 2010 ஆம் ஆண்டு பெற்றேன். அதாவது, 2010ஆம் ஆண்டு ஜூன் மாதம் உள்ளூர்ப் பழங்குடி மக்கள் என்னை அவர்களில் ஒருவனாக ஏற்றுக்கொண்டு பாரம்பரிய முறைப்படி விழா நடத்தினர்.

அதே சூழ்நிலையில், எனது தொழில் வளர்ச்சிக்கு வித்திட்ட பப்புவா நியூ கினி மக்களுக்கு ஏதாவது செய்ய வேண்டுமென்று நினைத்துக் கொண்டிருந்ததால், 2012ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் போட்டியிட்டு நியூ வெஸ்ட் பிரிட்டன் மாகாணத்தின் ஆளுநராகப் பதவியேற்றேன்” என்று தனது அரசியல் பிரவேசத்தை விவரிக்கிறார் சசீந்திரன் முத்துவேல்.

பப்புவா நியூ கினியில் மாகாணத்தின் ஆளுநரை மத்திய அரசு நியமிப்பதில்லை. தங்களது ஆளுநரை மக்களே நேரடியாகத் தேர்ந்தெடுக்கின்றனர். அந்த வகையில், 2012 ஆம் ஆண்டு நியூ வெஸ்ட் பிரிட்டன் மாகாணத்தின் ஆளுநராகப் பதவி ஏற்ற சசீந்திரன், அடுத்ததாக கடந்த 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும் வெற்றிபெற்று இரண்டாவது முறையாக ஆளுநரானார்.

“எண்ணெய், எரிவாயு போன்ற இயற்கை வளங்களும், நீண்ட கடல் பரப்பு, வணிகமயக்கப்படாத சுற்றுலா இடங்கள் மட்டுமின்றி பாரம்பரிய விவசாயத்தையும் 850க்கும் மேற்பட்ட மொழிகளையும் கொண்ட பப்புவா நியூ கினி நாட்டில் ஊழல் என்பது மிகப் பெரிய பிரச்சினையாக உள்ளது. இந்நிலையில், சமீபத்தில் நாட்டில் நிகழ்ந்த அரசியல் மாற்றத்தின் காரணமாக ஜேம்ஸ் மாராப்பே தலைமையில் புதிய அணி உருவாக்கப்பட்டு அவர் பிரதமராகப் பதவியேற்றார். இந்நிலையில்,மத்திய அரசின் அமைச்சரவையில் பங்கேற்பதற்கு எனக்கு கடந்த மாதம் அழைப்பு விடுக்கப்பட்டது. அதை ஏற்றுக்கொண்ட நான் கடந்த ஏழாம் திகதி பப்புவா நியூ கினியின் மத்திய பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் முதலீட்டு அமைச்சகத்தின் அமைச்சராக பதவியேற்றுக் கொண்டேன்,” என்று தான் அமைச்சாரகிய கதையைக் கூறி முடித்தார் , பப்புவா நியூ கினியின் முதல் தமிழ் அமைச்சர் சசீந்திரன் முத்துவேல். ■

# இந்த வாரம் உங்களுக்கு...

## மேடம்

குடும்ப உறுப்பினர்களுக்கிடையே கருத்து வேறுபாடு உருவாகக் கூடும். எல்லோரையும் திருப்திப்படுத்த நினைத்துக் கடும் மன உளைச்சலுக்கு ஆளாவீர்கள். அநாவசியச் செலவுகள் அதிகரிப்பதால் கையிருப்புக் கரையும். உடன்பிறந்தோருடன் மனஸ்தாபம் தோன்றும். உறவினர்களின் இல்ல விசேஷங்களில் பொறுப்புகளைச் சுமக்க நேரும். வாகனங்களை இயக்கும்போது அதிக எச்சரிக்கை தேவை. மாணவர்கள் பரீட்சை நேரத்தில் கூட்டுப் பயிற்சியில் ஈடுபடுவது நன்மை தரும். பிள்ளைகளின் செயல்கள் மனமகிழ்ச்சி தரும் வகையில் அமையும்.

## இடபம்

புதிய சொத்து வாங்குவதற்கான முயற்சி தடைபடும். குடும்பத்தில் அமைதி நிலவும். முன்பின் தெரியாத நபர்களிடம் அதிகம் பேசாது அமைதி காப்பது நல்லது. வெளிநாட்டு பயணம் செய்வதற்கான வாய்ப்பு ஏற்படும். மனதில் இருந்து வந்த குழப்பமான நிலை மாறி தெளிவான சிந்தனையோடு செயற்படுவீர்கள். நண்பர்களின் துணை தக்க சமயத்தில் கைகொடுக்கும். கடன் பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டு வர முயற்சிப்பீர்கள். தொழில் முறையில் வளைந்து கொடுக்க வேண்டி ஏற்படும்.

## மிதுனம்

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். புதிய சொத்து வாங்கும் முயற்சியில் இழுபறி காண்பீர்கள். பேசும் வார்த்தைகளில் அடுத்தவர்களுக்கு ஆலோசனை சொல்லும்படியான கருத்துக்கள் அதிகமாக இடம்பிடிக்கும். உடன்பிறந்தோருடன் கருத்து வேறுபாடு தோன்றக் கூடும். கடன் பிரச்சினைகள் தலையெடுக்கும். முன்பின் தெரியாத மனிதர்களை நம்பி புதிய முயற்சிகளில் இறங்குவதைத் தவிர்க்கவும். வாகனங்களால் ஆதாயம் உண்டாகும்.

## கடகம்

நினைத்த காரியத்தைச் செய்து முடித்து நற்பெயர் காண்பீர்கள். பேசும் வார்த்தைகளில் நிதானம் தேவை. சொல்ல நினைக்கும் கருத்துக்களை ஆணித்தரமாக வெளிப்படுத்துவீர்கள். குடும்பத்தில் அமைதி நிலவும்.

பொருளாதார நிலை ஏற்ற இறக்கத்தோடு இருந்து வரும். உடன்பிறந்தோரால் ஒரு சில சங்கடங்களை சந்திக்நேரிடும். குறைந்த விலையுள்ள பொருளை அதிக விலைக்கு வாங்கி ஏமாறும் வாய்ப்பு உண்டு. முன்பின் தெரியாத நபர்களை வாகனங்களின் பராமரிப்புச் செலவு அதிகரிக்கும்.

## சிம்மம்

நீங்கள் பேசும் வார்த்தைகள் காரிய வெற்றிக்குத் துணைபுரியும்.பொருளாதார நிலை கணிசமாக உயரும். நீண்ட நாட்களாக நிலுவையில் இருந்து வரும் கடன் தொகை வந்து சேரும். உடன்பிறப்புகளுக்கு உதவி செய்ய வேண்டியிருக்கும். மாணவர்களின் கல்வி நிலை உயர்வடைவதோடு விளையாட்டுக்களின் மீதான ஆர்வம் அதிகரிக்கும். தந்தை வழி உறவினர்களோடு இருந்து வந்த கருத்து வேறுபாடு நீங்கும். குடும்பத்தினரோடு உல்லாசப் பயணம் செல்வதற்கான வாய்ப்பு உண்டு.

## கன்னி

ஆடம்பரப் பொருட்களின் மேல் நாட்டம் செல்வதைத் தவிர்க்க இயலாது. செலவுகள் வரிசையாகக் காத்து நிற்கும். எனினும் மனமகிழ்ச்சியைத் தரும் சுபசெலவுகளாக அமையும். குடும்பத்தில் சலசலப்பும், கலகலப்பும் தடைப்பட்டுவந்த காரியங்கள் விரைவாக நடைபெறும். பிள்ளைகளின் வழியில் சுபசெலவுகளைச் சந்திப்பீர்கள். மாணவர்கள் கல்வி நிலையில் சிறிது சுணக்கத்தைக் காண நேரிடலாம். உறவினர்களால் ஒரு சில கலகங்களை சந்திக்க வேண்டியிருக்கும்.

## துலாம்

மனதில் இருக்கும் கோபதாபங்கள் பேசும் வார்த்தைகளில் வெளிப்பட்டு உங்களுக்கு அவப்பெயரைத் தோற்றுவிக்கக் கூடும். குடும்பத்தில் சிறு சலசலப்புகள் தொடர்ந்து இருந்து வரும். பொருளாதார நிலையில் ஏற்ற இறக்கங்கள் இருந்து வரும். பணம் கொடுக்கல் வாங்கலில் அதிக கவனம் தேவை.

சொத்துப்பிரச்சினைகளில் உடன்பிறந்தோருடன் கருத்து வேறுபாடு உண்டாகக் கூடும். பிள்ளைகளோடு கருத்து வேறுபாடு தோன்றும் வாய்ப்பு உண்டு. சிந்தனையில் குழப்பம் இருக்கும்.

## விருச்சிகம்

பொருளாதார வரவு நிலை அதிகரித்தாலும் அதற்கேற்ற வகையில் செலவுகளும் வரிசையில் காத்து நிற்கும். குடும்பத்தில் ஒற்றுமை நிலவும். விவாதம் செய்வதால் தீர்வு கிடைக்காது. அதிகம் பேசாது அமைதியாக இருங்கள். உடன்பிறந்தோர் உங்கள் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்படுவார்கள். மாணவர்கள் தங்கள் நிலையில் முன்னேற்றம் காணக் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். சொத்துக்கள் சார்ந்த வழக்கு விவகாரம் முடிவுக்கு வரும்.

## தனுசு

குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும். உடன்பிறந்தோருக்கு பொருளாதார ரீதியாக உதவி செய்ய வேண்டியிருக்கும். வாகனப் பராமரிப்புச் செலவு கூடும். முன்கோபத்தைக் குறைத்துக் கொள்வது உடல் நலத்துக்கு நல்லது. மாணவர்கள் தங்கள் திறமையின் மூலம் வகுப்பில் முன்னிலை பெறுவார்கள். உறவினர்களின் வழியில் ஒரு சில சங்கடங்களை சந்திப்பீர்கள். வாழ்க்கைத்துணையின் பணிகளுக்கு உதவி செய்ய வேண்டியிருக்கும்.

## மகரம்

தனிப்பட்ட முறையில் உங்களது கௌரவம் உயரும். சுற்றி நடக்கும் பிரச்சினைகளில் தலையிட்டு சுமுகத் தீர்வு காண முற்படுவீர்கள். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கலாம். குடும்பத்தினருடன் உல்லாசப் பயணம் செல்வதற்கான வாய்ப்பு உண்டு. கேளிக்கை, கொண்டாட்டங்கள், விளையாட்டு மற்றும் பொழுதுபோக்கு அம்சங்களுக்காக அதிகம் செலவழிப்பீர்கள். பணத்தேவை குறித்த கவலை ஒரு புறம் இருந்தாலும் செலவழிக்கத் தயங்கமாட்டீர்கள்.

## கும்பம்

ஆடம்பரப் பொருட்கள் சேரும். கூடுதலாக செலவு ஆனாலும் சுகமான சூழலை அனுபவிக்கத் தொடங்குவீர்கள். உறவினர்களின் வருகையால் குடும்பத்தில் கலகலப்பான சூழல் நிலவும். குடும்பத்தோடு உல்லாசப் பயணம் செல்ல திட்டமிடுவீர்கள். முக்கியமான பிரச்சினைகளில் விட்டுக் கொடுத்துச் செல்வதன் மூலம் சிறப்பான நற்பெயரை அடைவீர்கள். பொருளாதார நிலையில் முன்னேற்றம் உண்டாகும். உடன்பிறந்தோர் உங்கள் உதவியை நாடி வரக்கூடும். வாழ்க்கைத் துணை பக்க பலமாக இருப்பார்.

## மீனம்

அடுத்தவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் மனதில் உருவெடுக்கும். குடும்பத்தில் அமைதியான சூழல் நிலவும். பொருள் வரவு சீராக இருக்கும். பேசும் வார்த்தைகளில் அடுத்தவர்களுக்கு ஆலோச்னை சொல்லும்படியான கருத்துக்கள் அதிகமாக இருக்கும். செலவு அதிகரிக்கும். கடன்பிரச்சினைகள் தலைதூக்கும். மாணவர்கள் தங்கள் கல்வி நிலையில் சற்று சிரமத்தைக் காண்பார்கள். பிள்ளைகளால் ஒரு சில விவகாரங்களில் கூடுதல் செலவைச் சந்திக்க நேரலாம்.

# கப்டன் ரிபைரோ:

## யாழ்.இராச்சியத்தின் சாட்சியம்

(13 ஆம் பக்கம் தொடர்ச்சி)

போர்த்துக்கேயரின் பிடியில் இருந்த யாழ்ப்பாணத்தை மீட்க 1629 ஆம் ஆண்டு அத்தபத்து முதலியார் தலைமையிலான 5000 பேரைக் கொண்ட சிறப்புப்படையணி சமரிட்டு விடுவித்தது. பின்னர் போர்த்துக்கேயர் பத்தாயிரம் படையினருடன் சென்று யாழ்ப்பாணத்தை மீண்டும் கைப்பற்றி அத்தபத்துவின் தலையை வெட்டி யாழ்ப்பாணத்தில் ஊர்வலமாக எடுத்துச் சென்று காட்சிப்படுத்திய கதையை அறிந்திருப்போம். 13 நாட்களில் ஐயாயிரம் பேரை பலிகொடுத்த அந்தச் சமர் குறித்த ஆரம்பத் தகவல்கள் பல இந்த நூலில் இடம்பெற்றுள்ளன. இலங்கையில் போர்த்துகேய ஆட்சியை முடிவுக்கு கொண்டுவந்த அந்தச் சமர் அன்றைய "முள்ளிவாய்க்கால் சமர்" என்றே குறிப்பிடவேண்டும். அங்கு நிகழ்ந்த கொடூரமான அழிவுகளை அவர் பதிவுசெய்திருக்கிறார்.

முதன் முதலாகப் போர்த்துக்கேயர்கள் இலங்கையில் கால் பதித்த பொழுது தென்புலத்தில் இயங்கிய சிங்கள இராச்சியமாகிய கோட்டை இராச்சியத்துக்கு நிகராக வடபுலத்தில் யாழ்ப்பாண இராச்சியமும், மாந்தோட்டைச் சிற்றரசும், வன்னிமைகளும், கிழக்கில் திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய சிற்றரசுகளும் இயங்கியமையும் பதிவு செய்திருக்கிறார்.

1638–1640 காலப்பகுதியில் இலங்கையின் கரையோரப்பகுதிகளை ஆக்கிரமித்திருந்த போர்த்துகேயரின் படைகளுக்குப் பொறுப்பாக இருந்த கப்டன் ஜெனரல் அந்தோனியோ மஸ்கரஞ்ஞஸ் (Dom Antonio Mascarenhas) போர்த்துகேய படையில் உள்ள அத்தனை சிப்பாய்களும் புகைப்பிடிக்க வேண்டும் என்று கட்டளையிட்டிருந்தாகக் அவரது இந்த நூலில் குறிப்பிடுகிறார். சின்னம்மை போன்ற ஒரு குறிப்பிட்ட வகை நோய்க்கு நிவாரணமாக புகையிலை இருந்ததாகவும் யுத்தகாலங்களில் புகையிலையின் விலை அதிகரித்ததாகவும் இந்தக் காலப்பகுதியில் இருந்துதான் இலங்கையில் புகையிலைச் செய்கை இலங்கையில் ஆரம்பிக்கப் பட்டதாகவும் நம்பப்படுகிறது.

17ஆம் 18ஆம் நூற்றாண்டுகளில் இலங்கை தொடர்பாக வெளிவந்த பல நூல்களில் இலங்கையையும், இலங்கைக்குள் இருந்த பிரதேசங்களையும் குறிக்க பயன்படுத்தப்பட்ட சொற்கள் ஒன்றுக்கு ஒன்று வேறானவை. இந்த நூலில் அன்றைய ceylonI Ceilao என்று பயன்படுத்துகிறார். மொழிபெயர்ப்பாளர் பின்னர் அதனை ceylon என்றே மாற்றிவிடுகிறார்.

ரோமானியர்கள் - Serendivis, அரேபியர்கள் - Serandib, பாரசீகத்தினர் - Serendip, லத்தீனில் - Seelan, போர்த்துக்கேயர் - Ceilão, ஸ்பானியர்கள் - Ceilán, பிரான்ஸியர்- Selon, *டச்சுகாரர்* - Zeilan, Ceilan , Seylon ஆங்கிலேயர்கள் - Ceylon என்றெல்லாம் அழைத்தார்கள். இதைவிட வேறு பல சொற்களாலும் அழைத்திருக்கிறார்கள். மேற்படி நூலில் *கண்டியை* candia என்றும், சிங்களவர்களை Chingalas என்றும், யாழ்ப்பாணத்தை Jafanapatao அதுமட்டுமல்ல யாழ்ப்பாணம், திருகோணமலையில் வாழ்ந்த தமிழர்களை Bedas என்று அழைக்கிறார்.

அன்றைய காலப்பகுதியில் வெளியான நூற்றுக்கணக்கான வேறு நூல்களில் தமிழர்களை மலபார் இனத்தவர் என்றே குறிப்பிட்டிருப்பதையும் இங்கு கவனிக்க வேண்டும். இதே காலப்பகுதியில் நம் நாட்டவர்களின் வரையறுக்கப்பட்ட மிகச் சில குறிப்புகள் கூட பனையோலைகளிலும், செப்பேடுகளிலும் தான் எழுதப்பட்டுவந்திருக்கின்றன. அந்த வகையில் நமது வரலாற்றை அறிய வரலாற்றாசிரியர்கள் எல்லோரும் இத்தகைய நூல்களின் குறிப்புகளில் இருந்து தான் குறிப்புகளை எடுத்து ஆராய வேண்டியிருக்கிறது. அந்த வகையில் அவர்கள் தரும் ஊர்ப் பெயர்கள் பலவற்றை கட்டுடைத்துத் தான் அறியவேண்டியிருக்கிறது.

ரிபைரோவின் நூலில் பயன்படுத்தப்பட்டிருக்கும் பதவிகளைக் குறிக்கும் சில அடைமொழிகளை சகல மொழிபெயர்ப்புகளிலும் காணமுடிகிறது. இந்தக் கட்டுரைக்காக சகல மொழிபெயர்ப்பு பிரதிகளையும் கண்டெடுக்கமுடிந்தபோதும் மூல நூலான போர்த்துகேய நூலைப் பெற முடியவில்லை. அந்தவகையில் இந்த பதவிகளைக் குறிக்கும் அடைமொழி மூல நூலில் இருந்ததா என்று அறியமுடியவில்லை. ஆகவே இந்த விளக்கங்கள் மொழிபெயர்ப்பாளர்களின் குறிப்புகளா என்று அறிய முடியவில்லை. ஆனால் இந்த அடைமொழிகள் பிற்காலங்களில் எந்தெந்த அர்த்தங்களில் அறியப்பட்டிருக்கின்றன என்பதையும் மனதில் இருத்திக்கொள்ளுங்கள்.

Appoohaamy – அப்புஹாமி - ஜெனரல் தர அதிகாரி, Dessave - திசாவ - மாவட்ட அதிகாரி, Modiliar – முதலியார் - கேர்னல் தர அதிகாரி, Arachy – ஆராச்சி - கெப்டன் தர அதிகாரி, Lascarin – லஸ்கறின்– உள்ளூர் சிப்பாய், Topaz – டொபாஸ் - கறுப்பினத்தவர், Adigar – அதிகார் – நீதிபதி, Bandigaralla – பண்டிகறல்ல - நீதிமன்ற பொறுப்பாளர், Mareillero – மொறைலேரோ– தீர்ப்பின் நடுவர், Changaar - சங்கார் - மதகுரு, Atapata – அதபத்த - மாவட்ட அதிகாரியின் பிரதான காவலதிகாரி, Bandanezes - Soldiers from Banda – பண்டாவின் சிப்பாய்கள்.

ரிபைரோவை சகலரும் ஒரு வரலாற்றாசிரியராகவே குறிப்பதை ஏராளமான ஆய்வுகளில் காணலாம். இந்தக் கட்டுரைக்கான தேடல்களின் போது ரிபைரோவின் பெயரை பல நூல்களிலும் ஆய்வுகளிலும் வெவ்வேறு பெயர்களுடன் இருப்பதைக் காண முடிந்தது. இது ஆய்வாளர்களுக்கு பல குழப்பங்களை ஏற்படுத்த வாய்ப்புண்டு. உதாரணத்துக்கு Jean Ribeyro, John Ribeyro, João Ribeiro போன்ற குழப்பங்களைக் காணலாம்.

1639இல் திருகோணமலையையும், 1640இல் நீர்கொழும்பு காலியையும், 1655இல் களுத்துறையையும், 1656இல் கொழும்பையும் 1658இல் இறுதியாக மன்னாரையும், யாழ்ப்பாணப் பட்டினத்தையும் போர்த்துக்கேயர்கள் ஒல்லாந்தர்களிடம் இழந்தார்கள். கொழும்பைக் கைப்பற்றுவதற்காக ஒல்லாந்தர் நடத்திய இறுதிச்சண்டையில் ரிபைரோ கிரேனேட் எரிகாயங்களுக்கு உள்ளான நிலையில் எஞ்சிய படையினருடன் பின்வாங்கி கடல் மார்க்கமாக காயப்பட்ட படையினருடன் தென்னிந்திய கோவாவில் நிலைகொண்டிருந்த முகாமுக்கு அனுப்பிவைக்கப்பட்டார். காயங்கள் ஆறியதும் பின்னர் மீண்டும் யாழ்ப்பாணத்துக்கு வந்தார். போர்த்துகேயரிடம் இறுதியாக எஞ்சியிருந்த யாழ்ப்பாணத்தைத் தக்கவைப்பதற்காக நடந்த இறுதிச் சண்டையில் மோசமாக தாக்கப்பட்டு அழிக்கப்பட்டன போர்த்துகேய படைகள். போர்த்துகேய படைகள் கைதுக்குள்ளான போது காயப்பட்டிருந்த ரிபைரோவும் கைதியானார். அங்கிருந்து அன்றைய டச்சு கிழக்கிந்திய கம்பனியின் தலைமையகம் இயங்கிவந்த பட்டவியாவுக்கு (இன்றைய இந்தோனேசியாவிலுள்ள ஜகார்த்தா) கைதியாக அனுப்பட்டார். ஒரு வருடத்தின் பின்னர் ஒல்லாந்துக்கு கப்பலில் அனுப்பி வைக்கப்பட்டு 1660இல் சொந்த நாடான போர்த்துக்கலை அடைந்தார்.

போர்த்துக்கலின் அண்டை நாடான ஸ்பெயினுடனான தொடர் போரில் பல சமர்களில் தலைமை தாங்கினார். ரிபைரோவின் நீண்ட கால இராணுவச் சேவையை கௌரவிக்கும் முகமாக அவருக்கு போர்த்துகேய அரசு பிரபுப் பட்டம் வழங்கியது. தனது இறுதிக் காலத்தில் மிகுந்த சமயப் பற்றுள்ளவராக விளங்கிய ரிபைரோ 1693ம் ஆண்டு காலமானார். குறிப்பட்ட காலத்து இலங்கையின் வரலாற்றை மீட்க நமக்கெல்லாம் ரிபைரோ தந்துவிட்டு போன தகவல்கள் இன்றும் அவரின் பெயரைச் சொல்லி நிற்கின்றன. ■

# பட்டு மீதான பற்றால் உயர்ந்தவள்




(கடந்தவாரத் தொடர்ச்சி)

அடுப்பங்கரையில் உட்கார்ந்து வாய்க்கு ருசியாகச் சமைப்பதும், வீட்டு வேலைகளைச் செய்வதும், குழந்தை குட்டிகளைப் பராமரிப்பதுமாக கட்டுப்பெட்டித்தனமாக வாழ்க்கையைக் கொண்டு போகவேண்டுமென்று நினைக்கின்ற குடும்பப் பின்னணியில் பிறந்தவள் பீனா. வெளியே எங்காவது போகவேண்டுமென்றால் கூட குடும்பத்துப் பெண்கள் தனியே செல்ல முடியாது. அப்பாவோ, அண்ணனோ அல்லது கணவரோ அவர்களுடன்தான் செல்லவேண்டும். அப்படிப்பட்ட குடும்பத்தில் இருந்து வந்தவள் இன்றைக்கு கேரளாவின் டெக்ஸ்டைல் குயின். கொச்சியின் இதயம் என்று சொல்லப்படும் எம். ஜி. ரோட்டில் பிரமாண்டமாய் தலை நிமிர்ந்து நிற்கும் "சீமாட்டி சில்க்" என்கிற ஜவுளி சாம்ராஜ்யத்தின் சீ.இ.ஓ. தந்தை வைத்திருந்த ஒரு சிறிய புடவைக் கடையைத் தன்னுடைய பொறுப்பின் கீழ் கொண்டு வந்து அதை ஒரு ஜவுளிக்கடலாக மாற்றிய பீனா என்னும் பெண் திறமைசாலியை 'கேரளா மட்டுமல்ல முழு இந்தியாவே வாயைப் பிளந்து "ஆ" வென ஆச்சரியத்துடன் பார்க்கிறது. வருட வருமானம் 500 கோடி இந்திய ரூபாவாகும்.

டாக்டராகவோ அல்லது வக்கீலாகவோ வரவேண்டுமென்ற கனவோடு படித்துக்கொண்டிருந்தவள் என்ன நினைத்தாளோ தெரியாது, திடீரென்று அப்பாவின் அந்தச் சின்னப் புடவைக் கடைக்குள் வந்து அமர்ந்துகொண்டாள். ஒருநாளைக்கு எட்டு, பத்துப் பேர் மட்டுமே வந்து போகும் இந்த வியாபாரத்தை எப்படி அதிகப்படுத்தலாம் என்று இருபத்தொரு வயதான பீனா யோசிக்க ஆரம்பித்தாள். சாமத்தியச் சடங்கு, திருமணம், வளைகாப்பு, சீமந்தம் இப்படிக் குடும்பத்தில் நடக்கும் விசேஷங்களுக்கு மட்டுமல்லாது விழாக்கள், பண்டிகை என்று எல்லா வற்றிலும் முன் நிற்பது பட்டு மட்டுமே. அதனால், பார்த்ததும் சட்டென்னு அதை அள்ளும் அழகான, தரமான, புதுமையான டிஸைன்களில் பட்டுப் புடவைகளை விற்க ஆரம்பித்தால் என்ன? என்று சிந்தித்தாள். காஞ்சிபுரம் பட்டின் மீது பீனாவுக்கு தனிக் காதலே உண்டு. ஓடர் கொடுத்து பட்டைப் பெற்றுக்கொள்ள அவளுக்கு உடன்பாடில்லை. இதனால் காஞ்சிபுரம் மற்றும் அதனைச் சூழ்ந்துள்ள பட்டு நெசவு செய்யும் கிராமங்களுக்குக் கால் பதிக்க ஆரம்பித்தாள்.

சாலைகளே சரியாக இல்லாத சின்னஞ் சிறிய கிராமங்களுக்கும் துணையின்றித் தனியாக உள் நுழைந்தாள். அவர்களிடம் தன் மனதில் பொத்தி வைத்திருந்த டிசைன்களை விளக்கி, அதன் தரத்தையும் சொல்லி ஓடர் கொடுத்ததோடு ஒரு சின்னப் பழுதும் வந்திடாது பக்கத்தில் நின்று பார்த்துக்கொண்டாள். நெசவாளர்களின் வீடுகளிலேயே தங்கி அவர்களை உற்சாகப் படுத்தி தன் எண்ணத்தில் உள்ள வண்ணங்களைச் சேலைகளில் உருவாக்கினாள். பட்டுப் புடவை வெறும் அழகுக்கு மட்டுமல்ல. தங்கள் குடும்பத்துப் பெண்கள் சகல சௌபாக்கியத்துடன் வாழ வேண்டும் என்கிற நோக்கத்தோடும்தான் பட்டுப் புடவை வாங்கிக்கொடுக்கிறார்கள். அம்மனுக்கு சாத்துவதும் பட்டுத்தான். அதனால் அதை நெய்பவன் மன நிறைவோடும், மகிழ்ச்சியோடும்தான் அதைச் செய்ய வேண்டும். அந்தப் புடவையை விற்பவர் பொசிட்டிவான மன நிலையோடு அதை விற்கவேண்டும். ஒரு வியாபாரிக்கு இந்தப் பண்பு ரொம்பவே முக்கியம் என்கிற உணர்வுபூர்வமான பாடத்தையும் அந்த எளிய மக்களிடமிருந்து கற்றுக்கொண்டாள் பீனா. அவள் நினைத்தது போலவே ஆனது. பட்டுப்புடவை ஐடியா செமையாக 'க்ளிக்' ஆனது. அவளது சின்னக் கடையை பட்டு தூக்கிவிட்டது. கட்டுக் கட்டாகப் பணம் கொட்டத் தொடங்கியது.

இந்தியாவின் கேரள மாகாணத்தின் கோட்டாயம் மாவட்டத்தில் பிறந்தாள் பீனா. அவளுடைய தாத்தா வீரய்யா ரெட்டியாரால்தான்1990இல் ஆழப்புலா என்ற இடத்தில் ஆரம்பிக்கப் பட்ட ஒரு சிறிய கடைதான் சீமாட்டி ஸ்டோர். அவருடைய திறமையான நிர்வாகத்தால் பத்தனம் திட்டா, அடூர், திவனந்தபுரம் என்று பல இடங்களில் அதன் கிளைகளையும் ஆரம்பித்து தன் சகோதரர்களாலும் பிள்ளைகளாலும் நடத்திக்கொண்டிருந்தார். கோட்டயத்தில் ஆரம்பிக்கப்பட்ட சீமாட்டி ஸ்டோரின் நிர்வாகத்தை பீனாவின் அப்பா கவனித்துக்கொண்டார். அதோடு கொச்சிக் கிளையை ஆரம்பித்துக் கடுமையாக உழைத்துக்கொண்டிருந்தார். காலப்போக்கில் ஒன்றன் பின் ஒன்றாக அனைத்துக் கடைகளும் மூடப்பட்டுக் கொண்டிருந்தன. புடவை வியாபாரத்தின் கஷ்டம், நஷ்டம், நெளிவு, சுழிவுகளை அப்பா வீட்டில் உள்ள ஆண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதெல்லாம் காதைக் கூர்மையாக்கிக் கவனித்துக் கொண்டிருந்தாள் பீனா.

கோட்டயம் B.C.M. கல்லூரியில் தாவரவியல் படித்துக் கொண்டிருந்தவளிடம், அப்பா ஒருநாள் விளையாட்டாக "நீ படித்துப் பெரிதாக என்ன செய்யப்போகிறாய். எனக்கு நீ ஒரே பிள்ளைதான், பேசாமல் . என் பிஸினஸைப் பார்த்துக்கொள்ளேன்" என்றார். பரீட்சைக்கு இன்னும் மூன்று நாட்கள்தான் இருந்தன. ஒரு கணமும் யோசிக்காமல் சட்டென்று "சரி" என்றாள் பீனா. வீட்டில் இருந்த அனைவருக்கும் அதிர்ச்சி கலந்த ஆச்சரியம். இவர்களது இத்தனை வருட புடவை வியாபாரத்தில் ஆண்களைத் தவிர பெண்கள் நிர்வாகம் பார்த்ததே கிடையாது. கரண்டி பிடிக்க வேண்டிய குடும்பத்துப் பெண் கல்லாவில் உட்கார்ந்து சில்லறை எண்ணுவதா?

(தொடரும்)

**கவிஞர் பிரேம்ராஜ்,**
**கொழும்பு**

---

## முதல் பெண்கள்

# அடங்க மறுத்தவள்!



உலகின் முதல் நவீன பெண் மருத்துவர் என்ற பெருமையைப் பெற்றவர் எலிசபெத் பிளேக்வெல்.(Elizabeth Black well) இவர் *1821* ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் *3* ஆம் திகதி பிறந்தார். *1850* இல் அமெரிக்கா, இங்கிலாந்து, ஐரோப்பா எங்குமே மருத்துவக் கல்லூரிகளில் அதுவரை ஒரே ஒரு பெண்கூட அனுமதிக்கப்படவில்லை. அதனால், எலிசபெத்தின் விண்ணப்பங்கள் தொடர்ந்து நிராகரிக்கப்பட்டன. சில ஆண்டுகள் முயன்ற பின் ஜெனிவாவில் ஒரு கிராமப்புறக் கல்லூரி இடமளிக்க முன்வந்தது. மருத்துவக் கல்லூரியில் சேர்ந்தார். முதல் வகுப்பில் தேறினார். அடுத்து வேறு ஒரு பிரச்சினை முளைத்தது. 2 ஆண்டுகள் பயற்சி முடிக்காமல் மருத்துவப்பட்டம் வழங்க மறுத்தனர். அனைத்து மருத்துவமனைகளும் பயிற்சி அளிக்க மறுத்தன. பயிற்சியைப் பெறுவதற்காக பிரான்ஸ் சென்றார். பல மருத்துவமனைகள் ஏறியிறங்கினார். அவரின் முயற்சி தோல்வியிலேயே முடிந்தது. அப்போது அவர் சந்தித்த மருத்துவர் ஒருவர், " மக்கள் சேவை தானே உனக்கு முக்கியம். நீ பேசாமல் தாதியர் படிப்பைப் படி . உன் மருத்துவ ஞானமும் சேர்ந்தால் சிறந்த தாதியாக சேவை செய்ய முடியும்" என அறிவுரை கூறினார். வேறு வழியின்றி தாதியர் படிப்பை முடித்து, லண்டன் பார்த்தலோமியா மருத்துவமனையில் சில காலம் தாதியாகப் பணியாற்றினார்.

அதன்பின்னர், தாய்நாடான அமெரிக்கா திரும்பியதும் எந்த மருத்துவமனைகளையும் நாடாமல், சொந்தமாக ஒரு மருத்துவமனையை நிறுவினார். *1857* இல் அது முற்றிலும் பெண் அலுவலகர்களையே கொண்டு உலகின் பெண்களுக்கான சிறப்பு மருத்துவமனையாக உருவாகியது. அதைத் தொடர்ந்து சட்டங்களில் விரைவாக சில முன்னேற்றங்கள் ஏற்பட்டன. அதன் பலனாகப் பெண்கள் பலரும் மருத்துவரானார்கள்.

---

# பள பள சருமத்துக்கு 10 வழிகள்!



- ❒ உறங்குவதற்கு முன் முகத்தை நன்கு கழுவ வேண்டும். மேக்கப்புடன் உறங்கச் செல்லக் கூடாது. இது சருமத்தைப் பாதிப்படையச்செய்யும்.
- ❒ தினமும் ஒலிவ் எண்ணெய் பூசி முகத்தைச் சுத்தப்படுத்தலாம்.
- ❒ வெயிலில் சென்றால் 'சன்ஸ் கிறீம்' போட்டுக் கொள்ளவும். சூரியனில் இருந்து வரும் கதிர் முகத்தைக் காயப் படுத்தும். இதனாலே பல முகப் பிரச்சினைகள் வருகிறன. சன்ஸ் கிறீம் தேர்வும் முக்கியம். இதனை அருகில் உள்ள மருத்துவரைக் கேட்டு முடிவு செய்து கொள்ளுங்கள்.
- ❒ நீங்கள் உண்ணும் உணவே உங்கள் அழகைத் தீர்மானிக்கும். எனவே பழங்கள், விற்றமின் சி, சீனி அளவு குறைவாக உள்ள உணவுகளை உண்ண வேண்டும்.
- ❒ தினமும் ஏதேனும் செய்து உடலில் இருந்து வியர்வையை வெளியேற்றுவது அவசியம். இதற்கு உடற்பயிற்சி, நடைப்பயிற்சி, யோகா போன்றவற்றைச் செய்யலாம். இதனால் சருமம் பொலிவடையும்
- ❒ எட்டு மணித்தியாலம் உறங்க வேண்டும்.
- ❒ குறைந்தது ஒரு நாளுக்கு எட்டு கிளாஸ் தண்ணீர் குடிக்கவும். ஒரேஞ்ச், தர்ப்பூசணி சாப்பிடவும். இது சருமத்தை குளுமையாக வைத்திருக்கும்.
- ❒ தினமும் முகத்தை மூன்று முறையாவது வெந்நீரால் மசாஜ் செய்து கொள்ளவும். இதனால் முகத்தில் உள்ள அசிட் வகைகள் நீக்கப்பட்டு சருமம் பளபளக்கும்
- ❒ மாதம் ஒரு முறையோ, வாரம் ஒரு முறையோ 'ஸ்பா' சென்று மசாஜ்கள் செய்து கொள்ளலாம்
- ❒ மன உளைச்சல் அறவே கூடாது. மன உளைச்சல் சருமத்துக்கு கேடு. அகமே புறம். புறமே அகம் என்பதை நினைவில் கொள்ளவும்.

# காலை வாரிய பாம்பு!




வாழ்க்கை கரும்புமாதிரி என்பர், ஆரம்பத்தில் இனிக்கும் வாழ்க்கை, இடையில் கசந்து இறுதியில் இனிக்கும், இன்னும் சிலரின் வாழ்க்கையோ, ஆரம்பத்தில் இனித்து கசந்து, பின்னர் இனிதே, இனிப்பாய் இருக்கும். இன்ப துன்பங்கள் கலந்ததுதான் வாழ்க்கை, அதனை புரிந்துகொண்டோரின் வாழ்க்கை ஜிம்முனு இருக்கும்.

இருக்கும் கொஞ்ச நாளைக்கு வாழ்க்கையை மிகவும் சந்தோஷமாக வாழலாம். அதற்கு பலவழிகள் இருக்கின்றன. இந்தவாழ்க்கையில் மனைவியின் பங்கு அளப்பறியது. தடமாறாத வாழ்க்கைக்கு மனைவியின் அர்ப்பணிப்பை எளிதில் மறந்துவிடக்கூடாது.

குழந்தைகள் இருக்கும் ஒரு குடும்பத்தில், வாழ்க்கையின் இடைநடுவில், குடும்பத்தலைவன் இறந்துவிட்டால், மனைவி, அந்த குடும்பத்தை கொண்டு நடத்துவார். ஆனால், குடும்பத்தலைவியான மனைவி இடையில் இறந்துவிடும் பல குடும்பங்களில், சில குடும்பங்களின் வாழ்க்கை இடைநடுவிலேயே சீரழிந்துவிடும். இன்றேல் சின்"னாபின்னமாய் மாறிவிடும்.

குடும்பச்சண்டை ஆரோகியமான தாய் இருக்கவேண்டும். கணவன்-மனைவிக்கிடையில் வாத, விவாதங்கள் ஏற்படவேண்டும். அதுவே, விதண்டாவாதமாக இருக்ககூடாது. மனைவியின் மீது தாக்குதல்கள் நடத்தும் சம்பவங்களும், கணவனின் மீது மண்வெட்டி, கோடாரி ஆகியவற்றினால் தாக்குதல்களை நடத்தி பலியெடுத்த சம்பவங்களும்இடம்பெறாமல்இல்லை.

அதுமட்டுமன்றி, ஆட்களை வைத்து, மனைவியை பலியெடுப்பதற்கு எடுத்த முயற்சிகளும் இடம்பெறமால் இல்லை. இவற்றையெல்லாம் விடவும், தன் மனைவியும் சாகவேண்டும். தானும் மாட்டிக்கொள்ளக்கூடாது என்றளவுக்கு மிக வித்தியாசமான கொலை முயற்சியில் ஈடுபட்ட கணவன், மாட்டிக்கொண்ட சம்பவமொன்று கம்பஹாவில் இடம்பெற்றுள்ளது.

ஒரு தடவையல்ல, இரண்டு தடவைகள் இவ்வாறான முயற்சியை அக்கணவன் மேற்கொண்டுள்ளார். அதில், சமயோசிதமாக சிந்தித்த 52 வயதான மனைவி, தப்பித்துகொண்டார். ஆக மொத்ததில், இந்த கணவனின் கொடூரமான தன்மையை புரிந்துகொள்ளக்கூடியதாய் இருக்கிறது.

சரி, இனி சம்பவத்துக்கு வருவோம்-

வயோதிபமான அந்த குடுபத்தினருக்கு ஒரேயொரு பெண் பிள்ளை மட்டுமே உள்ளது. அவர்கள் இருவருக்கும் இடையில் என்னப் பிரச்சினையோ தெரியவில்லை. குடும்பங்களில் தகாத உறவுகள் தாண்டவமாடி, குடும்பத்தையே சின்னப்பின்னமாக்கிவிடும். அப்படியொன்றும் இங்கு இடம் பெறுவதற்கு வாய்ப்புகள் மிகமிக குறைவாகும். ஏனெனில், இருவருக்கும் அரை தசாப்த வயதை தாண்டிவிட்டது.

பாம்பென்றாலே படையே நடுங்கும் அதிலும் நாகப்பாம்பை தன்னுடைய மனைவியின் மீது வீசெறிந்து, மனைவியையே படுகொலை செய்வதற்கு முயன்றுள்ளார் அந்த கணவன். குடும்பத்தின் மீது பாசம் கொண்ட எவரும் அவ்வாறு செய்வதில்லை.

கம்பஹா நகருக்கு அண்மையில், 52 வயதான மனைவி, ஜூன் 30ஆம் திகதி வீட்டில் இருந்துள்ளார். இதன் போதே, அவருடைய கணவன், வீட்டுக்குள்ளிருந்தே மனைவியின் மீது விஷம் கொண்ட நாகப்பாம்பை விட்டு வீசியுள்ளார்.

கூச்சலிட்ட மனைவி, பாம்பிடமிருந்து தப்பிவிட்டார். எனினும், அதுதொடர்பில் பொலிஸார் அவசர தொலைபேசி இலக்கத்தின் ஊடாக, முறைப்பாடு செய்துள்ளார். தன்னுடைய முயற்சியை கைவிடாத, கணவன், மீண்டுமொரு தடவையும் பாம்பைப் போட்டுள்ளார்.

உடனடியாக செயற்பட்ட பொலிஸார் அந்த வீட்டுக்குள் பாம்பாட்டியுடன் சென்று சோதனைகளை முன்னெடுத்துள்ளனர். அதன்போதே, வீடொன்றின் மற்றொரு அறைக்குள் பாம்பொன்று இருப்பதை கண்டுள்ளனர். அந்தப் பாம்பு, ஏற்கெனவே, தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளதற்கான அச்சத்திலும் ஆக்குரோசித்திலும் இருந்துள்ளது.

இதில், விசேடம் என்னவென்றால், பாம்பை விற்ற பாம்பாட்டியே, அந்தப் பாம்பை பிடித்து பொலிஸாரிம் கொடுத்துள்ளார்.

விசாரணையின் போது வாய் திறக்காத பாம்பாட்டி, அந்த வீட்டுப் பெண்மணியை கண்டு, அச்சத்திலேயே உளறிவிட்டார். ஏனெனில், முதலாவது தடவையாக, பாம்பாட்டியே மறைந்திருந்து பாம்பை போட்டுள்ளார்.

அதிலிருந்து விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார், தன்னிடமே, 25 ஆயிரம் ரூபாவுக்கு பாம்பை விற்றுள்ளார். அதனை எடுத்துவந்து வீட்டின் அறையொன்றில் மறைத்துவைத்துள்ளார்.

இரண்டு முறைகளும் பாம்பு தீண்டாமல்விட்டது தனக்கு வியப்பாக இருப்பதாக பாம்பாட்டி தெரிவித்துள்ளார். ஒருவேளை, பாம்பு தீண்டியிருந்தால், பாம்பாட்டி வாயைத்திறக்காமல் விட்டிருந்தால், அதுவொரு இயற்கை மரணமாகவே, இருந்திருக்கும். மனைவியின் சமயோசிதத்தால், தன்னுயிரை காத்துக்கொண்ட மனைவி, பாம்பின் உயிரையும் காப்பாற்றியுள்ளார்.

எனினும், மனைவியின் மீது பாம்பைப்போட்ட கணவன், சைக்கிளை விட்டுவிட்டு அங்கிருந்து தப்பியோடி தலைமறைவாகிவிட்டார். அவரை கைது செய்வதற்கு பொலிஸார், கைவிலங்குடன் தயாராகவே இருக்கின்றனர்.

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்தவரம். அந்த வரத்தில், வாழும் குடுபத்தலைவன் எல்லாம், மனைவியின் மீது இதற்கு மேல், பாசமாக இருக்கவேண்டும். இல்லையேல், தன்மனைவியின் மீது போட்ட பாம்பு, ஒரு சந்தர்ப்பத்தில், தன்னையே தீண்டிவிடும்.




கேள்வி: சம்சாரத்துக்கும் மின்சாரத்துக்கும் என்ன வேற்றுமை கைப்புள்ள?

**வி.சுதன், வரணி**

பதில் - வீடு சத்தமில்லாம அமைதியா இருந்தா மின்சாரம் இல்லை எண்டு அர்த்தம். அதுவே மயான அமைதியா இருந்தா சம்சாரம் இல்லை எண்டு அர்த்தம்.

கேள்வி: கைப்புள்ள உனக்கு வீட்டுச் சாப்பாடு பிடிக்குமா? ஹோட்டல் சாப்பாடு பிடிக்குமா?

**எஸ்.கவியரசன், புத்தூர்**

பதில் - ஹோட்டல்ல ஒரு தோசைக்கு மூன்று சட்னி வைக்கிறான். வீட்ல நாலு தோசைக்கு ஒரே சட்னி. பிறகு எப்பிடி வீட்டுச் சமையல் பிடிக்கும்.

கேள்வி: கைப்புள்ள நீ கடைசியா படிச்ச புத்தகம் என்ன?

**கே.விதுர்ஷன், நவற்கிரி**

பதில் - "மனைவியை மகிழ்விப்பது எப்படி" என்ற புத்தகம். அவசர அவசரமாகப் புரட்டிப் பார்த்தேன். அதில் நகைக்கடை, புடவைக்கடை விளம்பரம் மட்டும்தான் இருந்தது.

கேள்வி: வேர்ல்ட் கப் மட்ச் நடக்குது. கிரிக்கெட் என்றால் எனக்கு உயிர். உனக்கு எந்த சந்தேகமிருந்தாலும் என்கிட்ட கேளு. அதுல நான் அத்துப்படி?

**எம்.ராகவன், கைதடி**

பதில் - ஒரு பந்தில அதிக பட்சம் எத்தனை பீல்டர் எச்சில் தடவலாம். சொல்லு பார்ப்பம்.

கேள்வி: கோயில் வாசலில் ஏன் செருப்பு அடிக்கடி காணாமல் போய்விடுகிறது? யார்தான் அதைத் திருடுகிறார்கள் கைப்புள்ள?

**கே.வைஷ்ணவி, வவுனியா**

பதில் - ஒரு செருப்பு மட்டும் காணாமல் போயிருந்தால் கண்டிப்பாக நாய் எடுத்திருக்கும். ரெண்டு செருப்புமே காணாமல் போயிருந்தால் கண்டிப்பா எந்த நாயோதான் எடுத்திருக்கும்.

கேள்வி: டி.வி.யில் வருகிற விளம்பரங்களைப் பார்த்து பொருட்கள் வாய்கலாமா?

**சி.ரஞ்சினி, மாதகல்**

பதில் - டிவியில வர்ற எண்ணெய் விளம்பரத்தைப் பார்த்திட்டு பூரி சாப்பிடணும் போல இருக்குன்னு சொன்னன். உடனே நாலு பூரி போட்டாங்க. "கல்யாண மாலை" நிகழ்ச்சி பார்த்திட்டு இன்னொரு கல்யாணம் பண்ணனும்போல இருக்குன்னு சொன்னேன். பூரிக்கட்டையாலே நாலு போட்டாங்க.

கேள்வி: என்னைக் கல்யாணம் பண்ணினால் என்னோட எல்லாத் துக்கங்களிலும் தான் பங்கொடுத்துக்கொள்வதாக என் காதலி சொல்கிறாள். ஆனா எனக்குத்தான் எந்தப் பிரச்சினையும் இல்லையே?

**வி.சாரங்கன், இணுவில்**

பதில் - நீ இன்னமும் கல்யாணம் பண்ணலத் தானே... பண்ணிப் பார் சனி பகவான் புடிச்சு வந்து உன் பனியனுக்குள்ள எப்பிடி இங்கிறார் என்று.

கேள்வி: அண்டப்புளுகு, ஆகாசப்புளுகு என்கிறார்களே. அப்படின்னா என்ன?

**கே.யோகேஸ்வரன், சாவகச்சேரி**

பதில் - "இப்பதான் உனக்கு கோல் பண்ணனும்னு நினைச்சேன் நீயே வந்திட்டே" என்று சிலர் சொல்வார்களா அதுதான்.



## சுட்டிகளுக்கு குட்டிக்கதை





# எது பலம்?

சங்கராபுரம் காட்டில் நிறைய விலங்குகள் வசித்து வந்தன. அனைத்து விலங்குகளும் ஒற்றுமையாகவும் சந்தோஷமாகவும் வாழ்ந்து வந்தன. அங்கே வசித்த மயில் மட்டும் எப்போதும் மற்றப் பறவைகள் மற்றும் விலங்குகளைப் பார்த்து தாழ்வு மனப்பான்மையுடன் இருந்தது.


யானையைப் பார்த்து பெரியதாக இருக்கிறது என்றும், மானைப் பார்த்து வேகமாக ஓடுகிறது என்றும் அது வருத்தப்பட்டுக்கொண்டிருக்கும்.

இப்படியிருக்க ஒரு மழைக்காலத்தில் அந்த மயில் அழகாக ஆட ஆரம்பித்தது. ஆடிக்கொண்டிருக்கும் போதே பாட ஆரம்பித்த மயில், தன் மோசமான குரலை எண்ணி அழத்தொடங்கியது. அப்போது அங்கு வந்த மைனா, மயிலை சமாதானப்படுத்த அருகில் சென்றது. மயில் தனது வருத்தத்தை மைனாவிடம் கூற, மைனா மயிலிடம், "நீ மிகவும் அழகாக இருக்கிறாய், அதை நினைத்து நீ சந்தோஷப்பட்டிருக்கிறாயா?" என்றது. மயில் சிறிது நேரம் மௌனமாக இருந்துவிட்டு, "இல்லை" என்று பதில் கூறியது.

இதனைக் கேட்டுச் சிரித்த மைனா "உலகில் பிறந்த ஒவ்வொருவருக்கும் எதாவது ஒரு சிறப்பும் வலிமையையும் இருக்கும், அது என்ன என்பதை உணர்ந்து அதனை மேம்படுத்தவேண்டுமே அன்றி, எது நம்மிடம் இல்லையோ அதை நினைத்து வருத்தப்படவோ தாழ்வு மனப்பான்மையுடன் இருக்கவோ கூடாது." என அறிவுரை கூறியது. தன் தவறை உணர்ந்த மயில் மைனாவுக்கு நன்றி தெரிவித்தது.

குட்டீஸ் நம்மிடம் இருக்கும் பலத்தைப் பயன்படுத்தி நமது பலவீனத்தை எதிர்கொள்ள வேண்டுமென்பதே இக்கதையின் நீதியாகும்.





## அறியலாம் வாங்கோ

# இலங்கை

- ✘ இலங்கையின் அதிகாரப்பூர்வ பெயர் எது?
  ▼ இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
- ✘ பிரிட்டிஷ் ஆட்சியின் போது சிலோன் என்ற அழைக்கப்பட்ட இலங்கை எப்போதிருந்து அதைத் துறந்தது?
  ▼ 1972
- ✘ சங்க இலக்கியத்தில் இலங்கை எவ்வாறு அழைக்கப்பட்டது?
  ▼ ஈழம்
- ✘ 2004 ஆம் ஆண்டு சுனாமியால் இலங்கையில் உயிரிழந்த மக்களின் எண்ணிக்கை என்ன?
  ▼ 35,000
- ✘ எந்த ஆண்டில் கச்சத்தீவு இலங்கையிடம் கொடுக்கப்பட்டது?
  ▼ 1974
- ✘ இலங்கையில் பாவனையில் உள்ள நாணயம் ?
  ▼ இலங்கை ரூபா (LKR)
- ✘ இலங்கையின் இணையக் குறி?
  ▼ lk
- ✘ இலங்கையின் தொலைபேசி எண் ?
  ▼ +94
- ✘ இலங்கையில் பாவனையில் உள்ள மின்னழுத்தம்?
  ▼ 230V

# உலகை அறிவோம்

1. உலகிலேயே மிகவும் பெரிய தேசியக்கொடியை உடைய நாடு எது??
   டென்மார்க்
2. கடல்களின் எஜமானி என அழைக்கப்படும் நாடு எது ?
   இங்கிலாந்து
3. காவல் துறையில் முதன்முதலில் பெண்களைச் சேர்த்த நாடு எது?
   பிரிட்டன்.
4. உலகின் மிகப்பெரிய தீவு எது?
   கிரீன்லாந்து
5. பாலைவனம் இல்லாத கண்டம் எது?
   ஐரோப்பா
6. ஆசியாவில் மிக பெரிய சேரி ?
   மும்பை தாராவி.
7. உலகில் உள்ள ஒரே ஓர் இந்து நாடு எது ?
   நேபாளம்



## ஓடி விளையாடு





# எட்டுக்கோடு

எட்டுக்கோடு சிறுமிகள் தெருக்களில் விளையாடும் விளையாட்டாகும். - ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டவாறு எட்டுத் தொடர் பெட்டியைத் தரையில் வரைந்து கொள்ள வேண்டும். போட்டியாளர்கள் முதல் பெட்டியில் 'சிப்பி' என அழைக்கப்படும் கல்லையோ அல்லது சிரட்டைத் துண்டையோ போட்டு அந்தப் பெட்டியையும் கோடுகளையும் தொடாமல் ஒற்றைக் காலில் கெந்தியபடியே கடைசிப் பெட்டி வரை சென்று திரும்பி வர வேண்டும். இவ்வாறே முதல் பெட்டியில் இருந்து எட்டுப்பெட்டி வரை விளையாட வேண்டும். இது சிறுமிகள் விளையாடும் மிக பிரபலமான விளையாட்டாகும்.

இந்த எட்டுக்கோடு விளையாட்டு 17 ஆம் நூற்றாண்டிலிருந்தே விளையாடப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், அதற்கு முன்னரே ரோமானியர்கள் இந்த விளையாட்டை விளையாடி வந்ததாகவும் குறிப்புகள் உள்ளன . அதுமட்டுமன்றி இந்த விளையாட்டுப் பற்றிய தகவல் தமிழ் சங்க இலக்கியங்களில் உள்ளதாகவும் கூறப்படுகின்றது.

(விளையாடுவோம்)





HISTOIRE
DE L'ISLE
DE
CEYLAN,
Ecrite par le Capitaine JEAN RIBEYRO, & presentée au Roy de Portugal en 1685.
Traduite du Portugais en François.
A PARIS,
Chez JEAN BOUDOT, Libraire de l'Academie Royale des Sciences, rue S. Jacques, au Soleil d'or.
M. DCCI.
Avec Approbation & Privilege.

HISTORY OF CEYLON
PRESENTED BY CAPTAIN JOHN RIBEYRO TO THE KING OF PORTUGAL, IN 1685,
TRANSLATED FROM THE PORTUGUESE, BY THE ABBE LE GRAND.
RETRANSLATED FROM THE FRENCH EDITION:
WITH
AN APPENDIX,
CONTAINING CHAPTERS ILLUSTRATIVE OF THE PAST AND PRESENT CONDITION OF THE ISLAND,
BY
GEORGE LEE
POSTMASTER-GENERAL OF CEYLON; FELLOW OF THE UNIVERSAL STATISTICAL SOCIETY OF FRANCE, &c. &c.
CEYLON:
PRINTED AT THE GOVERNMENT PRESS, COLOMBO,
MDCCCXLVII.

The Historic Tragedy
OF THE ISLAND OF
CEILÃO
DEDICATED TO HIS MOST SERENE MAJESTY
DOM PEDRO THE SECOND
KING OF PORTUGAL, OUR LORD
WRITTEN BY
CAPTAIN JOÃO RIBEIRO
TRANSLATED FROM THE PORTUGUESE BY
P. E. PIERIS
DERANIYAGALA SAMARASINHA SRIWARDHANA, LITT. D. (CANTAB.)
Fourth Edition

# கப்டன் ரிபைரோ:

## யாழ்.இராச்சியத்தின் சாட்சியம்

■என்.சரவணன்

இலங்கை பற்றிய வரலாற்றுக் குறிப்புகளை விட்டுச்சென்ற காலனித்துவகால மேற்கத் தேயவர்களில் ரொபர்ட் நொக்ஸ், ஜோன் டேவி, ஜோன் டொயிலி, சோவர்ஸ்,ஹூக் நெவில், டர்னர், கல்வின், ரிவர்ஸ், லொவி, ஹர்ஷே ாத், பால்தேயு போன்றவர்கள் வரிசையில் கெப்டன் ஜொவாவோ ரிபைரோவுக்கும் (Captain Joao Ribeiro 1622-1693) முக்கிய இடம் உண்டு. மேற்குறிப்பிட்டவர்களில் ரிபைரோ மிகவும் முதன்மையான, பழமையானவரும் கூட. இலங்கையின் வரலாற்றுப் பாட நூல்களிலும் "வரலாற்றைக் கற்பதற்கான மூலாதாரங்கள்" என்கிற பட்டியலில் இடம்பெற்றிருப்பவர். இலங்கையில் இரண்டாம் இராஜசிங்கனின் காலகட்ட போர்க் காலத்தில் போர்த்துக்கேய கப்டனாக இருந்தவர். இராணுவச் சேவையில் நாற்பது ஆண்டுகாலம் பணிபுரிந்த ரிபைரோ இலங்கையில் **1640-1658** வரையான **18** ஆண்டுகாலம் அதாவது **1658**இல் ஒல்லாந்தர் யாழ்ப் பாணத்தைக் கைப்பற்றும்வரை இருந்தார்.


தனது இறுதிக் காலத்தில் அவர் தனது நாற்பது ஆண்டுகால அனுபவத்தின் பின்னர் **1685** இல் "இலங் கைத் தீவின் வரலாற்றுத் துன்பியல்" (Fatalidade Histórica da Ilha de Ceilão) என்கிற தலைப்பில் போர்த்துகீச மொழியில் எழுதினார்.

இந்த நூலை அவர் அன்றைய போர்த்துகல் அரசர் இரண்டாம் டொம் பெற்றோவுக்கு சமர்ப்பணம் செய் திருக்கிறார்.

இலங்கையின் வரலாற்றை கற்பவர்களின் மூல நூல்களின் வரிசையில் உள்ளது இந்த நூல். மூன்று நூற் றாண்டுகளுக்கு முந்திய இந்த நூலில் வரைபடங்களை ஓவியங்களாகத் தீட்டியுள்ளார். கண்டி நகரம், கொழும்பு துறைமுகம், இலங்கையின் முழுமையான வரைபடங்களை வரைந்து அப்புத்தகத்தில் இணைத் திருக்கிறார்.

போர்த்துக்கேயர் இலங்கையை ஆக்கிரமித்த ஆண்டு **1505**. ஒன்றரை நூற்றாண்டு கால கரையோரப் பகுதி களை ஆட்சிசெய்து வந்த அவர்கள் படிப்படியாக ஒல்லாந்தரிடம் தமது ஆட்சியைப் பறிகொடுத்தனர். ரிபைரோ தனது **18**வது வயதில் இந்தியாவுக்குச் சென்ற போர்த்துகேயப் படையில் சாதாரண சிப்பா யாக **1640** மார்ச் மாதம் லிஸ்பனில் இருந்து புறப் பட்டு ஆறு மாதங்களின் பின்னர் செப்ரெம்பர் **19**ஆம் திகதி தென்னிந்தியாவில் கோவாவில் வந்திறங்கினார். அங்கிருந்து அவர் **400** சிப்பாய்களுடன் நீர்கொழும் புக்கு அனுப்பிவைக்கப்பட்டார். அப்போது போர்த் துக்கேயரிடம் இருந்து ஒல்லாந்தர் நீர்கொழும்பைக் கைப்பற்றுவதற்கான சமர் நடந்துகொண்டிருந்த காலம். அதே ஆண்டு நீர்கொழும்பை ஒல்லாந்தரிடம் இழந்தது போர்த்துக்கேயத் தரப்பு. அதிலிருந்து அடுத்த **18** ஆண்டுகள் ரிபைரோவின் வாழ்க்கை இலங் கையில் தான் அமைந்தது. தொடர்ச்சியாக பல்வேறு சமர்களில் ஈடுபட்டார் ரிபைரோ. ஒருபுறம் இரண் டாம் ராஜசிங்கனின் படைகளுடனான போர் மறு புறம் ஒல்லாந்தருடனான போர். இப்படி பல போர் களில் ரிபைரோ கலந்துகொண்டு பல தடவைகள் படுகாயங்களுக்கு உள்ளானார். சாதாரண சார்ஜன்ட் நிலையிலிருந்து அவர் கப்டன் பதவிக்குத் தரமுயர்த் தப்பட்டார். அதிலிருந்து அவர் கப்டன் ரிபைரோ என்று தான் அழைக்கப்பட்டார்.

போர்த்துக்கேயரிடம் இருந்து ஒல்லாந்தரிடம் இலங்கை பறிபோன நிலைமாறுகாலத்தின் காலக்கண் ணாடி என்றும் நேரடி சாட்சியம் என்றும் நாம் ரிபை ரோவைக் கொள்ளலாம். எனவே அவர் எழுதிய நூல் முக்கிய ஆதார நூல். ரிபைரோ நாட்டை விட்டு வெளியேறிய சில வருடங்களில் தான் ரொபர்ட் நொக்ஸ் கைது செய்யப்பட்டார். ரொபர்ட் நொக்ஸ் எழுதிய நூலுக்கும் ரிபைரோவின் நூலுக்கும் இடை யில் உள்ள பெரும்பாலான ஒற்றுமைகளால் இந்த நுல்க ளை முக்கிய வரலாற்று ஆதாரங்களாகப் பயன்படுத் துவது வழக்கம். போர்த்துகேய, ஒல்லாந்து கால வரலாற்றை ஆராய்பவர்கள் தவறவிடக்கூடாத மூன்று அக்காலத்து நூலாசிரியர்கள் கப்டன் ரிபைரோ, பிலிப்பு பால்டேயு (Phillipus Baldaeus) ரொபர்ட் நொக்ஸ்.




சிங்கள வரலாற்றாசிரியர்கள் ரிபைரோவைத் தவிர மற்ற இருவரையும் கொண்டாடுவதைக் காண முடியும். பால்டேயு, ரொபர்ட் நொக்ஸ் ஆகிய இரு வரின் நூல்களும் சிங்களத்துக்கு மொழிபெயர்க்கப் பட்டு பல பதிப்புகளைக் கண்டுவிட்டபோதும் ரிபை ரோவின் நூல் இதுவரை சிங்களத்துக்கு மொழி பெயர்க்கப்பட்டதில்லை. ரிபைரோவின் பணிக்காலம் அதிகமாக யாழ்ப்பாணத்தில் இருந்ததால் வடக்கில் செல்வாக்கு செலுத்திய தமிழ் இராச்சியங்கள் குறித்த பதிவுகளை அவர் செய்திருக்கிறார். மற்ற இருவரும் அதிகமாக கண்டி இராச்சியம் குறித்தும் சிங்களவர் கள் குறித்துமே அதிகமாகப் பதிவு செய்திருப்பது அப்படி சிங்களத்துக்கு மொழிபெயர்க்கப்படாதற்கு காரணமாக இருக்கலாம்.

ரிபைரோவின் நூல் குறித்து ஆராயத் தொடங் கியபோது கண்டெடுத்த முக்கிய சில விடயங்களை வரலாற்றை ஆய்பவர்களுக்கு வெளிப்படுத்தத் தோணிற்று.

ஆனால் அது ஏறத்தாழ ஒன்றரை நூற்றாண்டாக அச்சேறாமலேயே இருந்தது. மூல மொழியான போர்த் துக்கேய மொழியில் வெளிவருவதற்கு முன்னரே **1701**இல் இந்த நூல் பிரெஞ்சு மொழிபெயர்ப்பு (Histoire de l'isle de Ceylan, ecrite par le capitaine Jean Ribeyro) பாரிசில் வெளியானது. **1836**இல் தான் முதன் முறையாக போர்த்துக்கேய மொழியில் அது நூலாக வெளிவந்தது. பிரெஞ்சு மொழியிலிருந்து இலங்கை அரச சேவையில் பணிபுரிந்த ஜோர்ஜ் லீ எம்பவரால் ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்கப்பட்ட பிரதி MDCCCXLVII ஆம் ஆண்டு (*1847*) கொழும்பில் வெளியானது. **1890**இல் ரோயல் ஆசிய கழகம் - இலங் கைக் கிளையால் (Royal Asiatic society - CEYLON BRANCH) வெளியிடப்பட்ட சஞ்சிகையில் Captain Joao Ribeiro என்கிற கட்டுரையில் அவர் அதில் உள்ள கயமைகளை வெளியிட்டார் டொனால்ட் பெர்குசன். பிரெஞ்சுப் பிரதியானது மூல நூலை திரிபுபடுத்தி நாசப்படுத்தப்பட்ட நூல் என்பதை போட்டு உடைத்தவர் டொனால்ட் பெர்குசன்.

பீரிஸ் (P.E. Pieris) மொழிபெயர்த்த மூல நூலில் இருந்து மொழிபெயர்த்த ஆங்கிலப் பதிப்பு "Ribeiro's History of Ceilao" **1909** தான் வெளிவந்தது. அதன் பின் னர் **1948** இலும் அது "The Historic Tragedy of the Island of Ceilão" என்கிற இன்னொரு தலைப்பில் கொழும்பில் மீளவும் பதிப்பிடப்பட்டது. அந்த நூலிலும் மூல நூ லின் சிக்கல்கள் போதுமான அளவு அவிழ்க்கப்படாத தால் C.R.Boxer இது பற்றி ஆராய்வதற்காக ரிபை ரோவின் ஊருக்கு பயணித்தார். இந்த விபரங்களையும் சுவீகரித்துக்கொண்டு **1955** ஆம் ஆண்டு ஏப்ரலில் வெளியான ரோயல் ஆசிய கழக சஞ்சிகையில் சீ. ஆர்.பொக்சர் (C.R.Boxer) எழுதிய "கப்டன் ஜாவோ ரிபைரோவும் இலங்கையின் வரலாறும்" (Captain João Ribeiro and his History of Ceylon: 1622-1693) என்கிற விரி வான கட்டுரையும் கட்டுரையும் கவனிக்கத்தக்கது.

இந்த நிலையில் வரலாற்றாய்வாளர்கள் பலர் இந்த குழப்பங்களை சில சமயங்களில் அறியாத நிலை யில் பிரெஞ்சு மொழி பதிப்பையும், அதன் மொழி பெயர்ப்பான "History of Ceylon presented by captain John Ribeyro to the King of Portugal, in 1685, translated from the Portuguese, by the Abbe Le Grand" நூலைக் கையாண்டு வருவதைக் காண முடிகிறது. தற்போது ஏற்றுக்கொள்ளப்பட்ட பதிப்பு என்பது இறுதியாக பீரிஸ் (P.E. Pieris) வெளியிட்ட பிரதி தான். அந்தப் பிரதி கூட பல பதிப்புக்களைக் கடந்துவிட்டது. பீரிஸ் இலங்கையின் முக்கியமாக கவனிக் கக்கூடிய வரலாற்றாசியர். இந்த மொழிபெயர்க்கு முன்னரே அவர் **1920**ஆம் ஆண்டே போர்த்துகேயர் காலத்து இலங்கையைப் பற்றிய ஆய்வு நூலை (Ceylon and the Portuguese 1505-1658) வெளி யிட்டிருக்கிறார்.

**உள்ளடக்கத்தில் சில...**

இந்த நூலில் ரிபைரோ எழுதிய பல குறிப்புகள் ஆய்வுகளுக்கு மிகுந்த பயனுள்ளது. கொழும்பு கோட்டை உருவான கதை, கொழும்பின் உருவாக்கம் பற்றி அறிவ தென்றால் ரிபைரோவின் குறிப்புகளை கட்டாயம் அறிதல் அவசியம். கொழும்பு கோட்டையை கட்டு விக்க அக்காலப்பகுதியில் வேடுவர்களின் உழைப்பும் பெறப்பட்டதாக குறிப்பிடுவதுடன் யாழ்ப்பாணப் பட்டினத்தின் கீழ் செறிவான வனக்காடுகளாக இருந்த வன்னி, திருகோணமலைப் பகுதியையும் அதன் கடற்பகுதிகளையும் வேடுவர்களின் சாம்ராஜ்ஜிய மென்கிறார். விலங்குகளின் தோல்களை அணிந்திருந்த அவர்கள் போர்த்துக்கேயர்களின் நிறத்துக்கு சமான மாக காணப்பட்டார்களென்றும், வேட்டையாடப் படும் விலங்குகளை தேனில் துவைத்து உண்பவர்க ளென்றும், ஒரே இடத்தில் ஆறு மாதத்துக்கு மேல் தங்கியிருப்பதில்லை என்றும் குறிப்பிடுகிறார்.

**(14 ஆம் பக்கம் பார்க்க)**

(1505 முதல் 1948 வரையான யாழ்ப் பாணத்தின் வரலாற்றைக் கட்டுரையாளர் இங்கு தொடராகப் பதிவு செய்கின்றார். இங்கு கூறப்பட்டுள்ள தகவல்கள் பெரும்பாலும் ஆங்கில மூலங்களில் இருந்து பெறப்பட்டவை. தகவல்களில் வேறுபாடு காணப்படும் சந்தர்ப்பங்களில் இரண்டு தகவல்களையும் இங்கு தரவுள்ளதாகவும், அவை தொடர்பில் தான் தீர்மானம் எதனையும் எடுக்கவில்லை எனவும் கட்டுரையாளர் தெரிவித்துள்ளார்.)





# பால்டயஸ் பாதிரியாரின் டயறி

இந்தத் தீவுகளுக்கு அருகில் மேலும் சில சிறிய தீவுகள் காணப்படுகின்றன. ஆனால் ஒரு தீவிலும் நல்ல தண்ணீர் கிடையாது.நாங்கள் 1658 -1661 காலப் பகுதியில் யாழ்ப்பாணத்தில் 6,2558 பேரையும் 2,587 அடிமைகளையும் வன்னியில் 4533 பேரையும் 214 அடிமைகளையும் மன்னாரில் 3520 பேரையும் மதம் மாற்றியுள்ளோம்.

மன்னாரில் எருக்கலம்பிட்டி, தோட்டவெளி மாந்தோட்டம், போன்ற இடங்களிலும் வன்னியில் பூநகரி,பல்லவராயன்கட்டு போன்ற இடங்களிலும் எமது தேவாலயங்களை அமைத்துள்ளோம். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 10.00மணிக்கு தேவாலயத்துக்கு வருமாறு உள்ளூர் வாசிகளை அழைத்துள்ளோம். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழைமையும் காலை 10.00 மணிக்கு எமது போதகர்கள் தமிழில் ஆராதனை நடத்துவார்கள்.

இந்த இடத்தில் யாழ்ப்பாணத்தைப் பற்றியும் சொல்ல வேண்டிய தருணம் வந்து விட்டது. யாழ்ப்பாணத்தில் வெள்ளாளர்கள் ஆதிக்கம் செலுத்துகின்றனர். இவர்கள் வேட்டியை பஞ்சகச்சமாக அணிந்திருப்பார். மடியில் வெற்றிலைப் பெட்டி ஒன்று காணப்படும். அதற்குள் சிறிய கத்தி ஒன்றும் இருக்கும். தோளில் முட்டக்கூடியவாறு நீளமான தோடுகளை அணிந்திருப்பார்.



மாட்டுத்தொழவம்


யாழ்ப்பாணத்தில் சிறப்பான முறையில் வெற்றிலை, பழவகை தோட்டங்களை அமைத்து அதற்கு சிறந்த முறையில் நீர் பாய்ச்சுகின்றனர். கோடைகாலத்திலும் சிறந்த முறையில் நீர் பாய்ச்சுகின்றனர்.கால்நடைகளை சிறந்த முறையில் பராமரிக்கின்றனர். பகலில் கால்நடைகளை மேயவிட்டு இரவில் பட்டியில் அடைக்கின்றனர்.ஆனால் மாரிகாலத்தில் கால்நடைகளை பட்டியில் அடைப்பதில்லை.அயலவர்களின் தோட்டத்தை கால்நடைகள் சேதப்படுத்தினால் அதற்கு கால்நடைகளின் உரிமையாளர் நட்டஈடு வழங்க வேண்டும்.வருடத்துக்கு இருமுறை பயிர்செய்கின்றனர்.பெரும்போக அறுவடை ஜனவரி, பெப்ரவரி மாதங்களில் நடைபெறும்.இங்கு ஆடு, மாடு, எருமை என்பன காணப்படுகின்றன. சில இடங்களில் எருமைகள் கொம்புகளை சேற்றுக்குள் புதைத்தவாறு படுத்திருக்கின்றன.வெள்ளாளர்கள் மத்தை உபயோகித்து தயிரை கடைந்து வெண்ணெய் எடுக்கின்றனர். இங்குள்ள முஸ்லிம்களும் வெண்ணெயை விரும்பச் சாப்பிடுகின்றனர். காய்ச்சல், சின்னமுத்து போன்ற நோய்களுக்கு மருந்தாக மோரைப் பயன்படுத்துகின்றனர். வெள்ளாளர்கள் தமது குடும்பத்தினரை விட்டு வெளியே திருமணம் செய்வதில்லை.

### பிராமணர்கள்

பிராமணர்கள் ஒழுக்கம் நிறைந்தவர்களாக காணப்படுகின்றனர். தினமும் இரண்டு தடவைகள் குளிப்பார்கள். இவர்கள் மது அருந்துவது இல்லை. இவர்களும் தமது குடும்பத்தை விட்டு வெளியே திருமணம் செய்ய மாட்டார்கள். பஞ்சாங்கத்தை வைத்து நட்சத்திரங்களின் நிலையையும்,கிரகணங்களையும் அறிந்து கொள்வார்கள். நான் அவர்களிடம் உலகத்தின் தோற்றம் பற்றி கேட்டேன். உலகம் தோன்றி இப்பொழுது 5,425 வருடங்கள் ஆகின்றன என்று சொன்னேன். அவர்கள் இப்போது கலியுகம் 4,864ஆம் ஆண்டு என்று சொன்னார்கள். கலியுகத்துக்கு முன்னர் கிரேகாயுகம், திரேதாயுதம்,துவாபரயுகம் என மூன்று யுகங்கள் இருந்ததாகவும் கூறுகிறார்கள். அவர்களுடைய கணிப்புக்கும் எமது கணிப்புக்குமிடையே சிறு வேறுபாடு காணப்படுகிறது.(4864-5425) அவர்களது கணிப்பிடு ஒரளவுக்கு எமது கணிப்புடன் ஒத்து வருகிறது.

(வரும்)


தயிர் கடைதல்


வேலைக்குச் செல்லும் தொழிலாளர்கள்

எதிரொலி
Ethiroli
03-09 ஜூலை 2019

# 'காவி'யால் 'காலி'யான இந்தியா!

ஆடுகளன்








நடப்பு உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் எந்தவொரு தோல்வியையும் சந்திக்காது ராஜநடை போட்டுக்கொண்டிருந்த இந்திய அணிக்கு, இங்கிலாந்து அணி வைத்தது ஒரு பொறி. அந்தப் பொறி தற்போது பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த 30ஆம் திகதி பர்மிங்காமில் நடைபெற்ற 38ஆவது லீக் ஆட்டத்தில் இந்திய - இங்கிலாந்து அணிகள் மோதின. இதில், முதலில் ஆடிய இங்கிலாந்து அணி, 50 ஓவர்களில் 7 விக்கெட்டுகள் இழப்புக்கு 337 ஓட்டங்களைக் குவித்தது.

பின்னர் களமிறங்கிய இந்திய அணி, 50 ஓவர்களில் 5 விக்கெட்டுகள் இழப்புக் 306 ஓட்டங்களை மாத்திரமே சேர்த்தது. இதனால் இங்கிலாந்து அணி 31 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

இந்த ஆட்டத்தில் இந்தியா வெற்றிபெறுவதற்கான வாய்ப்புகள் இருந்தன. ஆனால், அவர்கள் அதைக்கோட்டைவிட்டுவிட்டனர் எனப் பலரும் கருத்துத் தெரிவித்து வருகின்றனர்.

எந்தவொரு போட்டியையும் மத்திய அல்லது பின் வரிசையில் களமிறங்கி தமது அணிக்குச் சாதகமாகக் களத்தை மாற்றி சிறந்த 'பினிஸசராக'ச் செயற்படும், டோனி இந்த ஆட்டத்தில் அதிரடியைக் காட்டாதமையும் முக்கிய காரணம் எனக் கூறி அவரையும் விட்டுவைக்கவில்லை.

கடைசிவரை களத்தில் நின்று (42 ஓட்டங்களுடன்) என்ன பயன்? அதிரடியாக ஆடி அணியை வெற்றிபெறச் செய்திருக்கலாம் என ஆதங்கப்பட்டுள்ளனர் இந்திய ரசிகர்கள்.

இதற்கிடையில், பாகிஸ்தான் ரசிகர்களின் பார்வையில், "இந்திய அணி இந்த ஆட்டத்தில் வேண்டுமென்றே தோற்றுள்ளது. இங்கிலாந்தை வெல்ல வைத்தால், பாகிஸ்தான் அணி அரையிறுதிக்கு முன்னேறுவதற்கான வாய்ப்பைக் குறைத்து விடலாம் என்பதால் தான் இந்தத் தோல்வி" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால், அணித்தலைவர் கோஹ்லி வேறு விதமான கருத்தைத் தெரிவித்துள்ளார்.

"இங்கிலாந்துடனான போட்டியில், நாணயச் சுழற்சி மிகவும் முக்கியமான ஒன்றாக இருந்தது. அத்துடன், முக்கியமாக பௌண்டரி எல்லையின் அளவு மிகவும் குறைவாக இருந்தது. உலகக் கிண்ணத்தில் மிகவும் குறைந்த அளவான (59 மீற்றர்) தூரமாக அது இருந்தது.

இதுபோன்ற சூழலை இந்திய அணி எதிர்கொள்வது இதுவே முதன்முறையாகும். இத்தகைய சிறிய எல்லைத் தூரத்தைக் கொண்ட பௌண்டரியில் 'ரிவர்ஸ் ஸ்வீப்', 'ஸ்வீப்' போன்ற 'ஷொட்'களால் சிக்ஸர்களை அடித்தால், சுழற்பந்துவீச்சாளர்களால் என்ன தான் செய்ய முடியும்? இதுதான் தோல்விக்கான மிக முக்கிய காரணம்." இவ்வாறு கூறியுள்ளார் கோஹ்லி.

அணித்தலைவர் கள நிலைமையைக் கூற, அரசியல் களத்தில் வேறு விதமாகக் கூறப்பட்டுள்ளது.

காஷ்மீரின் முன்னாள் முதலமைச்சர் மெகபூபா முப்தி, இந்திய அணியின் தோல்வி குறித்துக் கருத்து வெளியிட்டுள்ளார்.

"நான் இப்படிக் கூறுவது எனது மூட நம்பிக்கை என்றே கூறுங்கள். ஆனால், இந்திய அணி உலகக் கிண்ணத் தொடரில் இங்கிலாந்திடம் தோல்வி அடையக் காரணம், புதிய 'ஜெர்சி'தான் எனத் தெரிவித்துள்ளார். அவரது இந்தக் கருத்துக்கு ஆதரவாகவும், எதிர்ப்பாகவும் கருத்துகள் வெளியாகியுள்ளன.

இந்த ஆட்டத்தில் இந்திய அணியின் ஜெர்சி வழமைக்கு மாறாக நீல நிலம் குறைக்கப்பட்டு, ஒரேஞ்ச் நிறம் அதிகப்படுத்தப்பட்டிருந்தது. இது மோடி அரசின் பிரதான நிறத்தை ஒத்ததாகக் காணப்படுகிறது எனவும், இந்திய அரசியல் இந்தியக் கிரிக்கெட்டுக்குள் புகுந்துவிட்டது எனவும், இது காவிகளின் தலையீடு எனவும் கருத்துகள் வெளிவந்தவண்ணமுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஆனால், குறித்த ஆட்டத்தில் பங்கேற்ற இரு அணிகளின் சீருடைகளும் ஒரே நிறம் என்பதால் ஐ.சி.சி.யின் புதிய விதிமுறைப்படி இந்தியாவின் சீருடை நிறம் மாற்றப்பட்டது. இதன்படி இந்திய வீரர்கள் ஒரேஞ்ச், நீலம் நிறம் கலந்த புதுமையான சீருடையில் களமிறக்கப்பட்டனர் என்பது இந்தியக் கிரிக்கெட் தரப்பினரின் தகவல்.

ஆனாலும், இந்திய அணியின் ஜெர்சி' ரசியில்லாமையே இந்தத் தோல்விக்குக் காரணம் எனக் கூறுவோரும் உள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.




இப்பத்திரிகை மானிப்பாய் வீதி, உடுவில் என்ற முகவரியிலுள்ள அம்பலம் பதிப்பகத்தால், 5ஆம் கட்டை, கோப்பாய் மத்தி, கோப்பாய் என்ற முகவரியிலுள்ள நாவலர் அச்சகத்தில் 03.07.2019 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.